DEEPAM
.news

# தீபம்

கனடாப் பதிப்பு
தமிழின் முதல்தர
• வார இதழ் • தீபம் 46 • 12.10.2016





அனைத்துக் கட்சிகளதும் ஆதரவுடன்

# கனடிய பாராளுமன்றத்தில் தமிழர் மரபுத் திங்கள் பிரகடனம்!

# மக்களின் கருத்துகளுக்கு காது கொடுங்கள்!

இலங்கைக்கான புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதில் அரசாங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசு சாரா நிறுவனங்கள் சில, அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கவெனப் பெரும் பணச்செலவில் நியமிக்கப்பட்டுள்ள விற்பன்னர்கள், அமைப்புகள் என ஒரு பெரும் குழுவினரே மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இந்த முயற்சிகள் பற்றிய ஒரு இடைக்கால அறிக்கை நவம்பர் மாதம் வெளியிடப்படலாம் என ஆங்காங்கே செய்திகள் கசிந்துள்ளன. இந்த அறிக்கையுடன் கூடவே அரசியல் யாப்பின் வரைபும் வெளியிடப்படலாம் எனும் எதிர்பார்ப்புகள் இருந்தாலும் அது நடக்கப் போவதில்லை என்று தெரியவருகிறது. வரைபு அடுத்த ஆண்டில்தான் வெளியிடப்படும் சாத்தியம் உள்ளது.

அரசியல் யாப்பைப் புதிதாக வரையும் முயற்சிகள் மிகக் கவனமாகச் செய்யப்படவேண்டும். கணிசமான அளவு அந்தரங்கப் பேச்சுக்கள், இணக்க முயற்சிகள், என்பன தேவை என்பதெல்லாம் உண்மைதான். எனினும் முன்னேற்றங்கள் பற்றி மக்களுக்கு எதுவுமே தெரியாமல் இருப்பதும் பயன் தரும் சூழலாக இருக்காது.

புதிய அரசியல் யாப்பைப் பற்றிய விவாதங்களும் ஆய்வறிவு சார்ந்த வெளியீடுகளும் ஆங்கிலத்தில் கிடைக்கின்றன. தமிழிலும் சிங்களத்திலும் அவை மிகக் குறைவு. அண்மையில் பெரும் ஆரவாரங்களுடன் வெளியிடப்பட்ட மு.திருநாவுக்கரசு அவர்களது " அரசியல் யாப்பு" எனும் நுலும் பழைய அரசியல், வரலாற்றுத் தகவல்களைத் தருகிறதே அன்றிப் புதிதாக எந்தப் பார்வையையும் முன்வைக்கவில்லை. சர்வதேச அரசியலும் புவியியல்/கேந்திர அரசியலும் யாப்பு வரைவில் தாக்கம் செலுத்துவது உண்மையெனினும் அது மட்டுமே முக்கியமானது என்பதல்ல.

அரசியல் யாப்பு என்பது மக்களுக்கும் அரசுக்கும் இடையேயான ஒரு சமூக, அரசியல் ஒப்பந்தம் (Social Contract). அது பலம் மிக்கது. மக்களின் நலன், பாதுகாப்பு, உரிமைகள் என்னும் அடிப்படைகளில் கட்டி எழுப்பப்படுவது. பல்வேறு தேசிய இனங்கள் வாழ்கிற நாட்டில், இனத்துவம் பாரிய சிக்கலாக வரலாற்று ரீதியாக வளர்ந்து வந்துள்ள சூழலில் எல்லா மக்களின் உரிமைகளையும் சமத்துவமாகப் பேணுவது என்பது அரசியல் யாப்பின் மிகவும் அவசியமான கடப்பாடகும். இந்தக் கடப்பாட்டை இலங்கையின் எல்லா யாப்புகளும் மீறியமையே அடிப்படையான சிக்கல். இது பழைய கதை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை, இணைந்த வடக்குக் கிழக்கு மாநிலத்தில், முழுமையான காணி, காவல்துறை அதிகாரங்களுடன் கூடிய இணைப்பாட்சி தேவை என்பதே பேச்சுவார்த்தைகளில் பங்கெடுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகும். முஸ்லிம் மக்களுக்கான அரசியல் கோரிக்கைகள் என்ன அதனை எவ்வாறு இந்த இணைந்த வடக்குக் கிழக்குக் கட்டமைப்புக்குள் தீர்க்க முடியும் என்பது பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விவரமான நிலைப்பாடு தெரியவில்லை.

காணி அதிகாரம், காவல்துறை அதிகாரம், ஆளுனரின் அதிகாரத்தை இல்லாமல் ஒழித்தல், போன்ற விடயங்களில் பெருமளவு உடன்பாடு எட்டப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. வடக்கையும் கிழக்கையும் இணைப்பது தொடர்பாகப் புதிய சிந்தனைகளும் புதிய வழிமுறைகளும் புதிய உடன்பாடுகளும் எட்டப்பட வேண்டும் என்பதனாலேயே சம்பந்தப்பட்டவர்கள் மௌனம் காக்கிறார்கள் எனத் தெரிய வருகிறது.

இந்த அம்சங்களை விட முக்கியமான இன்னொரு விடயமும் உண்டு. புத்த மதத்துக்கு அதிமுக்கிய இடம் (foremost) அரசியல் யாப்பில் வழங்கப்படாமல் எல்லா மதங்களும் சரி சமனாக நடத்தப்படுவதும், அரசு மதச் சார்பற்ற அரசாக இருக்க வேண்டும் என்பதும் முக்கியமானதாகும். எனினும் புத்த மதத்துக்கு அதிமுக்கிய இடம் வழங்கப்படும் என மகாநாயக்க தேரர்கள் முன்னிலையில் பிரதமர் தெரிவித்துள்ளார். இதற்கு எல்லாக் கட்சியினரும் ஆதரவு எனவும் தெரிவித்துள்ளார். இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குரல் தர வல்ல தலைவரான சுமந்திரன் மறுத்துள்ளார்.

1972 யாப்பு புத்தத்துக்கு அதிமுக்கிய இடம் வழங்கியது. பிற்பாடு ஜே.ஆர். ஜயவர்த்தன கொண்டுவந்த அரசியல் யாப்பில் புத்தமதம் என்பதுடன் புத்தசாசனமும் சேர்க்கப்பட்டது. புத்தசாசனம் என்பது, புத்த சங்கங்கள், விகாரைகள், அவற்றின் சொத்துக்கள், நிலங்கள், பிக்குகள் என எல்லாவற்றையும் உள்ளடக்கியது. எனவே இப்போது நடைமுறையில் உள்ள யாப்பின்படி இலங்கை முழுவதும் எல்லாப் புத்த விகாரைகள், அவற்றின் நிலங்கள், முன்பு பௌத்தர்கள் இருந்ததாக அரசாங்கம் பிரகடனம் செய்யும் இடங்கள் எல்லாமே முன்னுரிமையுடன் பாதுகாக்கப்படவேண்டும் என்பது மட்டுமல்ல அவை பௌத்தர்களுக்குச் சொந்தமானவை என உறுதி செய்யப்படவும் வேண்டும். அரசியல் யாப்பின் இந்த உறுப்புரைதான் தமிழ் மக்கள் வாழும் இடங்களெல்லாம் சிங்களபௌத்த குடியேற்றங்கள் நிறுவப்படுவதையும் பேணப்படுவதையும் அரசியல் யாப்பின் அடிப்படையில் பேணுகிற அதிகாரத்தை அரசுக்கு வழங்குகிறது.

புதிய யாப்பிலும் இது இருக்குமானால், தமிழ் மக்கள் மெல்ல மெல்லக் கடலுக்குள்தான் ஆழ்ந்துபோக நேரிடும். இலங்கையின் அரசியல் யாப்புகளில் தனிமனித உரிமைகள், உயிர் வாழ்வதற்கான உரிமை, மக்களின் சமூக, பொருளாதார உரிமைகள் எவையுமே உள்ளடக்கப்படவில்லை. இவை திட்டவட்டமான முறையில் உள்ளடக்கப்படாத ஒரு யாப்பால் மக்களுக்கு எந்தப் பயனும் இல்லை.

புதிய அரசியல் யாப்புக் கொண்டுவர இருக்கும் தேர்தல் முறை/தொகுதி மாற்றங்கள் மலையகத் தமிழ் மக்களைப் பெரிதும் பாதிக்கும். இது பற்றித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. இது ஒரு முக்கியமான அதே நேரம் மிகுந்த ஆபத்தான தருணம். எனவே இயலுமானவரை மக்களது கருத்துக்களையும் செவி மடுத்தல் எல்லா அரசியல் தரப்பினருக்கும் கட்டாயமாகும். அது ஒன்று மட்டுமே நிரந்தரமான தீர்வை நோக்கிச் செல்லும் மார்க்கமாகும்.!

2015 - 2016 புதிப்புரிமை தீபம் கனடா.
ஆக்கங்களின் கருத்துக்களுக்குப் படைத்தோரே பொறுப்பு. பத்திரிகையில் வெளியாகும் செய்திகள், ஆக்கங்கள், படங்கள் மற்றும் கருத்துக்கள் யாவும் தீபம் கனடாவுக்குச் சொந்தமானவை. படியெடுத்தல் மீள்பதிப்புச் செய்தல் மற்றும் தழுவுதலுக்கு எழுத்து வாயிலான அனுமதி பெற வேண்டும்.

Deepam Canada
3-2094 Lawrence Ave.E
Toronto on M1R 2Z6 Canada
416.240.9727
info@deepam.news editor@deepam.news www.deepam.news

# தமிழ் மரபுத் திங்கள்: கனடியத் தமிழர் பேரவை அறிக்கை!

**Canadian Tamil Congress**
**கனடியத் தமிழர் பேரவை**
**Congrès Tamoul Canadien**
*"Voice of Tamil Canadians"*

கனடா மத்திய அரசு ஜனவரி மாதத்தை கனடா முழுவதுக்குமான தமிழ் மரபுத் திங்களாகப் பிரகடனம் செய்ததை வரவேற்று கனடிய தமிழர் பேரவை வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

ஜனவரி மாதத்தை கனடா முழுவதுக்குமான தமிழ் மரபுத் திங்களாகப் பிரகடனம் செய்வதற்கு கனடா நாடாளுமன்றத்தில் ஒன்றுபட்டு நின்ற அனைத்துக் கட்சிகளுக்கும் கனடிய தமிழர் பேரவை தன் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

"தமிழ்க் கனடியர்கள் கனடிய சமூகத்திற்குத் ஆற்றியுள்ள பங்களிப்பையும், தமிழ் மொழி மற்றும் தமிழ்க் கலாச்சாரத்தின் செழுமையையும், நமது எதிர்கால சந்ததியினர் தமிழ்ப் பாரம்பரியத்தின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்வதற்கான தேவையையும் ஏற்றுக்கொண்டு, ஆண்டுதோறும் வரும் தைத் திங்களை தமிழ் மரபுத் திங்களாக கனடிய அரசாங்கம் பிரடனம் செய்ய வேண்டுமென்று இந்த நாடாளுமன்றம் கருதுகிறது". என்ற இந்த வார்த்தைகளோடு ஸ்காபரோ ரூஜ் பார்க் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் நாடாளுமன்றத்தில் தனி உறுப்பினர் பிரேரணையை மே 2016இல் முன்மொழிந்திருந்தார்.

இன்று அப் பிரேரணை (M-24) அனைத்து கட்சிகளின் ஆதரவுடன் ஒவ்வொரு ஜனவரி மாதமும் தமிழ் மரபுத் திங்கள் என்ற பிரகடனமாக கனடிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதையிட்டு நாம் பெரு மகிழ்ச்சியடைகிறோம். கனடா முழுவதும் நாடளாவிய அளவில் எமது தமிழ் மரபு, மொழி, வரலாறு ஆகியவற்றைக் கனடியர்கள் கொண்டாட இது வழியமைத்திருக்கிறது.

கனடிய தமிழர் பேரவையானது, நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்த சங்கரி அவர்களுக்கும், இந்த பிரேரணையை ஆதரித்துப் பேசிய அனைத்துக் கட்சிகளினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், இன்று சமூகமளித்திருந்தன் மூலம் இந்தப் பிரேரணையை ஆதரித்த ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தனது நன்றிகளைத் தெரிவிக்கிறது.

இந்தப் பிரேரணையை நிறைவேற்றியதன் மூலம் எமது மாபெரும் நாடு, கனடாவின் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார கட்டமைப்பிற்கு தமிழ்க் கனடியர்கள் செய்துள்ள பங்களிப்பை அங்கீகரித்துள்ளது. இனிவரும் காலங்களில் ஒவ்வொரு ஜனவரி மாதத்தையும் நாம், கனடா முழுவதுமுள்ள சமூகங்களுக்கு தமிழ்க் கனடியர்கள் ஆற்றிய, தொடர்ந்து ஆற்றிவரும் பங்களிப்பை நினைவில் வைக்கவும், கொண்டாடவும், எதிர்கால சந்ததிக்கு அறியவைக்கவும் ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தலாம். ஏற்கனவே ரொறன்ரோ கல்விச் சபை, ரொறன்ரோ பெருநகர நகரசபைகள் என்பவற்றுடன் ஒன்ராறியோ மாகாணமும் ஜனவரியை "தமிழ் மரபுத் திங்கள்" எனப் பிரகடனப்படுத்தியுள்ளன.

தமிழ் மக்கள் கனடாவிற்குக் குடிபெயர்வதை 1950களியேயே ஆரம்பித்து விட்டனர். தமிழருக்கெதிரான 1983 ஜூலை கலவரங்களின்பின் அது மேலும் தீவிரமடைந்தது. தமிழ்க் கனடியர்கள் தம் வருகையின் பின்னர் எத்தனையோ தடைகளையும் தாண்டி, கனடாவின் வளர்ச்சி, செழிப்பு என்பனவற்றிற்கு குறிப்பிடத் தக்க அளவில் பங்களிப்புக்களைச் செய்து வருகிறார்கள். உலகளாவிய அளவில் மிக உயர்ந்த மட்டத்தில் சகிப்புத்தன்மை மிக்கதொரு நாடாக கனடா தர வரிசைப்படுத்தப்படுவதற்கான காரணத்தை இப் பிரேரணை அங்கீகரிக்கப்பட்டமை மீண்டும் ஒரு முறை காட்டியிருக்கிறது.

இவ் அறிக்கை குறித்து மேலதிக விபரங்களை பெற, கனடிய தமிழர் பேரவையின் பேச்சாளர் டேவிட் பூபாலபிள்ளை அவர்களை 9057817034 என்ற தொலைபேசி மூலமாகவும் david @ canadiantamilcongress.ca என்ற மின்னஞ்சல் மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்.

# ஈராக்: தாக்குதலில் ஈடுபடும் கனடியத் துருப்புக்கள்!

ஈராக்கிலுள்ள கனேடிய துருப்புக்கள் என்ன செய்கின்றன? அவை குர்திஸ் படையினர்க்குப் பயிற்சி அளிக்கவும் அலோசனை தரவும் வழிகாட்டவும் மட்டுமென்றே அங்கு அனுப்பப்பட்டன. லிபரல் அரசாங்கம், முன்னைய அரசாங்கம் வழங்கியிருந்த கனடிய குண்டு வீச்சு விமானங்களைத் திருப்பி அழைத்து, அதற்குப் பதிலாக தரைப்படையின் அளவை அதிகரித்து பயிற்சிக்கும் வழிகாட்டலுக்கும் மட்டும் என்று சொல்லி அங்கு அனுப்பி வைத்தது.



ஆனால், கடந்த வியாழனன்று, அங்கிருந்து கிடைத்த தகவல்களின் படி, கடந்த சில மாதங்களாக,வடக்கு ஈராக்கிலுள்ள கனடியப்படைகள் நேரடியாக சண்டையில் ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது. Daesh அல்லது ISIS போராளிகளுக்கு எதிரான தாக்குதலில் கனடிய பயிற்சியாளர்கள் முன்ன்ணியில் நின்று யுத்தத்தில் பங்கு கொள்வதை 'தவிர்க்க முடியவில்லை' என்று தெரிவிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட 200 கனடிய துருப்பினர் அங்கு நிலைகொண்டுள்ளனர். இவர்களது உத்தியோக பூர்வ பணி குர்டிஸ் துருப்புகளுக்கு பயுற்சி அளிப்பது மட்டுமே. ஆனால். அங்குள்ள பிரிகேடியர் ஜெனெரல், பீற்றர் டோவ் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், ' நிலமை மாறிவிட்டது, நாம் முன்னணியில் அதிகம் செயற்பட வேண்டியுள்ளது... எமக்கிருக்கும் ஆபத்தின் அளவு இப்போது அதிகரித்துள்ளது.' என்று தெரிவிக்கிறார்.

உண்மையில் யுத்தம் நடக்கும் ஒரு இடத்தில் முன்னணிப் படைக்கு பயிற்சியும் ஆலோசனையும் மட்டும் வழங்குவதில் ஒரு நடைமுறைச் சிக்கல் இருக்கிறது. இதனால் சில வேளைகளில் பங்குபற்றலும் கூட தவிர்க்க முடியாமல் போய்விடுகிறது. ஆனால் அப்படிச் செய்யும்போது சில வேளைகளில் தாக்குதலுக்கு உள்ளாவதற்கு வாய்ப்பும் உருவாகிறது. அப்படியான சந்தர்ப்பத்தில் திருப்பித் தாக்குதலும் தவிர்க்க முடியாமல் வந்துவிடுகிறது.

ஆனால் அவர்கள் அங்கு அனுப்பப் பட்டது பயிற்சி அளிக்கவே. இருந்தும் அவர்கள் தவிர்க்கமுடியாமல் யுத்தத்தில் ஈடுபட வேண்டி வருகிறது. லிபரல் கட்சி அரசாங்கம் இதைதான் எதிர்பார்க்கவில்லை என்று சொல்லப் போகிறதா? வழங்கப்பட்ட அனுமதியை மீறி யுத்தத்தில் ஈடுபட்டதற்காக அங்குள்ள படையணிப் பொறுப்பாளர் விசாரிக்கப் படுவாரா? அல்லது யுத்தத்தை தொடரும்படி அனுமதிக்கப் போகிறதா அல்லது அவர்களையும் திருப்பி அழைக்கப் போகிறதா?

என்ன செய்யப் போகிறது இந்த அரசு?





அனைத்துக் கட்சிகளதும் ஆதரவுடன்

# கனடிய பாராளுமன்றத்தில் தமிழர் மரபுத் திங்கள் பிரகடனம்!

தமிழ் மரபுத் திங்களாக, ஒவ்வொரு வருட தை மாதத்தையும் (ஜனவரி) அறிவித்து, பாராளுமன்றத்தில் அதைப் பிரகடனப் படுத்துமாறு ,ஸ்காபரோ றறூஜ் றிவர் தொகுதி பாராளுமன்ற உறுப்பின்ர் ஹரி ஆனந்தசங்கரி அவர்கள் ஒரு தனிநபர் பிரேரணையை (M 24) கடந்த மே மாதம் 20ம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பித்தார். அந்தப் பிரேரணையில். அப்பிரகடனம் கீழ்க்கணடவாறு அமைய வேண்டுமென அவர் குறிப்பிட்டிருந்தார்:

"தமிழ்க் கனடியர்கள் கனடிய சமூகத் திற்குத் ஆற்றியுள்ள பங்களிப்பையும், தமிழ் மொழி மற்றும் தமிழ்க் கலாச்சாரத்தின் செழுமையையும்,நமது எதிர்கால சந்ததியினர் தமிழ்ப் பாரம்பரியத்தின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்வதற்கான தேவையையும் ஏற்றுக்கொண்டு,ஆண்டுதோறும் வரும் தைத் திங்களை தமிழ் மரபுத் திங்களாக கனடிய அரசாங்கம் பிரடனம்செய்ய வேண்டு மென்று இந்த நாடாளுமன்றம் கருதுகிறது".

இந்தப் பிரேரணையை முன்வைத்து அவர் ஆற்றிய உரையின போது, ' தமிழ் மொழி கி.மு 5ம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே பயிலப்பட்டு வந்த ஒரு மொழியாகும். உலகின் மிகப் பழமைவாய்ந்த, எழுத்து மூலமான கல்விப் பாரம்பரியத்தை அந்தக் காலகட்டங்களிலேயே கொண்டிருந்தமொழி களில் ஒன்றாகக் கருதப்ப்டும் மொழியாகும். இந்த மொழியியல் சார்ந்த பாரம்பரியம், தமிழர்களை தொடர்ச்சியான பண்பாட்டு வரலாற்றை தலைமுறை தலைமுறையாக அட்டிக் காத்து வந்திருக்கிறது. தமிழ் மொழி உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மொழியாகும். இந்தியாவில் இது ஒரு நீணட பாரம்பரியத்தைக் கொண்ட மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் அது உத்தியோகபூர்வ மொழியாக உள்ளது. இலங்கையில் ஒரு தேசிய மொழியாகவும், தமிழ்நாட்டில் ஒரு உத்தியோக பூர்வ மொழியகவும் உள்ளது.

எல்லா நாடும் என் நாடே, எல்லா மக்களும் என் உறவுகளே என்ற அர்த்தம் தரும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கவிதையின் வரி தமிழின் முக்கியமான ஒரு முதுமொழியாகப் பயன்பாட்டிலுள்ளது. தேசங்கடந்ததமிழரின் இந்த அனுபவமானது, காலங் காலமாக அவர்கள் பெருமளவில் உலகெங்கும்பயணித்திருக்கின்றனர் என்பதற் கான ஆதாரமாகும். தமிழர்களின் மூலம் தென்னாசியா என்பதற்கான ஆதாரங்கள் இருந்தபோதும், அவர்கள் உலகம் முழுவதும் குடிபெயர்ந்திருந்திருக்கிறார்கள். நல்ல வாப்புக்களைத் தேடி முதலிலும், பின்னர் ஒப்பந்தக் கூலிகளாகவும், அண்மைக் காலங்களில்பாதுகாப்புக் காரணங்களுக் காகவும் அவர்களது குடிப்பெயர்வுகள் இருந்திருக்கின்றன. பிரித்தானிய காலனி ஆதிக்க காலத்திலே,அ வர்களது காலனிகளான, தென்னாபிரிக்கா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் மொறீசியஸ் ஆகிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்திருந்தனர். 20ம் நூற்றாண்டில், தமிழர்களது குடியேற்றம், ஐரோப்பா, அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில், நிரந்தர சமூகங்களாக தம்மை உருவாக்கிக் கொள்ள அவர்களுக்கு வழிசெய்தது.

தமிழர்கள், பல்வகைமைத் தன்மை கொண்ட சமூகத்தினராவர். எந்த இடத்திலி ருந்து வரும் எத்தகைய நம்பிக்கைகளையும் கைக்கொள்பவர்களாக இருக்கும் அதே நேரம், தமது மொழி குறித்த பெருமிதம் கொண்ட வர்களாகவும் அவர்கள் இருப்பார்கள்

கனடாவுக்கு தமிழர்கள் 1940களில் வரத் தொடங்கியிருந்தார்கள். ஆயினும், 1960 வரை அதை ஒரு உண்மையான தமிழ் சமூகத்தின் வருகை என்று சொல்ல முடியாது. முதலில், தமிழர்கள், இந்தியா, தென்னா பிரிக்கா, மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து இங்கு மாணவர்களாக வந்தார்கள். இவர்களில் பலர் கல்வியின் பின்னர் திரும்பிப் போனபோதும் இன்னும் பலர் இங்கு நாட்டின் பல இடங்களில் குடியேறி வாழத் தொடங்கினர். இதைத் தொடர்ந்து, தொழில் சார் வல்லுனர்கள் வரத் தொடங்கினர். அவர்கள், ஒன்ராறியோ பெலிவில்லே முதல், டோசன் க்றீக், பிரிட்டிஸ் கொலம்பியா, மற்றும் அவற்றுக்கு இடைப்பட்ட, நாட்டின் பல்வேறு நகரங்களில் குடியமர்ந்தனர்.

கனடாவின் முதலாவது தமிழ் கலாசார அமைப்பான 'பாரதி கலாமன்றம் என்ற' 1969 இல் ஸ்தாபிக்கப் பட்டது. பின்னர் ' கனடிய தமிழ் ஈழ சமூகம்' என்ற அமைப்பு 1978 இல் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த சமூகத்தினர், ரொறன்ரோ பெரும்பாகம், மொன்றியல், ஒட்டாவா, விண்ட்சர், ஹலிஃபக்ஸ், வின்னிப்பெக், எட்மன்ரன், வன்கூவர் போற பல நகர மையங்களில் வாழத்தொடங்கியிருந்தனர். 1983 இல் நாடு பூராவும் இருந்த தமிழர்களின் எண்ணிக்கை 3000 மட்டுமே.

1983 இல் தான் தமிழர்களின் கனடா நோக்கிய வருகை குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிகரித்தது. அப்போது இலங்கையில் நடந்த இனக்கலவரம் காரணமாக, தம்மீதான தாக்குதலிலிருந்து தப்புவதற்காக பாதுகாப்புத் தேடி அகதிகளாக அவர்கள் இங்கு வந்தனர். இங்கு வந்த அவர்களின் கடுமையான முயற்சி காரணமாகவும், இலங்கையின் தமிழர் எதிர்ப்பு இனக்கலவரத்தின் காரணமாகவும், கனடா ஒரு விசேட ஏற்பாட்டின் கீழ் அகதி களுக்காக தனது கதவுகளைத் திறந்துவிட்டது. அது கனடியர்களுக்கு தமது நெருங்கிய உறவினர்களுக்கு அனுசரணை வழங்கி அவர்களை அழைக்கவும், ஏற்கனவே அகதிகளாக வந்தவர்களின் அந்தஸ்தை சுமுக நிலைக்கு கொண்டுவரவும் உதவிசெய்தது. அங்கு தொடர்ந்து கொண்டிருந்த இன அடிப் படையிலான வன்செயல்கள் காரணமாக, இலங்கை பலவருடங்களாக அதிகளவில் அகதிகளை உருவாக்கும் ஒரு நாடாக இருந்து வந்தது.

தமிழர்கள் கனடாவுக்கு வருவதற்காக பல ஆண்டுகளாக பல ஆபத்தான நெருக்கடி களுக்கு அசாதாரண துணிச்சலுடன் முகம் கொடுத்துத் வந்து சேர்ந்தனர். எல்லா அகதி களையும் போலவே, இவர்களும், நல்ல வாழ்க் கையொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக, தம்முடைய அனைத்தையும் இழக்கத் தயாராக இருந்தனர். ஏனென்றால், அச்சத் துடனும், இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தப்படும் நிலையிலும் வாழும் நிலை இங்கு இருக்கப்போவதில்லை என்பதே இதற்குக் காரனமாகும். அலை அலையாக, அகதிகள் படகுகளில் வந்து இறங்கிக் கொண் டிருக்கையில், வேறு பல அண்மைக்கால அகதிகள் வழமையான முறைகளில் தமது குடும்ப உறவினர்களுடன் வந்து இறங்கி னார்கள்.

1986இல், 155 தமிழ் அகதிகள் அகதிக் கோரிக்கையுடன் நியூஃபவுண்ட்லாண்டில் உள்ள புனித ஷொற்ஸ் கரைக்கு வந்து சேர்ந்தனர். ஆழக் கடலில் தத்தளித்தபடி இருந்த இவர்களை கப்றன் கஸ் டால்ற்றணும் அவரது கப்பலிலிருந்த சகாக்களும் அட்மிரல் கடற்கரையில் வைத்துக் காப்பாற்றினர். இந்த

தொடர்ச்சி 4-ம் பக்கம்



3-ம் பக்க தொடர்ச்சி

சம்பவத்தில் அகதிகள் வந்து இறங்கி இந்த வருடத்துடன் 30 ஆண்டுகள் முடிவடைகின்றன. கனடாவில், இவர்களது வெற்றிகரமான வாழ்க்கையை கொண்டாட வேண்டிய காலமாக இது இருக்கும் அதேவேளை, நியூஃபவுண்ட்லாந்து மக்களது பரந்த மனதுடனான உதவியை பாராட்டவும் நன்றி சொல்லவுமான காலமாகவும் இருக்கிறது. இதற்கடுத்ததாக வந்த குழுவினருக்கு, இதுபோன்ற ஒரு ஆதரவான வரவேற்புக் கிடைக்கவில்லை.

நமது பிரதமர், கனடிய அரசாங்கத்தின் சார்பில், அகதிக் கோரிக்கையுடன் 1914இல் இங்கு வந்த கொமகட்ட மறு என்ற கப்பலில் வந்த அகதிகள் வரவேற்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டது தொடர்பாக மன்னிப்புக் கோரியிருந்ததை சபையிலுள்ள உறுப்பினர்கள் அறிவீர்கள். கடந்த நூற்றாண்டின் இந்தச் சம்பவத்துக்குப் பின்னான காலத்தில் கனடா, அவ்வப்போது மேலெழுந்து எம்முள்ளே ஆழப்புதைந்துள்ள முன்கற்பித்தங்களைக் கடந்து வந்துள்ளது.

பின்னர்,இலங்கையில் நடந்துகொண்டிருந்த நேரடி யுத்தம் காரணமாக, இரண்டு கப்பல்களில் தமிழ் அகதிகள் வந்து இறங்கினர். 2009 இல் எம்.வி ஓசன் லேடி என்ற கப்பலில் 76 தமிழர்களும்,2010 இல், எம்.வி சண் சீ என்ற கப்பலில் 492 தமிழர்களும் பிறிட்டிஸ் கொலம்பியாவிலுள்ள விக்ரோரியாவின் மேற்குக் கரையில் வந்து இறங்கினர். வந்திறங்கிய இவர்கள் தம்மீதுன் நடத்தப்பட்ட யுத்தக்குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலைகள் தொடர்பான தமது கதைகளைப் பகிர்ந்துகொண்டனர். கனடா, இவர்களை திருப்பி அனுப்பவில்லை.ஆனால் அவர்களது நிலமையை புரிந்துகொள்வதில் நாம் (கனடா) தவறிழைத்தோம். அவர்கள் வந்த கணத்திலிருந்து, நாம் இவர்களைக் குற்றவாளிகள் போல நடாத்தினோம். நூற்றுக் கணக்கான சிறுவர்கள், பெண்களுட்பட பலரை பல மாதங்கலாக நாம் தடுப்புக்காவல் முகாம்களில் வைத்திருந்தோம். இன்னமும் இவர்களில் சிலர் சட்டரீதியான எந்த முடிவுகளுமற்ற நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இந்த இரண்டு கப்பல்களிலும் வந்தவர்களில் பெரும்பாலானவர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்தன. அவர்களது கதைகள் இதயத்தைப் பிழிபவை. இந்த மாதம் நாம் ஒரு இளைஞரைச் சந்தித்தேன், அவர் தனது 10ஆவது வயதில் தனது தாய் தந்தையரை யுத்தத்தின் போது இழந்தவர். சண் சீ கப்பலில் அவர் இங்கு வரும்போது அவருக்கு 19 வயது. இப்போது அவருக்கு 26 வயது. கனடா அவரது நாடு. அவர் வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார். தமிழ் சமூகத்தின் விடாமுயற்சி பற்றிய இவ்வாறான பகிரப்பட்ட வரலாறு தான் பலவழிகளிலும் கனடாவிலும் உலகெங்குமுள்ள ஏனைய நாடுகளிலும் வாழ்கின்றதமிழ் சமூகத்தைவரைவிலக்கணப் படுத்துவதாக அமைந்துள்ளது.

இப்போது நான் எமது தமிழ் கனடியர்கள் தமது மொழியையும் கலாசாரத்தையும் பேண எடுத்துவரும் முயற்சிகளைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

இன்று, தமிழ் மொழியையும், கலாசாரத்தையும் வளர்க்கும் நோக்குடன் செயற்படும் பல அமைப்புக்கள் எம்மத்தியில் உள்ளன. ரொறன்ரோ பல்கலைக்கழகம், காலம் சென்ற பேராசிரியர் செல்வா கனகனாயகம் அவர்களின் தலைமையிலும், அண்மையில் யோர்க் பல்கலை கழகம், பேராசிரியர் பிலிப் கெலி அவர்களது தலைமையிலும், விண்ட்சர் பல்கலைக் கழகம், தமிழ் சமூகத்தின் பெருங்கவிஞரான சேரன் ருத்திரமூர்த்தி அவர்களின் கீழும் தமிழ் தொடர்பான பல முக்கியமான கற்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. மேலதிக கற்கை நெறிகள் தொடர்ந்தும் தயாரிக்கப்பட்டு வரும் அதே வேளை, தமிழ் கல்வி தொடர்பான மாநாடுகள், மற்றும் விரிவுரைகள் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவை உள்ளூர் மற்றும் சர்வதேச கல்விமான்கள் பலரதும் ஆர்வத்தையும் அக்கறையையும் பெற்றுவருகிறது. இது தவிர, தமிழ் மக்கள், தமிழ் மொழி, தமிழ் கலாசாரம் போன்றவை தொடர்பான ஆய்வுகளுக்கு, யோர்க் பல்கலைக்கழகத்தின் தமிழ் கற்கைகளுக்கான அமைப்பினால் வழங்கப்படும் என்.சிவலிங்கம் விருது. தமிழ் இலக்கியத் தோட்டத்தினால் வழங்கப்படும் விருதுகள் போன்ற நடவடிக்கைகள் மூலமாக ஆதரவு வழங்கப்பட்டு வருகின்றன. ஆரம்ப, மத்திய பிரிவுகளிலுள்ள பாடசாலை மாணவர்களில் பல பத்தாயிரம் மாணவர்களுக்கு பல அமைப்புக்கள் தமிழ் மொழியைக் கற்பித்து வருகின்றன. அறிவகம், தமிழ் அக்கடமி, மற்றும் பல பாடசாலை நிவாகக் குழுக்கள் தமிழ் மரபு மொழி வகுப்புக்களை நடாத்தி வருகின்றன. இது தவிர, பரத நாட்டியம், சங்கீதம், மற்றும் பிற நுண் கலைகள் தொடர்பான கல்விகளும் வழங்கப்படுகின்றன. பலர், மிகவும் கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டு, பரத நாட்டிய அரங்கேற்றங்களையும் கூட செய்துவருகின்றனர். இதற்காக தம்மை அர்ப்பணித்து, இளம் தமிழ் சந்ததியினரிடையே, எமது தமிழ்மொழி, கலை, மற்றும் பண்பாடு என்பவற்றின் மீது ஆர்வத்தை ஊட்டும் நோக்கில் செதற்பட்டுவரும் ஆசிரியர்கள், பெர்றோர்கள் மற்றும் பேரன் பேத்திகளின் அக்கறையை நான் இந்த இடத்தில் பாராட்ட வேண்டும்.

நமது இளம் கனடியர்களால் செய்யப்பட்டிருக்கும் சாதனைகளை விட என்னை அதிகம் பெருமைகொள்ளச் செய்யும் விடயங்கள் வேறென்னவாக இருக்க முடியும். அண்மையில், NHL Thurgood Marshall scholarship ஐப் பெற்றுக்கொண்ட, ஒன்றாரியோ மாகணத்தை சேர்ந்த முதலாவது மாணவர் என்ற பெருமையையும் தனதாக்கிக்கொண்ட 17 வயதான பிரசாந்தன் அருச்சுணன், நீதித் திணைக்களத்தில் பணியாற்றி இப்போது நுனாவற்றிலுக்கு சட்ட உதவி வழங்கப் பயணமாகியிருக்கும் இளம் சட்டத்தரணியான அனுஷா அருளையா, அண்மையில் கூகிளின் Demo Day Game Changer Award இல் பரிசுபெற்ற குழுவின் தலைவரான ற்றேவிஸ் ரட்ணத்தை நாம் நினவுபடுத்திக் கொள்ளலாம். இவ்வாறே, எமது தமிழ் கனேடியர்களால் இந்த நாட்டுக்கு வழங்கப்படும் பங்களிப்புக்களும் எம்மை மகிழ்வூட்டுவன. கீதா மூர்த்தி அவர்களால் உருவாக்கப்பட்டு, மிக அவசியத் தேவையான மதியிறுக்கம் (Autism) தொடர்பான புரிதலை ஏற்படுத்திவரும் South Asian Autism Awareness Centre, தேவி அரசரத்தினம், ரவி சிறீஹரன் ஆகியோரின் உதவியுடன் இயங்கும் Fort York Food Bank, வெற்றிகரமான தொழில் முனைவோரும் நன்கொடையாளருமான மஞ்சுளா செல்வராஜா ஆகியோரை இந்த இடத்தில் குறிப்பிடலாம். இந்த சாதனைகள், வெறுமனே தமிழர்களின் பெரும் பங்களிப்பை மட்டும் பேசவில்லை, இவை இந்தச் சமூகத்தின் எதிர்கால சாதனைகளுக்கான அடையாளங்களும் கூட.

நான் ஒவ்வொரு தடவையும் பெரிய நகர்களிலுள்ள உணவகங்களுக்குச் செல்லும் போது, நான் எப்போதும் அவர்களது சமயற்பகுதிய எட்டிப் பார்ப்பதுண்டு என்பதை சொல்ல வேண்டும். அப்போதெல்லாம் அனேகமாக, ஒரு களைப்படைந்த நடுத்தர வயதான ஒருவர் தனது இரண்டாவது வேலையை செய்துகொண்டருப்பதை காணக்கூடியதாக இருக்கும். எப்படியும் அவர் ஒரு தமிழராக இருப்பார். ஒரு நீண்ட உரையாடலில், அவரது மகள் எவ்வளவு கஸ்ரப்பட்டுப் படிக்கிறார் என்பது பற்றி அறிந்துகொள்வேன். அவரது முகத்தில் பெருமையையும், கண்களில் அதற்காக அவர் செய்யும் தியாகத்தையும் என்னால் காணக்கூடியதாக இருக்கும்.

தமிழ் மரபுத் திங்கள் தமிழ் கனேடியர்கள் எமது சமூகத்துக்கு ஆற்றியுள்ள பங்களிப்பை அங்கீகரிக்கவும், அதைக் கொண்டாடவுமான ஒரு முக்கியமான வழிமுறையாகும். கனடாவில் தமிழ் மரபுத் திங்கள் இருப்பது என்பது, தமிழராகவும், கனடியராகவும் இருப்பது போன்றதாகும். அதாவது, இது எதிர்கால சந்ததியினருக்காக தமிழ் மொழியையும் பண்பாட்டையும் பாதுகாப்பதற்கானது மட்டுமல்ல, கனேடிய விழுமியங்களையும் பொறுப்புக்களையும் கூட இணைந்து கொண்டாடவும் உள்வாங்கிக் கொள்ளவுமான ஒன்றும் கூட. தமிழ் கனடியர்கள், தமது வரலாரற்றுக் கடமைகளை ஆற்றுவார்கள் என்றும், எமது பூர்வ குடிகளைச் சேர்ந்த சகோதர சகோதரிகளுடனான நல்லுறவைக் கொண்டவர்களாக இருப்பார்கள் என்பதையும் நான் உறுதியாக நம்புகிறேன்,

கூஸ் பே யிலுள்ள ஆய்வுகூடங்களில் இருந்து, மொன்றியலில் உள்ள உணவு விடுதிகள், ரொறொன்ரோவின் நிதிநிறுவங்கள் நிறைந்த வானுயர் கட்டிடங்களில், வோகனின் தொழிற்சாலைகளில், வாட்டர்லூவின் innovative hubs களில், அல்பேர்ட்டாவின் ஓயில் வயல்களில், பிறிட்டிஸ் கொலம்பியாவின் பெரும் பொதிவண்டிகளை செலுத்திகளிடையே என்று , தமிழ் கனடியர்கள் எங்கும் நிறைந்தவர்களாக, இந்த நாட்டின் பகுதிகளாகிவிட்டுள்ளனர். அதை இன்று இந்த மன்று அங்கீகரித்து, ஒவ்வொரு வருடத்தின் ஜனவரி மாதமும் தமிழ் மரபுத் திங்களை நாடுமுழுவதும் கொண்டாடுவதற்கான மாதமாக அமைவதை உறுதிசெய்யும்.

ஆனந்த சங்கரி அவர்களது உரையை இரண்டு நாட்களாக நடந்த விவாதத்திலும் ஆதரித்து பல உறுப்பினர்கள் உரயாற்றினர். அவற்றில் சிலரது உரைகளின் சுருங்கிய வடிவத்தை கீழே தருகிறோம்:

Kellie Leitch - Simcoe-Grey, ON



இந்தப் பிரேரணைய ஆதரித்து உரையாற்றிய ஒன்றாரியோ சிம்கோக்ரே தொகுதியை சேர்ந்த கொன்சர்வேற்றிவ் கட்சி உறுப்பினரான கெலி லீச் தனது உரையின் போது, ' தை மாதத்தை மரபுத் திங்களாக அறிவிப்பது மிகவும் பொருத்தமானது. ஏனென்றால் அந்த மாதத்தில தான் தைப் பொங்கல், என்ற அறுவடை விழா வருகிறது. கனடிய தமிழர் தேசிய பேரவையின் தலைவர் கலாநிதி சிறி றஞ்சன் அவர்கள் சொல்வது போல உல்கெங்கும் வாழும் தமிழர்கள் தை மாதத்தில் இந்தத் தைப் பொங்கல் விழாவை, நல் விளைச்சலைப் பெறுவதற்கான சக்தியை தந்த சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாளாக கொண்டாடி வருகிறார்கள். இது நாம் கொண்டாடும் Thanksgiving தினம் போன்ற ஒன்றாகும். இந்த மரபிற்கான பல கலை கலாசார வளம் கொண்ட நிகழ்வுகளுடன் இணைந்து பல கொண்டாட்டங்கள் இந்தக் காலத்தில் நடைபெறும். என்று தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் ' பழமைவாதக் கட்சியும், நான் நினைக்கிறேன்,அனைத்துக் கனேடியர்களும், நாடுபூராவுமுள்ள அனைத்து தமிழ் சமூகத்தையும் எமது கரங்களை விரித்து வரவேற்ற பெருமைக்குரிய வரலாற்றைக் கொண்டிருக்கிறோம். நாம். தமிழ் கனடியர்கள் இந்தத் தேசத்தக் கட்டியெழுப்புவதில் ஆற்றிவரும் உதவிகளை நாம் அறிவோம்....தமிழ் கனடிய சமூகம், கனடாவில் மிக வேகமாக வளர்ந்துவரும் சமூகங்களில் ஒன்றாகும்.. கனடாவிலுள்ள தமிழ் சமூகம், எமது சமூகத்துக்கு எண்ணற்ற பங்களிப்புக்களை ஆற்றிவருகிறது. தமிழ் மக்கள் இங்குள்ள தொண்டு நிறுவனக்களுக்கு தமது பங்களிப்பை நல்கி வருகிறார்கள். அவர்கள் தமது நேரத்தையும் பணத்தையும், ஏனைய கனேடிய சமூகத்துக்காக வழங்கி வருகிறார்கள். நான் இந்தப் பிரேரணையை ஆதரிக்கிறேன், அவர்களது பங்களிப்பை அங்கீகரிப்பதியும் இந்தப் பிரேரணை செய்வதால் நான் இதை ஆதரிக்கிறேன்.

தொடர்ச்சி 5-ம் பக்கம்

4-ம் பக்க தொடர்ச்சி

Scott Duvall - Hamilton Mountain, ON



இவரைத் தொடர்ந்து உரையாற்றிய ஹமில்ற்றன் மவுண்டன் தொகுதிக்கான புதிய ஜனனாயகக் கட்சி உறுப்பினர் ஸ்கொட் டுவால் அவர்கள் பேசுகையில் ' இந்தப் பிரரணையை புதிய ஜனநாயகக் கட்சியால் ஆதரிக்கமுடியும்; ஆதரிக்கும். நீண்ட காலமாக புதிய ஜனனாயகக் கட்சி தொடர்ச்சியாக ஆதரித்து வந்த ஒரு விடயம் தான் இது, இதில் உள்ள சொற்களும் அனேகமாக ஸ்காப்ரோ றூஜ் பார்க் தொட்குதியின் எமது கட்சியை சேர்ந்தவரும், கனடாவின் முதலாவது தமிழ் பாராளுமன்ற உறுப்பினரால் (ராதிகா சிற்சபை ஈசன்) கொண்டுவரப்பட்ட பிரேரணையில் காணப்பட்ட சொற்களும் ஒன்றே. ஆனால் அந்தப் பிரேரனை துரதிர்ஸ்ட வசமாக பிரேரணையாகவே நின்றுவிட்டது. இந்த பிரேரணைய ஏற்றுக் கொள்வதன் மூலம் என்பது அரசாங்கம் இதற்காக எதையாவது செய்யும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் பிரேரணைகள் எத்தகைய கடப்பாட்டையும் அரசாங்கத்துக்கு வழங்குவதில்லை என்பதை நாம் அறிவோம். ஆயினும்,அரசாங்கத்தால், தை மாதத்தை ஒவ்வொரு ஆண்டும் தமிழ் மரபுமாதமாக அறிவிப்பதை பொருத்தமானது என்று ஏற்றுக் கொள்ளும் என நினைக்கிறேன். தமிழ் சமூகத்துக்கு அதன் பங்களிப்புக்குரிய அங்கீகாரத்தை வழங்குவதற்கான காலம் இது என்று நினைக்கிறேன். நாம், ஏற்கனவே தை மாதத்தை மரபுத் திங்களாக உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ள சட்ட அமைப்புக்களுடன் இணைந்துகொள்ள வேண்டும். நாம் இதை ஒவ்வொரு தை மாததுக்குமான ஒரு தீர்மானமாக வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

Bill Blair - arliamentary Secretary to the Minister of Justice and Attorney General of Can



லிபரல் கட்சியை சேர்ந்த, நீதி அமைச்சின் செயலாளரும், கனடாவின் சட்டமா அதிபருமான பில்ல் ப்லேயர் இதை ஆதரித்து உரையாற்றுகையில், 'கனடாவுக்கு, புதிதாக வருபவர்களை கரம் நீட்டி வரவேற்கும் ஒரு நீண்ட பாரம்பரியம் உண்டு. இதனால் தான் கனடா உலகில் உள்ள பன்மைத்துவத் தன்மை கொண்ட நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது. கனடாவில் உள்ள தமிழ் சமூகம், அந்தப் பன்மைத்தன்மைக்கும், நாட்டின் முன்னேற்றத்துக்கும் பெருமளவுக்கு பல முக்கியமான பங்களிப்புகளைச் செய்துள்ளது.

நாம் கனேடியர்கள் என்ற முறையில், எமதுன் பன்மைத்தன்மையை எமது நாட்டில் ஒன்றாக இணைந்து கொண்டாடுகிறோம். நாம் எமக்குப் பொதுவான சவால்களையும் எம்முள் பகிரப்பட்ட விழுமியங்களையும் பற்றி கற்றுக்கொள்ள முயல்கிறோம். தமிழ் மரபுத் திங்கள் எமது பன்மைத்தன்மையைக் கொண்டாடுவதற்கான ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். அதேவேளை, தமிழ் சமூகத்துக்கு, தன் கலை,கலாசாரம், மற்றும் வரலாறு என்பவற்றை மற்றைய சமூகங்களுடன் பகிர்ந்து கொள்ள கிடைத்துள்ள ஒரு வாய்ப்பாகும்,

நான் இந்த பிரேரணைக்குஎனது ஆதரவை வழங்கும் அதேவேளை, கனேடியர்கள் அதிக அளவில் தெரிந்த அல்லது தெரியாத எந்த சமூகமாயினும், கனடாவை உலகின் ஒரு பல்கலாசார தன்மை கொண்ட நாடாக வெற்றிகரமாக வளர்த்தெடுப்பதற்கான அவர்களது பங்களிப்பை நாம் கொண்டாட வேண்டும்.

Bob Saroya Markham - Unionville, ON

மார்க்கம் யூனியன் வில்லே தொகுதி பழமைவாத கட்சி உறுப்பினரான பொப் சரோயகருத்துதெரிவிக்கையில், தைமாதத்தை தமிழர் மரபு மாதமாக தெரிவு செய்தது முக்கியமானதாகும், ஏனெண்ணரால் அந்த மாதத்தில் தான் தைப்பொங்கல்,மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட கலை நிகழ்வு களும் வருகின்றன. இந்த மரபுத் திங்கள் தமிழ் மக்களுக்கு தமது உன்னதமான கலாசாரம், மரபு மற்றும் வரலாற்றை ஏனைய சக கனடியர்களுக்குக் காட்டவும், பகிர்ந்துகொள்ளவும் கிடைத்துள்ள ஒரு



சந்தர்ப்பமாகும். இந்த மரபுத் திங்களை, ரொறன்ரோ பெரும்பாகப் பகுதி நகரங்களுடன், பிக்கெறிங், அஜக்ஸ், விற்பி, மற்றும் பிறம்ப்ரொன் ஆகியவை உத்தியோக போர்வமாகப் பிரகடனம் செய்துள்ளன. இவ்வாறான ஒரு பிரேரணை, ஒன்றாரியோ மாகண சபையிலும், பழமைவாதக் கட்சி உறுப்பினரால கொண்டுவரப்பட்டு, லிபெரல் மற்றும், புதிய ஜனனாயகக் கட்சி ஆதரவுடன் நிறைவெற்றப்பட்டுள்ளது.

தமிழ் மரபுத் திங்கள் தமிழ் சமூகத்தின், தனித்துவமான கலாசாரவாழ்வை கொண்டாடவும்,அவர்களின் கனடிய சமுகத்துக்கான பங்களிப்பை அன்கீகரிக்கவுமான ஒரு மாதமாக அமையட்டும் என்று தெரிவித்தார்.

இவர்களித் தவிர, இன்னமும் பத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் நீணட சிறப்பான உரைகளை ஆற்றியிருந்தனர். அனைவரும் தமிழ் மக்களின் பங்களிப்பையும், அவர்களது மொழி,பண்பாடு,கலாசாரம் என்பவை குறித்த முக்கியமான தமது அவதானங்களைத் தெரிவித்திருந்தனர். மேலும் சில உறுப்பினர்களின் முக்கிய உரைகளின் சுருக்கங்களை இன்னொரு இதழில் பார்ப்போம்.





அன்ரனி ஜெகநாதன்


இரவிகரன்


முகமது நியாஸ்


அப்துல் றிப்கான்

# நியாயமா... நல்லெண்ணமா?

## பிரதி அவைத்தலைவர் பதவி யாருக்கு?

மீண்டும் ஒருமுறை சூடுபிடித்துள்ளது வடமாகாண அரசியல் களம். வெளியில் புகைவராமல் உள்ளுக்குள் இப்பொழுதுதான் சூடு பரவ ஆரம்பித்துள்ளது. அதனால்தான் இணையங்கள், பத்திரிகைகள்ஞ் ஏன், அரசியல் மேடைகளிலும் இந்தப்பேச்சு இன்னும் வெளியாகவில்லை.

அடுத்த, பிரதி அவைத்தலைவர் யார்?

இதுதான் சூட்டை கிளப்பியுள்ள விவகாரம். காலைவாருதல், ஆளையாள் உள்குத்து குத்துதல் எல்லாம் ஆரம்பித் துள்ளது. அடுத்து வரவுள்ள நாட்களில் இதன் உச்சத்தை தொட்டு அதகளம் பண்ணுவார்கள்.

ஏற்கனவே ஒருமுறை இப்படி சூடு பறந்தது. அது வடக்கு மாகாணசபையை கைப்பற்றியதும் நடந்தது. யார் யார் அமைச்சர்களாவது என்பற சர்ச்சையை தொடர்ந்து எழுந்த அக்கப்போர் அது

தமிழ்தேசிய கூட்டமைப்பில் உள்ள நான்கு கட்சிகளும் நான்கு திசையில் நின்று கயிறிழுக்க, பார்த்துக் கொண்டிருந்த மக்களிற்கு சலிப்புத்தான் மிஞ்சியது. முதலமைச்சர், அவைத்தலைவர், நான்கு அமைச்சர்களை நான்கு கட்சிகள் எப்படி பிரிப்பதென்பதில் உடன்பாடு காண முடியாமல் குடுமிச்சண்டையிட்டார்கள் தமிழர்களின் பிரதிநிதிகள்.

வரலாறு மீண்டும் திரும்பியுள்ளது.

வடமாகாணசபையின் உப தவிசாளராக இருந்த அன்ரனி ஜெகநாதன் அண்மையில் மரணமானார். அந்த வெற்றிடத்தை யார் நிரப்புவதென்பதில் சர்ச்சை தோன்றி யுள்ளது.

கடந்த மாகாணசபை தேர்தலின் பின்னர் பதவிகள் பகிரப்பட்ட விதத்தில் கூட்டணிக்கட்சிகளிற்குள் முழுமையான திருப்தியிருக்கவில்லை. குறிப்பாக புளொட் அமைப்பிற்கு குறிப்பிடத்தக்க பொறுப்புக்கள் வழங்கப்படவில்லை. சித்தார்த்தனின் நீண்ட அரசியல் செயற்பாடு, அவர் பெற்றுக்கொண்ட வாக்குகளை கணக்கெடுக்கவில்லையென்ற வருத்தம் அந்த கட்சிக்குள் இருக்கிறது.

அவைத்தலைவர் பதவியை ஏற்றுக்கொள் ளுமாறு சித்தார்த்தனை அந்த சமயத்தில் கூட்டணி தலைமை கேட்டுக்கொண்ட போதும், அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. சீனியாரிட்டி அடிப்படையிலாவது அமைச்சு வழங்கியிருக்க வேண்டுமென்பது புளொட்டின் நிலைப்பாடு. அதன்பின்னர் தான் சீ.வீ.கே.சிவஞானத்திடம் அவைத் தலைவர் பதவி வழங்கப்பட்டது.

அமைச்சு உள்ளிட்ட பதவிகள் பகிரப் பட்டபோது மன்னார் மாவட்டத்தில் பெரும் கொந்தளிப்பே நிகழ்ந்தது. மன்னாரை சேர்ந்த டெனிஸ்வரனிற்கு அமைச்சு பதவி வழங்கப்பட வேண்டும் என்று பகிரங்க கோரிக்கை வைக்கப்பட்டது. அதன் பின்னர் மாவட்டரீதியான நியமன கோரிக்கையும் வலுத்தது. கட்சிகளிற்கும் கொடுக்க வேண்டும், மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்ற நெருக்கடியை கட்சித்தலைமை கச்சிதமாக கையாண்டு நியமனங்கள் வழங்கியது. யாழ்ப்பாணத்தில் ஐங்கரநேசன், கிளிநொச்சியில் குருகுலராஜா, வவுனியாவில் சத்தியலிங்கம், மன்னாரில் டெனிஸ்வரன் என்று நியமனங்கள் வழங்கப் பட்டபோது, முல்லைத்தீவு மிஸ்ஸிங்.

அந்த சமயத்தில் புளொட்டிடம் முல்லைத்தீவு மாவட்ட பிரதிநிதித்துவம் இருந்திருந்தால் பிரதி அவைத்தலைவர் பதவி அவர்களிடம் சென்றிருக்கலாம். ஆனால் அவர்களிடம் பிரதிநிதித்துவம் இருக்கவில்லை. இந்த சமயத்தில் ஈ.பி.ஆர். எல்.எவ் அதில் குறிவைத்தது. முல்லைத்தீவில் ரவிகரன் இருக்கிறார், அவருக்கு வழங்கலா மென சிபாரிசு செய்தது. ஆனால் தமிழரசுக் கட்சி பிரதி அவைத்தலைவர் பதவியையும் எடுத்துக் கொண்டது. அன்ரனி ஜெகநாதன் பதவியேற்றுக்கொண்டார்.

கடந்தமுறையை போல பெரும் அக்கப்போராக இல்லாமல் சிறியளவில் இம்முறையும் குழப்பம் ஆரம்பித்துள்ளது. வெற்றிடமாக இருப்பது அமைச்சர் பதவி யென்றால் குழப்பம் அதிகரித்திருக்கும். உதவி அவைத்தலைவர் பதவி கிட்டத்தட்ட சமாளிப்பு பதவியென்பதை போலத்தான் இதுவரையான வடமாகாணசபை செயற் பாடு அமைந்திருந்தது. “சபையை தலைமை தாங்க என்னை அனுமதிக்கிறார்களே இல்லை“ என்ற குற்றச்சாட்டுடனேயே மரணித்திருக்கிறார் அன்ரனி ஜெகநாதன். வடமாகாணசபையை பொறுத்தவரை உதவி அவைத்தலைவர் என்பது சம்பிரதாய பதவியென்பதால் சர்ச்சையின் வீரியம் குறைவாக இருக்கிறது.

பிரதி அவைத்தலைவர் பதவிக்கு இன்னும் பகிரங்க மோதல்கள் ஆரம்பிக்கவில்லை. ஆனால் சிலர் குறிவைத்துள்ளனர். சிலர் சிபாரிசு செய்யப்பட்டுள்ளனர். சிலர் பொருத் தமானவர்களாக இருப்பார்கள் என்ற அபிப்பிராயங்கள் எழுந்துள்ளன. அந்த விபரம் இது அரியரட்ணம், கமலேஸ்வரன், ரவிகரன், சிவநேசன், லிங்கநாதன், யாராவ தொரு முஸ்லீம் பிரதிநிதி. இவர்களில் யாராவதொருவர் உதவி அவைத்தலை வராகுவதற்கே வாய்ப்புக்கள் அதிகம்.

இவர்களில் யார் பொருத்தமானவர் என்பதே இப்பொழுது கேள்வி.

கூட்டணிக்குள் தமிழரசுக்கட்சிக்குத்தான் குரலும், பலமும் பெரிது. தமிழரசுக்கட்சியின் ஒருபகுதியினர் பசுபதி அரியரட்ணத்தின் பெயரை முன்மொழிந்துள்ளனர். ஆனால் இதிலுள்ள சிக்கல், அரியரட்ணம் தமிழரசுக் கட்சி சார்பில் தெரிவானவர். தமிழரசுக் கட்சிக்கு முதல்வர், அவைத்தலைவர், இரண்டு அமைச்சுக்கள் உள்ள நிலையில் மேலதிகமாக பிரதி அவைத்தலைவரையும் வழங்குவது கொஞ்சமும் கூட்டணி நாகரி கத்தை மதிக்காததாகிவிடும். தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அப்படியொரு முடிவிற்கு போவார் என கருத வாய்ப்புக்கள் குறைவு. முல்லைத் தீவு மாவட்டத்திற்குரிய நியமனத்தை எனக்கு வழங்கி சிக்கல்படுத்த வேண்டியதில்லை யென அரியரட்ணமே சொன்னதாகவும் ஒரு தகவலுண்டு.

அன்ரனி ஜெகநாதன் தமிழரசுக்கட்சிக் காரர், எனவே முல்லைத்தீவில் தமிழரசு கட்சியை சேர்ந்த கமலேஸ்வரனிற்கு வழங்க வேண்டுமென ஒருசாரர் வலியுறுத்து கிறார்கள். என்றாலும், இதற்கான வாய்ப்பு கிட்டத்தட்ட இல்லையென்றுதான் கூற வேண்டும்.

முல்லைத்தீவை சேர்ந்த ஈ.பி.ஆர். எல்.எவ் பிரதிநிதி ரவிகரன் அந்த பதவியை குறிவைத்துள்ளதாக கூறப்படுகிறது. எனினும், தமிழரசுக்கட்சியுடன் முரண்டுபிடித்துவரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் அந்த பதவியை பெற்றுக்கொள்வது குதிரைக்கொம்புதான்.

தற்போது புளொட்டிற்கு முல்லைத்தீவு பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளது. அந்த அமைப்பின் சிவநேசனிற்கு பிரதி அவைத் தலைவர் பதவி கிடைப்பதுதான் முறையான தென்ற கருத்து பரவலாக உள்ளதுடன், அவருக்கு அதிக வாய்ப்புள்ளதாக தெரிகிறது. இதற்குள், புளொட்டின் வவுனியா உறுப்பினர் லிங்கநாதனின் பெயரையும் சிலர் பிரேரிப்பதாக தெரிகிறது. புளொட்டிற்குள் சர்ச்சையை தோற்றுவிக்க சிலர் திரி தூண்டி விடுவதாகவும் அது அமையலாம். எனினும், சிவநேசனின் தெரிவிற்கே புளொட் தலைமை ஆதரவு தெரிவிக்குமென தெரிகிறது.

இதற்குள் இன்னொரு கருத்தும் எழுந்துள்ளது. நல்லெண்ண அடிப்படையில் முஸ்லீம் பிரதிநிதியொருவரிற்கு இதனை விட்டுக்கொடுக்கலாமென்ற கருத்தும் முன்வைக்கப்படுவதாக தெரிகிறது. அப்துல் றிப்கான், முகமது நியாஸ், யாசீன் ஜவாகீர் ஆகியவர்கள் தற்போது தமிழ்தேசிய கூட்ட மைப்பை தவிர்ந்த எதிர்கட்சி உறுப்பினர்கள். இவர்களில் ஒருவருக்கு பதவியை கொடுத்து, நல்லெண்ணத்தை வெளிப்படுத்தலாமென்ற அபிப்பிராயமும் எழுந்துள்ளது. அனேகமாக முஸ்லீம் காங்கிரஸ் பிரதிநிதிக்கே அந்த வாய்ப்பு கிட்டலாம்.

நியாயப்படி புளொட்டிற்கா, நல்லெண்ண அடிப்படையில் முஸ்லீம் காங்கிரசிற்கா என்பதுதான் இப்பொழுதுள்ள கேள்வி.

எதுவானாலும் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் தீர ஆலோசித்து முடிவெடுத்தால் சர்ச்சைகளை தவிர்க்கலாம்.

– நம்மாழ்வார்


அரியரட்ணம்


சிவநேசன்


யாசீன் ஜவாகீர்

## 'பேராசிரியர் ரங்கசாமி கார்த்திகேசு மறைந்தார்'



மலேசிய எழுத்தாளரும், மக்கள் தொடர்பாடல் துறைப் பேராசிரியருமான முனைவர் ரங்கசாமி கார்த்திகேசு அவர்கள் கடந்த 11ம் திகதி செவ்வயன்று காலமானார் என்ற துயரச் செய்தி வந்து சேர்ந்திருக்கிறது. மலேசிய விஞ்ஞான பல்கலைக் கழகத்தின் பேராசிரியரான அவர், வானொலி தொலைக்காட்சி என்பவற்றில் ஒலிபரப்பாளராக தம் இளவயதில் செயற்பட்டவரும், சிறுகதை,நாவல், இலக்கிய விமர்சனம், கட்டுரைகள், மொழிபெயர்ப்பு என்பவற்றில் ஆர்வத்துடன் இயங்கிவந்தவருமான ஒரு முக்கிய எழுத்தாளராவார். அவரது எழுத்துக்கள் பத்துக்கு மேற்பட்ட நூல்களாக வெளிவந்துள்ளன, சூழலியல் உள்ளிட்ட பல்துறை சார்ந்த பத்திகளையும் தொடர்ந்து எழுதி வந்த பேராசிரியர் சிலகாலம் புற்றுநோயினால் பீடிக்கப்படிருந்தார், மலேசியத்தமிழின் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றிய அவர் நினைவுக்கு செலுத்தும் அஞ்சலியாக, சூழலியல் தொடர்பாக அவர் 2011 இல், இன்று முக்கிய பிரச்சினையாக உயர்மட்டங்களில் பேசப்படுகிற சூழல் வெப்பநிலை மாற்றம் தொடர்பாக எழுதிய பத்திகளிலிருந்து ஒன்றை தீபம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.



# வெந்தணலில் வேகும் உலகு!

"விரைவாக உருகும் பனிக்கட்டி ஆறுகளும், பனிக்கட்டி பரப்புக் களும் கடல் மட்டத்துக்குக் கீழுள்ள நாடு களை இப்போதே மருட்டுகின்றன. தீவு நாடான மால்டிவ்ஸ் போன்றவை கடுமை யான அபாயத்தில் உள்ளன. பெரிய நகரங்க ளான ஷங்ஹாய், லேகோஸ் போன்றவையும் மூழ்கும் அபாயத்தில்உள்ளன"இயற்கைவளப் பாதுகாப்பு மன்றம், அமெரிக்கா.

உலகம் எப்படி அழியும்? படீரென வெடித்துச்சிதறி அழியுமா அல்லது கொஞ்சம் கொஞ்சமாக வாடி வதங்கி மடியுமா?

அறிவியலாளர்கள் கூட பதில் சொல்ல முடியாததாக இந்தக் கேள்வி இருந்தாலும் உலகம் அழிவது என்னவோ உண்மை என்பதை இப்போது பலரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். அந்த அழிவும் மனிதர்களின் பேராசையினாலேயே நிகழும் என்பதும் அநேகமாக ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தாக இருக்கிறது.

உலகம் அழியும் என்று சொல்வது கூட ஒரு பொருத்தமில்லாத வாதம்தான். அழியப்போவது உலகமல்ல, மனித குலம் மட்டுமே! உலகுக்கு என்ன! அதன் மேல் ஆயிரம் அணுகுண்டுகள் விழுந்தாலும் அது அவற்றை ஏற்றுக் கொண்டு தன் மேற்பாகம் மட்டும் வெந்து தணிந்த பின் சில நூறு அல்லது சில ஆயிரம் வருடங்களுக்குப் பின் புல் பூண்டுகளை உயிர்ப்பித்துத் தான் தழைக்கும். மனிதன் என்றொரு பிராணி இனி பிறக்குமா என்பதுதான் நிச்சயமில்லை.

உலகத்தின் அழிவைக் குறிக்கும் மிக உறுதியான அடையாளங்களில் முக்கிய மானது வடதுருவத்தில் பனிப்பாறைகள் உருக ஆரம்பித்திருப்பது. வட துருவத்தின் வெப்ப அளவின் உயர்வு உலகின் பிற பாகங்களின் வெப்ப அளவு உயர்வை விட இரண்டு மடங்காக இருக்கிறது. ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக இந்த மாதிரியான வெப்பத்தைக் கண்டிராத பனிப்பாறைகள் விரைவாக உருகுகின்றன. ஆர்க்டிக் துருவத்தின் பனிப்பாறைகள் மெலிந்து விட்டன. உடைந்து மிதக்கின்றன. முன்பு கப்பல்களால் கடக்க முடியாத பனிக் கட்டிக் கடல்களில் கப்பல் வழிகள் திறக்கப்பட்டுள்ளன.

துருவங்களில் உள்ள பனிப்பாறைகள் உலகின் பொதுவான வெப்ப நிலையை சூரிய வெப்பத்துக்கு எதிராகத் தற்காக்கின்றன. அவை இல்லாவிட்டால் சூரிய வெப்பம் உலகெங்கணும் உயர்ந்து விடும். இதன் விளைவாக வடமண்டலம் முழுவதும் பயிர்கள் விளைச்சல் பாதிப்படையும். சூரிய வெப்பம் அதிகரித்தால் காற்றின் ஈரப்பசையும் குறையும். நிலம் வறட்சியடையும். இதனால் மனிதர்களின் தோலுக்கும் பாதிப்பு உண்டு.

கடல் நீர் வெப்பமடைந்தால் கடல் உயிரினங்கள் அழியும். மீன் வளம் வெகு வாகக் குறையும். மீன்களுக்கும் பிற கடல் வாழ் இனங்களுக்கும் ஆதார உணவான பிளாங்டன் என்னும் நுண்ணுயிர்கள் அழிந்தால் வேறு எந்த கடல் இனமும் வாழவோ தழைக்கவோ முடியாது.

உலகம் இந்த அளவு வெப்பமடைவது ஏன்? எல்லாம் மனிதர்களின் பேராசைதான் என்கிறது ஆய்வு. மனிதர்களின் தொழிலியல் உற்பத்திப் பெருக்கத்தினால், தொழிற்சாலைகள் வெளியிடும் கரியமில வாயுவும் மற்ற வாயுக்களும் வான்வெளியில் ஒரு குடைபோல் கவிந்துள்ளன. மொத்தமாக இவற்றை க்ளோரோஃப்ளோரோ கார்பன்

தொடர்ச்சி 15-ம் பக்கம்



### கனடா மூர்த்தி எழுதும்

## நினைத்துப் பார்க்கிறேன்

# போர்க் குற்றவாளியான மஹிந்தவை புலிக்கொடியுடன் சென்று கைது செய்து சிறையில் அடைத்த வரலாறு தெரியுமா?

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 'தமிழ் மரபுத் திங்கள்' பிரகடனத்தோடு எனக்கு அதிஷ்டவசமாகக் கிட்டிய சம்பந்தம் கனடாவில் வாழும் உங்களில் எவருக்கும் கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல இனிக் கிடைக்கவும் போவதில்லை என்பதை நினைத்துப் பார்க்கும்போது எனக்குக் கர்வம் கலந்த பெருமை மேலிடுகிறது. ஹா... 'இவன் என்ன கதை வுடுகிறான்' என்கிறீர்களா?

நம் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களால் மத்திய அரசின் நாடாளுமன்றில் கொணரப்பட்ட வி24 என்று அழைக்கப்படும் 'தமிழ் மரபுத் திங்கள்" தனிநபர் பிரேரணை 2016 அக்டோபர் 5ந் திகதி வாக்கெடுப்புக்கு விடப்பட்டதல்லவா. 'தமிழ் மரபுத்திங்கள்' என்ற அந்த தமிழ்நிலைப்பட்ட பிரேரணை கனடா மத்திய அரசின் நாடாளுமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அந்த அதி உன்னதக் காட்சியை நாடாளுமன்றத்தின் உள்ளேயிருந்து அதாவது பார்வையாளர் களுக்கான பகுதியில் அமர்ந்து ஒரு தமிழனாக புல்லரித்துப்போய் ஆனந்தக் கண்ணீருடன் நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. (அனைத்துக் கட்சிகளும், குறிப்பாக பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ உட்பட, அன்று சமூகமளித்திருந்த அத்தனை 283 உறுப்பினர்களும் தமிழுக்கான அங்கீகாரத்தை ஏகோபித்து ஏற்றுக் கொண்டதை பெருமையுடன் கண்டேன்.)

அதேபோன்ற பெருமிதம் தரும் தனி அனுபவம் இதற்கு முன்பும் 2014இல் எனக்குக் கிட்டியது. தமிழ் மரபுத்திங்கள் பிரேரணை ஒன்ராறியோ சட்டமன்றத்தில் 2014 மார்ச் 17ந் திகதி காலை நேரத்தில் நிறைவேற்றப்பட்டதல்லவா. அது நிறை வேற்றப்பட்டபோது அதையும் சட்ட மன்றத்தின் உள்ளே பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்து நேரடியாகக் காணும் சந்தர்ப்பமும் எனக்குக் கிட்டியது. ஆம். ஒன்ராறியோ ப்ரோக்கரஸிவ் கன்சவேடிவ் கட்சியின் உறுப்பினர் ரொட் ஸ்மித் அவர் களால் சமர்ப்பிக்கப்பட்டு 'தமிழ் மரபுத்திங்கள்' ஒன்ராறியோ நாடாளு மன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டபோது; அதை நேரில் காண தமிழ்ச் சமூகத்திலிருந்து குறிப்பிட்ட ஆதரவாளர்கள் சிலரையே ப்ரோக்கரஸிவ் கன்சவேடிவ் கட்சியின் அன்றைய தலைவரான ரிம் ஹூடாக் அழைத்திருந்தார். ப்ரோக்கரஸிவ் கன்சவேடிவ் கட்சிப் பிரமுகர்கள் ஷான் தயாபரன், கென் கிருபா ஆகியோர் ஊடாகக் கிட்டிய அழைப்பின்பேரில் ப்ரோக்கரஸிவ் கன்சவேடிவ் கட்சி ஆதரவாளர்களாக நாம் குயின்ஸ்பார்க் சென்று அங்கு சபையில் அமர்ந்து அந்த வரலாற்றுச் சிறப்பினை நேரடியாகக் கண்டோம். (வரலாற்றுக் குறிப்பு: ஒன்ராறியோ ப்ரோக்கரஸிவ் கன்சவேடிவ் கட்சியின் அன்றைய தலைவரான ரிம் ஹூடாக் ஸ்காபரோவில் 2014 பொங்கல் விழாவின்போது "தமிழ் மரபுத்திங்களை ஒன்ராறியோ சட்ட மன்றத்தால் அங்கீகரிக்க வைப்பேன்" என்று உறுதி கூறியிருந்தார். அப்போது பற்றிக் பிரவுண் ஒன்ராறியோ ப்ரோக்கரஸிவ் கன்சவேடிவ் கட்சித் தலைவராக வரவில்லை. அவர் ஒட்டாவாவில் இருந்தார். ஆனால், பற்றிக்குடன் ஒன்ராறியோ ப்ரோக்கரஸிவ் கன்சவேடிவ் கட்சித் தலைமைக்குப் போட்டியிட்ட கிறிஸ்ரின் எலியட் 'தமிழ் மரயுத்திங்கள்' கொண்டாட்டத்திற்கு வந்திருந்தார். நினைவுப் படத்தை பார்க்க.)



இப்போது சொல்லுங்கள். நமிழ் வரலாற்றில் பொறிக்கப்படும் அளவிற்கு, கனடா மத்திய நாடாளுமன்றம், ஒன்ராறியோ மாநில சட்ட மன்றம் இவ்விரண்டிலும் 'தமிழ் மரபுத்திங்கள்' தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபோது அங்கு சமூகமளித்து அந்த மத்திய, மாநில இரண்டையும் நேரடிச் சாட்சியாக கண்டு மகிழும் பொன்னான சந்தர்ப்பம் எனக்கு மட்டும்தான் கிட்டியது. இதனால் ஒருவித கர்வம் கலந்த

பெருமை எனக்கு வருமா இல்லையா? :) (மகிழ்ச்சி)

இதனை எனக்குக் கிடைத்ததொரு 'அதிஷ்டம் கலந்த தனிப்பட்ட அனுபவம்' என ஒருபுறம்தள்ளி வைத்துவிட்டு அதற்கும் மேலேபோய் சிந்திப்போமானால், நம் அனைவருக்குமே தமிழ் மரபுத்திங்களுக்கு கனடாவில் கிட்டியிருக்கும் அங்கீகாரம் குறித்து பெருமைப்பட நிறையவே காரணங்கள் உண்டு."கனடாவில்நாம்வாழும் காலத்தில்தான் கனடாவில் தமிழுக்கு இந்த அரச அங்கீகாரங்கள் கிட்டியிருக்கிறன" என்பதையிட்டு முதலில் நாம் பெருமைப் படலாம்.

"உதால என்ன பெரிய பயன் கிடைக்கப் போகுது?" என்று என் நண்பர் ஒருவர் அலுத்துக் கொண்டார். "உது ஹரி ஆனந்த சங்கரி தன்ரை அரசியல் வளர்ச்சிக்காக செய்த காரியம்.." என்றார்.

"அப்படியே இருக்கட்டுமே... நல்லது தானே.. அதன் விளைவு என்ன என்று யோசித்துப் பாருங்கள்... நமது தமிழ் மொழியினதும், தமிழ் மரபினதும், தமிழ்ப் பண்பாட்டினதும் செழுமையையும் நாம் வாழும் நாடுகளில் அங்கீகரிக்கும் மைல்கல் அல்லவா இது. இனிமேல் ஜனவரி மாதத்தை 'நமது தமிழ் மரபுக்கு உரிய மாதம்' என கனடாவில் வாழும் அனைத்து

**போரில் வெற்றி கொண்ட ராஜேந்திர சோழன் சிங்கள மன்னனான ஐந்தாம் மஹிந்தாவைக் கைது செய்து மகிந்தாவின் பட்டத்து அரசி, இளவரசி, ஏராளமான செல்வம் என்பவற்றைக் கைப்பற்றினான். மகிந்தாவை சோழ நாடு கொண்டு வந்து சோழரின் சிறையில் அடைத்தான்.**

இனங்களையும் கொண்டாட வைக்க இதனால் முடியும். நம் தமிழ் மரபு குறித்த விழிப்புணர்வும் நாடு முழுவதும் அரச அங்கீகாரத்துடன் நடக்க இதனால் வழி ஏற்பட்டுள்ளது. எமது அடுத்த சந்ததியினர் "நாம் தமிழர்" என்று சொல்ல வைக்கும் பெருமித உணர்வை நன்கு ஊட்டலாம்" என்றேன் நான்.

"இண்டைய நிலையில நாங்கள் போர்க் குற்றம் பற்றித்தான் நாங்கள் பேசவேணும். அதைவிட்டுவிட்டு... மரபு அது இது எண்டு... உதெல்லாம் இப்ப தேவையில்லை..." என்றார் நண்பர்.

"போர்க் குற்றவாளியான மஹிந்தாவை புலிக்கொடியுடன் சென்றவர் கைது செய்து சிறையில் அடைத்த வரலாறு தெரியுமா?" என்று அவரிடம் கேட்டேன் நான். நண்பர் நே.. என்று விழித்தார். அதை ரசித்துவிட்டு, சோழ மன்னன் ராஜேந்திர சோழனின் வரலாற்றின் ஒரு பகுதியை அவருக்குச் சொன்னேன்.

கி.பி. 1014 இந்த ஆண்டில் தன் தந்தையின் மறைவுக்குப்பின், சோழ மன்னன் முதலாம் இராஜேந்திரன் அரசாட்சிக்கு வந்தான். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆட்சிக்கு வந்த இந்தத் தமிழ் மன்னன்தான் தஞ் சாவூரிலிருந்து தென்கிழக்காசிய நாடு களுக்கும் படையெடுத்து அங்கு சோழரின் புலிக் கொடியை நாட்டியவன். தனது தந்தை யாரான முதலாம் இராஜராஜ சோழன் தொடங்கிய இலங்கை மீதான படை யெடுப்பை வெற்றிகரமாக முடித்துவைக்க இலங்கைமீது படையெடுத்து சிங்கள அரசுக்கு கடும் அழிவைக் கொடுத்த மாமன்னனும் இவனே..

கிபி. 1017 1018ம் ஆண்டுகளில் நடந்த இலங்கை மீதான ராஜேந்திரச் சோழனின் படையெடுப்புக்கு வேறு காரணங்களும் உண்டு. சோழர்களின் எதிரிகளான பாண்டிய மன்னர்கள் சிங்கள மன்னர்களிடம் பாதுகாப்புக் கருதி ஒப்படைத்து வைத்ததாகச் சொல்லப்படும் இரத்தினக் கற்கள் பதித்த வாளையும், முத்துமாலையையும் மீட்டு அவற்றைச் சோழ நாட்டிற்குக் கொணர்ந்து சேர்க்கும் வீரயுத்தமாகவும் ராஜேந்திரன் இலங்கை யுத்தத்தைக் கருதியிருக்கிறான். மேற்குறிப்பிடப்பட்ட பாண்டிய நாட்டு இறைமைச் சின்னங்களை தேடுப் பறித்தெடுக்கும் ஆர்வம் பராந்தக சோழன் காலத்திலேயே சோழர்களுக்கு இருந்திருந்தாலும், ராஜேந்திரச் சோழனே அக் கனவை நிறைவு செய்து வைத்தவன்.

போரில் வெற்றி கொண்ட ராஜேந்திர சோழன் சிங்கள மன்னனான ஐந்தாம் மஹிந்தாவைக் கைது செய்து மகிந்தாவின் பட்டத்து அரசி, இளவரசி, ஏராளமான செல்வம் என்பவற்றைக் கைப்பற்றினான். மகிந்தாவை சோழ நாடு கொண்டு வந்து சோழரின் சிறையில் அடைத்தான். போர்க் குற்றவாளியாக சிறையில் அடைக் கப்பட்டிருந்த மஹிந்தா 12 ஆண்டுகாலம் சிறையிலேயே வாடி தமிழகத்தில்தான் இறந்து போனான்.

ராஜேந்திரச் சோழனின் படையெடுப் புக்குப் பின் இலங்கையில் இராணுவச் சமநிலை மாற்றப்பட்டது. போரின்போது மஹிந்தாவின் படைகள் ஈவு இரக்கமின்றி அழிக்கப்பட்டன. ஓராயிரம் ஆண்டிற்கு மேலாக சிங்கள அரசுகளின் தலை நகராகவிளங்கிய அநுராதபுரமும்இப்போரில் சோழரால் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டது. போரின் முதல்கட்டமாக அனுராதபுரத்தை தங்களது ஒரு பலங்கொண்ட இராணுவத் தளமாக மட்டும் மாற்றிய சோழர் அங்கிருந்து கொண்டேதான் இலங்கையின் தென் பகுதிகளை தாக்கிக் கைப்பற்றும் போரை ஆரம்பித்தனர். அதை வெற்றிகரமாக முடித்தும் கொண்டனர்.

'ஈழமண்டலம்' என அழைக்கப்பட்ட முழு இலங்கையையும் கைப்பற்றிய பின் சோழர்கள் இலங்கைக்கான தம் தலைநகராகபொலநறுவையைத்தேர்ந்தெடுத் தனர். ஈழ மண்டலத்தைச் சோழர் கைப்பற்றியதைக் கொண்டாடும் வகையில் பொலன்னறுவையில் சிவனுக்கு ஒரு கல்லாலான சிவாலயம் எழுப்பப்பட்டது. பொலன்னறுவை நகரின் சுவர்களுக்குள் அமைந்துள்ள இந்த அழகிய சிவாலயம் இலங்கையின் புராதனச் சின்னங்களில் இன்றளவும் நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளது. இதன் கட்டட அமைப்பைக் கவனித்து நோக்கினால் இது கி.பி 10 நூற்றாண்டுகளில் தமிழகத்தில் கட்டப்பட்ட சோழர் காலத்துக் கோயில்கள் போன்றே அமைந்துள்ளது. பொலநறுவை சோழ மண்டலததின் முக்கிய நகர்களுள் ஒன்றாயிற்று.

பிற்காலத்தில் சோழ சாம்ராஜ்யம் தேய்ந்து போகும்போது சிங்கள மன்னர்கள் மீண்டும் இலங்கை ஆட்சியை மீளக் கைப்பற்றினர் என்பது வரலாறு. அவ்வாறு ஆட்சிக்கு வந்த சிங்கள மன்னனாகிய முதலாம் விஜயபாகுகூட அனுராதபுரத்தில்தான் முடி சூட்டப் பெற்றான் என்றாலும் பொலன்னறு வையைத்தான் தொடர்ந்து தன் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்தான். அந்த அளவிற்கு பொலநறுவை ஒரு கேந்திர முக்கியத்துவமும் பாதுகாப்பும் பின்னிப் பிணைந்த நகராக மாறியிருந்தது.

இதை நான் சொல்லி முடித்ததும் என் நண்பர் அதிசயித்துப் போனார். "இதையெல்லாம் கேட்கப் பெருமையாக இருக்குதடாப்பா... இவற்றையெல்லாம் நாங்கள் மற்றைய சமூகங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமடாப்பா.." என்றார்

"இது எங்கள் தமிழ் வீரமரபின் வரலாறு. இவற்றையெல்லாம்கூட மற்றவர்களுக்கு உரிமையுடன் சொல்லத்தான் ஜனவரி மாதம் 'தமிழ் மரபுத்திங்கள்' எனப் பிரகடனப் படுத் தப்பட்டிருக்கிறது" என்றேன் நான்.



## மலையக தோட்டத்தொழிலாளர் போராட்டம்:

# நாளாந்த சம்பளம் 730 ரூபாவுக்கு இணங்கின தொழிற்சங்கங்கள்!

கடந்த இரண்டு வாரங்களாக நடந்துவந்த மலையக தொழிலாளர் போராட்டத்தை அடுத்து, தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 730ரூபாவை வழங்குவதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1000 ரூப ஊதிய உயர்வு கோரி இவ்வளவு நாட்கள் தொடர்ந்து நடாத்தப்பட்ட போராட்டம், அவர்களது கோரிக்கைட்கு நியாயமற்ற ஒரு முடிவை வழங்கும் வகையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது பற்றி கருத்து வெளியிட்ட பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திசநாயக்கா, சிறு சிறுவிடயங்கள் குறித்து இணக்கப்பாட்டை எட்ட13ஆம்திகதிஇறுதிப் பேச்சு வார்த்தை நடைபெறவுள்ளதாகவும், கூட்டுஒப்பந்தம் 15இற்கு முன் நிச்சயமாகக் கைச்சாத்திடப்படும் என்றும் தெரிவித்ததுடன் தொழிலாளர்கள் போராட்டங்களைக் கைவிட்டு அமைதியாகப் பணிக்குத்திரும்புமாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்.

730 ரூபாவை நாளொன்றுக்கான சம்பளமாக பெற்றுக்கொடுப்பதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.எனினும் எதிர்வரும் 13ஆம் திகதி மீண்டுமொரு பேச்சு வார்த்தைநடைபெறவுள்ளது. அதன்போது நாம் ஆறு வேலை நாட்களுக்கும் இத்தொகை வழங்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துவாம் எனத் தெரிவித்திருக்கிறார், கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் பிரதான தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் முத்து சிவலிங்கம். இ.தொ.கா.உதவித் தலைவர் க.கனகராஜ் அவர்களும் தோட்டத் தொழிலாளர்களை வழமைபோல் பணிக்குத் திரும்புமாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்.

கூட்டுஒப்பந்தத்தை இன்னும் தாமதிக்காது கைச்சாத்திடவேண்டும், வாய்ப்புக்களை நழுவ விடுவோமாக இருந்தால் மிகவும் மேசமான நிலைமை உருவாகும் எனத்தெரிவித்திருக்கிறார், கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும்மற்றொரு தொழிற்சங்கமான இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் (ஐ.தே.கட்சியின் தொழிற்சங்கம்) செயலாளர் வடிவேல் சுரேஷ். அதேவேளை, கடந்த புதன் கிழமை, அரசாங்க அமைச்சர்கள் மட்டத்தில் "கலந்துபேசியதற்கமையவே" இந்த முடிவுக்கு வந்தாகத்தெரிவித்திருக்கிறார் வடிவேல் சுரேஷ்.

தற்போது, 3 நாட்களுக்கு மட்டும் நாளொன்றுக்கு 730 ரூபாசம்பளம், ஏனைய 3 நாட்களுக்கு பறிக்கப்படும் கொழுந்துகளுக்கு கிலோ அடிப்படையிலான தொகை என்ற இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இந்த 730 ரூபா சம்பள உயர்வு எதிர்வரும்15 ஆம் திகதி முதல் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பள அதிகரிப்பானது,நாள் சம்பளம் 670 ரூபா, தொடர்ச்சியாக வேலை செய்தால் 60 ரூபா என்ற அடிப்படையில் வழங்கப்படும். ஆனால் இதற்கான நிபந்தனைகள் என்ன என்பது இன்னமும் வெளியிடப்படவில்லை. அதேவேளை இதுவரை காலத்துக்கான சம்பள நிலுவவை வழங்கப்படப் போவதில்லை என்றே தெரிகிறது.

தொழிற்சங்கள் முன்வைத்த 1000 ரூபா சம்பள உயர்வு, ஒன்றரைவருட சம்பள நிலுவை, வாரத்திற்கு ஆறு நாட்கள் வேலை என்றகோரிக்கைகளை முதலாளிமார் சம்மேளனம்புறக்கணித்திருக்கிறது. இதற்கு சர்வதேசசந்தையில்விலைவீழ்ச்சியைகாரணமாகக் காட்டியிருக்கிறது முதலாளிமார் சம்மேளனம். தொழிலாளர்கள் சம்பள உயர்வு.

எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ள பேச்சு வார்த்தையில் ஆறு நாள் வேலை, மற்றும் தொழிலாளர் நலன் சார்ந்தவிடயங்கள் பேசப்படவுள்ளன எனத்தெரிவிக்கப்பட்டாலும் முடிவுகளில் பெரும் மாற்றங்கள் ஏற்படப் போவதில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது. 3 நாள் வேலையை 4 நாட்களாக உயர்த்தமுயற்சி மேற்கொள்ளப்படலாம்.

கிடைக்கின்ற தகவல்களின் படி, 730 ரூபா சம்பளம் என்றநிலையில் முதலாளிமார் சம்மேளனம் உறுதியாக இருந்துவந்ததாகவும், இதனை தொழிற்சங்கங்களும் ஏற்கும் நிலையிருந்ததாகவும், எனினும் தொழிற்சங்கங்கள் 'உறுதியாகபேச்சு வார்த்தைகளை நடாத்தி வருகிறோம்' என அறிவித்திருந்ததுடன், தொழிலாளர் போராட்டங்களைபின்னின்று ஊக்குவித்து வந்ததாகவும் அறிய முடிகிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தனது அரசியல் பலத்தைகாட்டும் வகையில் தொழிலாளர் போராட்டங்கள் நடைபெறத் தூண்டிவிட்டு, வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது என்பதே 13நாள் தொழிலாளர்களின் போராட்டத்தின் பின்னாலுள்ளதொழிற்சங்க அரசியல்.

அவர்கள் எதிர்பார்த்தற்கும் மாறாக போராட்டங்கள் விரிவுபட்டுச்சென்றிருக்கிறது. இந்த அறிவிப்பு வெளிவந்த பின்னரும்பல பிரதேசங்களில் 1000 ரூபா சம்பள உயர்வு, சம்பள நிலுவைவழங்கப்பட வேண்டும், வாரத்திற்கு ஆறு நாட்கள் வேலை என்றகோஷங்களை முன்வைத்து தொழிலாளர்கள் போராட்டங்கள் நடைபெற்றுள்ளன.

கூட்டு ஒப்பந்தப் பங்காளிகளாகவுள்ள இரு பிரதானதொழிற்சங்கங்களும் போராட்டத்தை நிறுத்தக்கோரியிருக்கிறது அரசாங்கமும் போராட்டங்களை நிறுத்த அழுத்தங்களைக் கொடுத்து வருகிறது.

இந்த நிலையில், தோட்டத் தொழிலாளர் போராட்டங்கள்தொடருமா? என்பது கேள்வியே. இறுதியில், கடந்த 13 நாட்களாக நடைபெற்ற தோட்டத் தொழிலாளர்களின் உணர்வு பூர்வமானபோராட்டங்கள் வழமையாக நடைபெறுகிற 'தொழிற்சங்கப்பாணி' நடவடிக்கையே என்றாகிவிட்டிருக்கிறது.

– விஜே

# ஈழச் செய்திகள்




**மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர்,பெண்கள் மீதான வன்முறை அதிகரித்திருக்கிறது!.**
**- உதவி மாவட்டசெயலர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர் பெண்கள் துஷ்பிரயோகம் அதிகரித்திருக்கிறது எனத் தெரிவித்திருக்கிறார் உதவி மாவட்டசெயலர்.கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் கடந்தசனிக்கிழமை கிறீன் கார்டன் விடுதியில் இடம் பெற்ற, பெண்பொலிஸ் அதிகாரிகளுக்கான செயலமர்வில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்திருக்கிறார் உதவிமாவட்ட செயலர் எஸ்.ரங்கநாதன்.

அவர் தனதுரையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் பாலியல்துஷ்பிரயோகம் அல்லது வன்முறை அதிகரித்திருப்பதற்கு பதிவுசெய்யும் முறைமை மேம்பட்டிருக்கிறதா? அல்லது முன்னரைவிட துஷ்பிரயோகம், வன்முறை வீதம் அதிகரித்திக்கின்றதா என்பது புரியவில்லை. எப்படியிருந்தாலும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் இடம் பெறுகின்றன அல்லது அதிகரித்திருக்கின்றன என்பது ஒரு சிறந்த சமூகக்கட்டமைப்புக்கு ஆரோக்கியமானதல்ல எனத்தெரிவித்திருக்கிறார்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்றுமாதங்களிற்குரிய பதிவுகளை கவனித்தால்,அறிக்கையிடப்பட்டதன் அடிப்படையில் சுமார் 250 வன்முறைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆண்களை விட இரண்டரை மடங்கு அதிகமாக பெண்கள் பாதிக்கப் படுவது கண்டறியப்பட்டுள்ளது. ஆனால்,இவை வெளிப்படையாகப் பதிவுகளுக்கு வந்தவன்முறைச் சம்பவங்கள்தான். இவை தவிர வெளியில் வராத பிரச்சினைகள் இன்னும் இருக்கக்கூடும் எனவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு சரியான நிவாரணங்கள், சட்டஉதவிகள் கிடைக்கின்றதா? என்பதுவும் பாதிக்கப்பட்டவரைமீண்டும் சமூகத்தோடு இணைப்பதற்கு தற்போதுள்ளவழிமுறைகள் போதுமானதாக இருக்கின்றனவா? என்பதுவும்ஒரு கேள்விக்குறியே எனவும் தெரிவித்திருக்கிறார்.

**தமிழ் மக்கள் சமஷ்டியில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை என லால்விஜயநாயக்கா கூறுவது அப்பட்டமான பொய்**
**- சுரேஷ் பிரேமச்சந்திரன்**

தமிழ் மக்கள் சமஷ்டி தீர்வில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை எனஅரசியலமைப்பு திருத்தத்துக்கான மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர் லால்விஜயநாயக்கா, கண்டி மல்வத்தைபீடத்தின் மகாநாயக்க தேரரிடம் தெரிவித்திருப்பது அப்பட்டமான பொய் எனத் தெரிவித்திருக்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

அண்மையில்கண்டி மல்வத்தைபீடத்தின் மகாநாயக்கதேரரைச் சந்தித்து கலந்துரையாடிய வேளை, லால்விஜயநாயக்கா இவ்வாறு கூறியிருந்தமை தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் மக்கள்பேரவை அரசியலமைப்பு திருத்தத்துக்கான மக்கள் கருத்தறியும் குழுவிற்கு சமஷ்டி தீர்வத்திட்டத்தை கையளித்துள்ளது. அதுமட்டுமன்றி, வடக்கு கிழக்கு மக்கள் கருத்தறியும் அமர்வுகளில் சமஷ்டி குறித்து மிகத்தெளிவாக குறிப்பிட்டுள்ளனர். அந்தக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான வடமாகாண சபைஎதிர்க்கட்சித் தலைவர் தவராசா, அமர்வுகளின் போது தமிழ்மக்களில் 97 வீதமானவர்கள் சமஷ்டி தீர்வு குறித்துகுறிப்பிட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில், லால்விஜயநாயக்கா தமிழ் மக்கள்சமஷ்டி தீர்வில் ஆர்வம் செலுத்தவில்லையெனத் தெரிவிப்பதுஎன்ன நோக்கத்திற்கு எனக் கேட்கின்றோம். அவருக்கு சமஷ்டிதீர்வு விருப்பமின்றி இருக்கலாம். அதற்காக பரிந்துரையில்மக்கள் சொன்ன விடயத்தை குறிப்பிடுவது அவசியம் எனவும்தெரிவித்திருக்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

லால் விஜேநாயக்க ஏற்கனவே, சமஸ்டி அடிப்படையிலான தீர்வு நாட்டில் தற்போதுள்ள ஒற்றையாட்சி முறையை பலவீனப்படுத்தும் என்பதால் அது ஏர்றுக்கொள்ள முடியாதது என்று, சமஸ்டி அடிப்படையிலான தீர்வு முன்மொழிவை தமிழ்மக்கள் பேரவையினர் சமர்ப்பித்த போதே அதை நிராகரித்திருந்தது தெரிந்ததே!.

**"இந்தியாவுடன் இணைத்து விட்டால் நாம் எமக்கானவாழ்வாதார, பொருளாரத்தை கட்டியெழுப்ப முடியும்" - அனலைதீவு மக்கள்.**

எம்மை இந்தியாவுடன் இணைத்து விட்டால் நாம் எமக்கானவாழ்வாதார, பொருளாரத்தை கட்டியெழுப்ப முடியும் எனத்தெரிவித்திருக்கிறார்கள் அனலைதீவு மக்கள்.

கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்,ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் மற்றும்உத்தியோகத்தர்கள் நடாத்திய, யாழ்ப்பாணம் அனலைதீவு மற்றும் எழுவைதீவு மக்களின் தேவைகள் நிலைமைகள் தொடர்பாக ஆராயும் கூட்டத்தில்,இந்தக்கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள் அனலைதீவு மக்கள்.

இக்கூட்டத்தில், தற்போதைய சூழ்நிலையில் தீவகத்திற்கானபோக்குவரத்து வசதிகள் குறைவாக இருக்கின்றது. போக்குவரத்து வசதிகள் தொடர்ந்தும் அபாயகரமானதாக இருக்கிறது. வைத்தியசேவைகளைப் பூரணமாகபெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. புலம்பெயர்ந்தோரின்உதவியுடன் வைத்தியசாலைக்கான கட்டட வசதிகள் செய்யப்பட்ட போதிலும் வைத்தியர்கள் தங்கிநின்று சிகிச்சையளிப்பதில்லை.

கல்வியிலும் நிரந்தரமான ஆசிரியர்கள் சிலரேயுள்ளனர். இதனால் மாணவர்கள் கல்வியில்முன்னேற முடியாதுள்ளது. அபிவிருத்தித் திட்டங்கள் மந்தமான சூழ்நிலையிலேய காணப்படுகின்றன. தீவின் கரையோரங்கள்கடலரிப்பை அதிகளவில் சந்தித்துள்ளது எனத் தமது குறைகளைவிபரித்திருக்கிற மக்கள், நாம் பல தரப்பட்ட கோரிக்கைகளைமுன் வைத்தாலும் அவை நிறைவேற்றப்படாத சூழலேகாணப்படுகின்றது எனவும் தெரிவித்திருக்கிறார்கள்.

மேலும், யுத்தத்திற்குப் பின்னரான எமக்கான அடிப்படைவசதிகள் பூர்த்தி செய்யமுடியாத நிலையே காணப்படுகின்றது. எனவே, எம்மை இந்தியாவுடன் இணைத்து விட்டால் நாம் எமக்கான வாழ்வாதார, பொருளாரத்தை கட்டியெழுப்ப முடியும் எனத் தெரிவித்திருக்கிறார்கள் மக்கள்.

**சிங்கள மக்களை மிரட்டினார் - முன்னாள் விடுதலைப் புலிஇயக்க உறுப்பினர் கைது**

வவுனியா - கொக்குவெளி படைவீரர் குடியிருப்புத் திட்டத்தில்இருக்கும் சிங்கள மக்களை மிரட்டினார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் விடுதலைப் புலி இயக்க உறுப்பினரும் அவரதுநண்பரொருவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அண்மையில், வவுனியாவிலுள்ள கொக்குவெளி படைவீரர் குடியிருப்புத் திட்டத்தில்இருக்கும்30 அளவிலான சிங்களக் குடும்பங்கள்,தமது குடியிருப்புக்குள் நுழைந்த சின்னவன்எனப்படும்முன்னாள் விடுதலைப் புலி இயக்க உறுப்பினரும்சகாக்கள் சிலரும், ஆயுதங்களைக் காட்டி தம்மை அச்சுறுத்தியதாக தெரிவித்து வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுமிருந்தனர். வவுனியா பொலிஸார் வழங்கிய பாதுகாப்பு உத்தரவாதத்தினை அடுத்து அவர்கள் தமது போராட்டத்தினைகைவிட்டிருந்தனர்.

இதனையடுத்தே, கடந்த ஞாயிற்றுக் கிழமை சின்னவனும்அவரது நண்பர் ஒருவரும் வவுனியா பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு, வவுனியா நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்பட்டதுடன் விளக்க மறியலில் வைக்கப்பட்டுமுள்ளனர்.

தனிப்பட்டவருக்குச் சொந்தமான நிலத்தில் அத்துமீறி கட்டடப்பட்டதாக கூறப்படும் இந்த வவுனியாகொக்குவெளி(கொக்குஎலிய என பெயர் மாற்றம் செய்யப்பட்ட) படைவீரர் குடியிருப்புத் திட்டம், தமிழர்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் அண்மையில் திறந்துவைக்கப்பட்ட சிங்களப் படைவீரருக்கான குடியேற்றமாகும்.





# 'பிரபாகரனின் பாதை வேறு... என் வழியில் செல்ல விடுங்கள்'

## அதிரடி குறையாத மனோ கணேசன்

நிதர்சன்

பிரபாகரனின் பாதை வேறு. சம்பந்தனின் பாதை வேறு. எனது பாதை வேறு. ஏந்த பாதை வெற்றி பெறுமென்பதை சொல்ல முடியாது. அதனால் எனது பாதையில் பயணிக்க என்னை விட்டுவிடுங்கள் என்கிறார் தேசிய சகவாழ்வு,கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன்.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அமைச்சர் மனோ கணேசன் தீபத்திற்கு பிரத்தியேக செவ்வி வழங்கியிருந்தார். சொல்லிலும், செயலிலும் அதிரடியை காண் பிப்பது மனோ கணேசனின் கடந்தகாலம். அமைச்சரான பின்னரும் அது குறையாமல் பேசினார்.




**தீபம்: ஆட்சி மாற்றத்தின் முக்கிய பங்குதாரர்களில் நீங்களும் ஒருவர். ஆட்சி மாற்றத்தின் பின்னரான நிலைமையை எப்படி பார்க்கிறீர்கள்?**

**மனோ கணேசன்:** அரசியல் கைதிகள் விடயம், காணி விடயம், இனப்பிரச்சனைக் குத் தீர்வு ஆகியவை தமிழ் மக்களின் பெரிய பிரச்சனைகள். இந்தப் பிரச்சனைகளுக்கான தீர்வுகள் முழுமையாக எட்டப்படவில்லை. அதனை நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனாலும் கடந்த காலத்தில் மகிந்த ஆட்சிக் காலத்தை விட இன்றைக்கு பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக தீர்வை நோக்கியதான நகர்வு இருப்பது சிந்திக்கின்ற எவருக்கும் புரியும். எந்தவித நகர்வுமே இல்லை என்று சொல்வதற்கு நான் முட்டாளும் அல்ல.பொய்யனும் அல்ல. அத்தகையதொரு நகர்வு இருக்கின்ற காரணத்தினால் அந்த நகர்வை இன்னும் அதிகரித்த வேகத்துடன் நகர்த்திக் கொண்டு செல்வதற்காகவே அரசாங்கத்திற்குள்ளிருந்து நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

**தீபம்: தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சனைகள், இனப்பிரச்சனை தீர்க்கப் படவில்லை. இப்படியான சூழ்நிலையில் சகவாழ்வை ஏற்படுத்த முடியுமென நம்புகின்றீர்களா?**

**மனோ கணேசன்:** தேசிய சகவாழ்வு என்பது நல்லதொரு கனவு. அந்தக் கனவை நினைவாக்குவதற்கு எல்லோருமே ஒன்று பட்டுப் பணியாற்ற வேண்டும். தமிழ் மக்கள், சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள் மற்றும் அந்த மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தலைவர்கள் இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்படுவதனூடான பிரச்சனைகளுக்குத் தீர்வையும் ஏற்படுத்த முடியும். சகவாழ்வையும் ஏற்படுத்த முடியு மென நம்புகின்றேன்.

**தீபம்: இனப்பிரச்சனைக்கான தீர்வை ஏற்படுத்துவதில் தமிழ்த் தரப்புக்கள் தமது நிலைப்பாட்டை தெரிவித்திருக்கின்றநிலை யில் பிரதான கட்சிகளிடமும் சரி பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களிடமும் சரி ஒருமித்த கருத்துக்கள் காணப்பட வில்லை. இப்படியான நிலையில் தமிழ் மக்கள் விரும்புகின்ற எவ்வாறான தீர்வை ஏற்படுத்த முடியுமென நினைக்கின் றீர்களா?**

**மனோ கணேசன்:** இனப்பிரச்சனைக் கானதீர்வை ஏற்படுத்துவதில் அனைவருக்கும் பொறுப்பு இருக்கின்றது. அதனடிப்படையில் தீர்வை நோக்கியே நகர்ந்து கொண்டு செல்கின்றோம். அதிகாரப் பகிர்வை ஏற்படுத்துவதற்கு சிங்கள மக்கள் உடன்பட வேண்டும். அதேபோல இந்த நாடு பல இன, பல மத என்ற பன்மைத் தன்மைக்கும் சிங்கள மக்கள் உடன்பட வேண்டும். அதேபோல தமிழ்த் தரப்புக்களும் தமது தீர்வை நோக்கிப் பயணித்து அதனைத் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த அதிகாரப் பகிர்விற்கும் பன்மைத் தன்மைக்கும் சிங்கள மக்கள் உடன்படுவதனூடாக சகவாழ்வை ஏற்படுத்த முடியும். இவ்வாறு அனைத்துத் தரப்பினர்களும் இணைந்து நீதியாகவும் நியாயமாகவும் செயற்படுகின்றதனூடாக தமிழ் மக்கள் விரும்புகின்ற தீர்வை ஏற்படுத்த முடியும்.

**தீபம்:இனப்பிரச்சனைக்கான தீர்வை ஏற்படுத்துவதில் எத்தகைய சவால்களை காணப்படுகின்றன?**

**மனோ கணேசன்:** தனியொரு நாட்டிற் கான ஆயுதப் போராட்டத்தை தமிழ் மக்கள் மீளவும் ஆரம்பித்து விடுவார்களா என்ற அச்சம் சிங்கள மக்கள் மத்தியில் இருக் கின்றது. அது நியாயமான அச்சம். அந்த அச்சத்தைப் போக்குகின்ற கடப்பாடு தமிழ் மக்களுக்கும் இருக்கின்றது. அதேபோன்று தமிழ் மக்களுக்கும் அச்சம் இருக்கின்றது. ஆகவே தமிழ் மக்களது அச்சத்தைப் போக்குகின்ற கடப்பாடு சிங்கள மக்களுக்கும் இருக்கிறது. இந்த அச்சம்தான் இன்றைக்கு பிரதான சவாலாக காணப்படுகின்றது.

இவ்வாறு இரண்டு தரப்பினர்களுக்கும் இருக்கின்ற அச்சத்தைப் போக்க வேண்டும். இரு தரப்பினதும் அச்சத்தைப் போக்கும் வகையில் புரிந்துணர்வு ஏற்பட வேண்டும். இதனூடாகவே சகவாழ்வும் சாத்தியம். இந்த சகவாழ்வு ஏற்பட்டால்தான் ஐக்கியமும் ஒருமைப்பாடும் ஏற்படும். ஆகவே ஐக்கியத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் குறுக்கு வழி ஏதும் கிடையாது. இதுதான் நேர் வழி.

**தீபம்: காணாமற்போனோர் மற்றும் சிறைக்கைதிகள் விடுதலை தொடர்பில் கடந்த காலங்களில் நீங்கள் முன்நின்று செயற்பட்டு வந்திருந்தீர்கள். தற்போது அமைச்சராகிவிட்டீர்கள். இப்பொழுது தான் அவற்றை இலகுவாக செயற்படுத்த லாம். எனினும், நீங்களும் அதில் அக்கறையில்லாதிருப்பதாக அவர்களது உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனரே?**

**மனோ கணேசன்:** குற்றச்சாட்டுக்களை சொல்பவர்கள் சொல்லிக் கொண்டுதான் இருப்பார்கள். நாம் எமது செயற்பாடுகளை மேற்கொண்டுதான் வருகின்றறோம். ஆனால் இன்றைக்கு போராட்ட வடிவங்கள் மாறியுள் ளதே தவிர போராட்டம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

ஒருகாலத்தில் பிரபாகரன் ஆயுதம் தூக்கிப் போராடினார். தந்தை செல்வா உள்நாட்டில் ஒப்பந்தங்களைச் செய்து போராடி னார்.தற்போது சம்மந்தன் அவர்கள் சர்வதேச அனுசரணையுடன் ஒப்பந்தம்; செய்து போராடி தீர்வு காணுவோமென்ற பாதை யிலே பயணிக்கின்றார். அதேபோல நான் சிங்கள மக்களுக்கு இந்த விடயங் களை எடுத்துக் கூறி சிங்கள தரப்பி லுள்ள பெருள்திரளான அரசியல்வாதிகள், கலைஞர்கள், மதத் தலைவர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர் ஆகியோர் மத்தியில் தொடர்ச்சியாக கலந்துரையாடல் களை நடத்திக் கொண்டிருக்கின்றேன். நான் தமிழ் மக்கள் மத்தியில் சொல்வதைத்தான் சிங்கள மக்கள் மத்தியிலும் சிங்களத் தரப்பினர்கள் மத்தியிலும் சொல்லுகின்றேன். அது எனது பாதை.

எனது பாதை சகவாழ்வு பாதை. அதேபோல சம்மந்தரின் பாதை சர்வதேச அனுசரணையுடன் ஒப்பந்தப்பாதை, தந்தை செல்வாவின் பாதை உள்நாட்டு ஒப்பந்தப் பாதை, பிரபாகரனின் பாதை ஆயுதப் போராட்டப்பாதை. ஆகவே எந்தப் பாதை வெற்றி பெறுமென்று சொல்ல முடியாது. நான் எனது பாதையில் பயணிக்கின்றேன். என்னை என்பாதையில் பயணிக்க விடுங்கள்.

**தீபம்: புதிய அரசியலமைப்பினூடாக தீர்வு ஏற்படும் சாத்தியமுள்ளதா?**

**மனோ கணேசன்:** தீர்வு ஏற்படுமென்பது நம்பிக்கைதான். நம்பிக்கைதான் எங்களை வாழ வைத்துக் கொண்டிருக்கின்றது. நடக் காது, முடியாது, சரிவராது என்று நினைத் துக் கொண்டிருந்தால் ஒன்றும் செய்ய முடியாது. நம்பிக்கையுடன் செயற்பட வேண்டும். நம்பிக்கைதான் பலம். அதற்கமை யவே நான் செயற்பட்டுக் கொண்டிருக் கின்றேன்.

## பெண்ணாக மாறிய நடிகர்!

பொலிவூட்டின் பிரபல நடிகர், மொடல் கவுரவ் அரோரா. இவர் இப்பொழுது பெண்ணாக மாறிவிட்டார். கவுரி அரோரா என பெயரையும் மாற்றிவிட்டார். தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டபோது தான் பெண்ணென்பதை உணர்ந்ததாக கூறியுள்ளார். பெண்ணாக மாற தேவையான அறுவை சிகிச்சைக்காக உடல்ரீதியாக தயாராகிவிட்டதாகவும், தேவையான மருந்துகள் சாப்பிட்டு வருவதாகவும் கூறியுள்ளார். பெண்ணாக மாற பலமுறை முயற்சித்ததாகவும், பெற்றோர் மற்றும் சமூகத்திற்கு பயந்து அந்த முடிவை கைவிட்டதாகவும் கூறியுள்ளார். இந்த மனஉளைச்சலில் தற்கொலைக்கு முயன்றதாகவும் கூறியுள்ளார்.

## வரலாற்றில் விஜய் சேதுபதி!

விஜய் சேதுபதி நடிப்பில் 'றெக்க' படம் வெளியானது. அந்த படத்தோடு விஜய் சேதுபதி நடிப்பில் இந்த வருடம் 6 படங்கள் வெளியாகியுள்ளது. அதில், முக்கால்வாசி படங்கள் நல்ல வசூலை பெற்றுள்ளன. இந்நிலையில், எந்த நடிகருக்கும் கிடைக்காத பெருமை ஒன்று அவருடைய படங்களுக்கு கிடைத்துள்ளது. அது என்னவென்றால், விஜய் சேதுபதி நடித்த 'தர்மதுரை' படம் கடந்த ஓகஸ்ட் 19ந் தேதிகதி ரிலீஸ் ஆனது. அதைத் தொடர்ந்து அவர் நடித்த 'ஆண்டவன் கட்டளை' படம் செப்டம்பர் 23ந் திகதி வெளியானது. கடந்த 7ந் திகதி 'றெக்க' படமும் வெளியானது. இரண்டு மாதங்களுக்குள் அவர் நடிப்பில் மூன்று படங்கள் வெளியாகியுள்ள நிலையில், சென்னை சத்யம் திரையரங்கில் க, 'றெக்க' படடன.  சத்யம் திரையரங்க வரலாற்றிலேயே ஒரு நடிகர் நடித்த மூன்று படங்கள் திரையிடப்படுவது இதுதான் முதல்முறை என்று கூறப்படுகிறது.



## ரஜினிக்கு பின் சிவகார்த்திகேயனா?

தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், தியேட்டர் உரிமையாளர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகிவிட்டார் சிவகார்த்திகேயன். அவரது படமென்றால் கண்ணை மூடிக்கொண்டு காசை கொட்ட தயாராக உள்ளனர் அனைவரும். இதனால்தான் ரெமோ படத்தை பெரியளவில் தயாரித்தார்கள். இந்தபடத்தை ஜப்பானில் வெளியிடும் உரிமையை மெட்ராஸ் மூவிஸ் நிறுவனம் டோக்கியோ பெற்றுள்ளது. ரஜினி தவிர்ந்த மற்றைய நடிகர்களின் படங்கள் யொகோயமா (Yokoyama) டோக்கியோ (Tokyo)  பிரதேசங்களில் மட்டும்தான் வெளியாகும். ரஜினி படம் மட்டும்தான் நகோயா பிரதேசத்தையும் சேர்த்து மூன்றாவது இடத்திலும் வெளியாகும். சிவகார்த்திகேயன் படமும் இந்த இடத்தில் வெளியாகவுள்ளதாம்.

## பிஸியான பிரியா!

பிரியா ஆனந்த் நினைத்த மாதிரி திரையுலகம் இல்லை. எவ்வளவு முயன்றும் முன்னணி நடிகையாக முடியவில்லை. பெரிய ஹீரோக்களின் கடைக்கண் பார்வையும் கிட்டவில்லை. இரண்டாம் நிலை ஹீரோக்களுடன்தான் ஜோடி சேர முடிகிறது. மலையாளத்தில் இருந்து வரும் இளம்நாயகிகளின் தாராள கவர்ச்சிதான் தனக்கு வினையாகிறதென முணுமுணுக்கும் பிரியா, இந்திப்பக்கம் முயற்சி செய்ய ஆரம்பித்துள்ளார். இதற்கு உடனடி பலனும் கிடைத்துள்ளது. இதற்காக 90 நாள் கால்சீட் கொடுத்துள்ளாராம்.


To support Harvard Tamil Chair
Hosted by Canadian
Agni Proudly Presents
NAVA LAW
PROFESSIONAL CORPORATION
agni
MUSICAL
SHOW
EST. 1991
COMPUTEK
COLLEGE
Sunday
Oct 16
2016
6:30 pm
Thamil Isai Kalaa Manram
1120 Tapscott Rd, Unit 3,4 & 5
Scarborough. ON M1X 1E8
கூடிய விளக்கங்களுக்கு அழையுங்கள்:
416 707 9104 / 647-220-5555 / 416 240 0078
CTC
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

# நான் பானுஜன் அல்ல; மோனிஷா!

## ஒரு திருநங்கையின் வாழ்வியல் தொடர் 6



இந்த சமூகத்தில் நான் சந்தித்த வசைகள், அவமானங்களிற்கு நிகராக வீட்டில் கொடுமைகளை அனுபவித்தேன். திருநங்கை என்பது அவமானம் என்பதாக வீட்டில் உணர்வதால் இந்த கொடுமை.

அனேகமாக இன்றும் நான் இரண்டக வாழ்க்கைதான் வாழ வேண்டியுள்ளது. ஒரு திருநங்கையாக சுதந்திரமாக உலாவுவதும், பேசுவதும், நடப்பதும் வீட்டிற்கு வெளியில் தான். வீட்டுக்குள் அந்த சுதந்திரம் கிடையாது. வீட்டுக்குள் பானுஜனாகத்தான் வாழ வேண்டியிருந்தது.

பெண்களிற்கான உடைகளை வீட்டில் மறைத்து வைத்திருப்பேன். அலங்காரப் பொருட்களையும் மறைத்து வைத்திருப்பேன். என் உணர்வுகளையும், உடைகளையும் மறைத்து வைத்திருப்பதுதான் வாழ்க்கையாக இருந்தது.

அந்த ஆடைகளை அணிந்து, ஒரு பெண்ணாக வெளியில் செல்லும் கணத்திற்காக மனது காத்திருக்கும். பெண்களின் ஆடை அணிந்து, பெண்ணாக அலங்காரம் செய்து வீட்டைவிட்டு வெளியில் செல்லும் கணம்தான் வாழ்வின் மகோன்னத பொழுதாக அமையும். அது எல்லா நாளும் வாய்க்காது. வீட்டிலுள்ள எல்லோரையும் போக்குகாட்டுவதென்றால் சும்மாவா?

எனது உடைப்பைக்குள் பெண்களிற்கான உடைகளும், அலங்காரப் பொருட்களும் இருக்கும். யாருமறியாமல் அதை மலசல கூடத்திற்குள் எடுத்துச்சென்று, உடைமாற்றிக் கொள்ள வேண்டும். யாருமறியாமல் வீட்டின் பின்பக்கத்தால் வெளியேறி வீதிக்கு செல்ல வேண்டும். இந்த முயற்சிகள் கிட்டத்தட்ட உயிரைப்பணயம் வைப்பதை போன்றவை.

யாரும் கண்டுவிட்டால் அவ்வளவுதான். அடி, உதைதான். இரும்புக்கம்பியாலும்; அடிவாங்கியிருக்கிறேன்.

வீதியில் யாரும் கண்டாலும் அடிதான். அப்பா, தம்பி, நெருங்கிய இரத்த உறவுகள் என பலரின் அடிக்கு பயந்து வாழ வேண்டிய கொடூரநாட்கள் அவை. இத்தனை தடைகளையும் கடந்து, வீதிக்கிறங்கும்போதுதான் ஒரு நிறைவு பிறக்கும். இந்த உலகம் எனக்கானதாகவும் தோன்றும்.

திருநங்கையாக எனது உணர்வுகளை வெளிப்படுத்த ஆரம்பித்த பின்னர் ஒருநாள் கூட யாரும் வீட்டில் ஆறுதலாக கதைத்ததில்லை. ஒரு போர்க்களத்தில் வாழ்வதை போலத்தான் வாழ வேண்டியிருந்தது. எதிரிகளை எதிர்கொள்ள வியூகம்வகுப்பதைபோல ஒவ்வொரு கணமும் வியூகம் வகுக்க வேண்டியிருந்தது. போர்க்களத்திலேயே வாழ்வது மிகக்கொடுமையானது. அதனால் பெரும்பாலும் அறையை பூட்டிவிட்டே இருந்துவிடுவேன்.

இப்படியேவாழ முடியாதென்ற முடிவிற்கு வந்தபோது வீட்டை விட்டு வெளியேற முடிவு செய்தேன். ஆனால் பதினெட்டு வயதுதான் ஆகிக்கொண்டிருக்கும், திருநங்கையாக உள்ள, திருநங்கையென்பதாலேயே படிப்பை தொடர முடியாத ஒருத்தியால் எங்கு போக முடியும்? சமூகம் என்னை எப்படி எதிர்கொள்ளும்? எப்படி எதிர்நீச்சலிடுவது? இப்படி ஆயிரம் கேள்விகள். இதனால் அம்மம்மாவிடமே சென்றேன்.

என் வாழ்வில் எல்லாமாக அவர்தான் இருக்கிறார். இந்த உலகத்தில் என்னை புரிந்து கொண்ட, என்னையும் அங்கீகரித்த முதல் மனிதப் பிறவி அவர்தான். மிகச்சின்ன வயதில் திருநங்கையென்ற

**அம்மம்மாவிற்கு அப்பால் என்னை அதிகம் பாதுகாத்தது காவல்த்துறையும், சட்டமுமே. பதினைந்தாவது வயதில் கொலை செய்யப்பட்டு விடுவேன் என்ற அச்சத்தில் காவல்நிலையம் ஓடிச்சென்றேன். இன்றுவரை அங்கு அடைக்கலம் புகுவது தொடர்கிறது.**

அடையாளத்துடன், குடும்ப எதிர்ப்பை சமாளிக்க முடியாமல் திண்டாடி, அடுத்து என்னவென தெரியாமல் இருந்த என்னை அணைத்துக் கொண்டது அவர்தான்.

அவர் இல்லாமல் இருந்திருந்தால், நான் இருந்திருப்பேனோ தெரியாது. இந்த தொடரும் இருந்திருக்குமோ தெரியாது.

அவர் ஒரு சமூக அறிவுள்ள, புரட்சியாளர் கிடையாது. எல்லா வயோதிக பெண்மணிகளை போலவும் சிந்திக்க, பேச தெரிந்தவர்தான். ஆனால் கடவுளை நம்புகிறார். கடவுளின் படைப்புக்களை புரிந்து கொள்கிறார். நான் திருநங்கையானதற்கு யார்தான் என்ன செய்ய முடியும், இருக்கும்வரை நான் பார்த்துக் கொள்கிறேன் என்றுதான் என்னை அரவணைத்தார்.

எனக்கு அடைக்கலம் கொடுக்ககூடாதென உறவுகள் அவரை நச்சரித்தபடியே இருக்கிறார்கள். என் ஒருத்திக்காக எல்லா உறவுகளையும் எதிர்க்க துணிந்தார்.

அம்மம்மாவிற்கு அப்பால் என்னை அதிகம் பாதுகாத்தது காவல்த்துறையும், சட்டமுமே. பதினைந்தாவது வயதில் கொலை செய்யப்பட்டு விடுவேன் என்ற அச்சத்தில் காவல்நிலையம் ஓடிச்சென்றேன். இன்றுவரை அங்கு அடைக்கலம் புகுவது தொடர்கிறது. நான் அடைக்கலம் புகுந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் காவல்த்துறையினர் மனிதர்களாக நடந்தார்கள். சட்டத்தின் துணையுடன் என்னை பாதுகாத்தார்கள்.

திருநங்கைகள் குறித்த விழிப்புணர்வை எனது குடும்பத்தில் ஏற்படுத்த அவர்கள் எவ்வளவோ முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த தொடர் எழுத ஆரம்பித்த பின்னர் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும்பதிவிட வேண்டும். இந்த தொடரின் முதலாவது பகுதி வெளியானது. அடுத்த நாள் நான் காவல்நிலையம் ஓடிச்செல்ல வேண்டியிருந்தது. **(தொடரும்)**

**– மோனிஷா**

---

**7-ம் பக்க தொடர்ச்சி**

(chlorofluorocarbons (CFCs)) என்றே கூறுகிறோம். இவை சூரிய வெப்பத்தை பூமியின் மேற்புறத்திலிருந்து வெளியேற முடியாமல் தடுத்து வைத்துள்ளன. மேலும் கரி, எரிவாயு, எண்ணெய் ஆகியவற்றை எரிப்பதன் மூலம் மனிதர்கள் இந்த வெப்பத்தை மேலும் அதிகப்படுத்தியுள்ளார்கள். காடுகளை அழிப்பதாலும் கரியமில வாயுவை உண்ணும் மரங்களை நாம் அழிக்கிறோம். எல்லாமாகக் கூடி நம்முடைய காற்று மண்டலத்தில் கரியமில வாயுவின் அளவு மிக அதிகமாகிவிட்டது. இதுவே வெப்பம் அதிகரிக்கக் காரணம்.

முன்னாள் அமெரிக்கத் துணையதிபர் அல் கோர் வெப்ப மண்டலம் சூடாவது பற்றி அதிக அக்கறையுள்ளவர். இவர் இது பற்றி எழுதிய நூல் “விளிம்பில் உலகு” (Earth in the Balace). இந்த நூலை ஒட்டி பின்னர் அவர் தயாரித்த திரைப்படம் “ஒரு தொல்லைப்படுத்தும் உண்மை” (An Inconvenient Truth). அதாவது இந்த உண்மைகளை எதிர்கொள்வதை மனிதர்கள் ஒரு தொல்லையாக நினைக்கிறார்கள் என்பது அதன் பின் உள்ள பொருள்.

மாறிவரும் பருவநிலை பற்றிய அபாயத்தை மனிதர்கள் எதிர்கொள்ள மறுக்கிறார்கள் என்பதை உலகுக்கு உறைக்கும் வகையில் உணர்த்தியவர் அல் கோர். அந்த முயற்சிக்குப் பிறகுதான் உலகு விழித்துக்கொண்டது என்று சொல்லலாம். 1997இல் ஐக்கிய நாட்டு மன்றத்தின் முயற்சியில் ஜப்பானின் கியோட்டோவில் பூமி வெப்பத்தைத் தணிக்கும் நோக்கத்தில் பெரும் மாநாடு ஒன்று கூட்டப்பட்டது.

அதில் காணப்பட்ட ஒப்பந்தம்தான் “கியோட்டோ ஒப்பந்தம்”.

37 உலக நாடுகள் தாங்கள் வெளியிடும் நச்சு வாயுக்களை (கரியமில வாயு, மிதேன், நைட்ரஸ் ஒக்ஸைட் போன்றவை) குறைக்க நடவடிக்கை எடுக்க ஒப்புக் கொண்டன. 1990இன் அளவிலிருந்து 5.2 விழுக்காட்டை குறைப்பதை அவை நோக்கமாகக் கொண்டன.

இந்த வாயுக்களை உற்பத்தி செய்யும் நாடுகள் பட்டியலில் சீனா முதல் இடத்திலும் அமெரிக்கா இரண்டாம் இடத்திலும் உள்ளன. சீனா நடவடிக்கைகள் எடுக்க ஒப்புக் கொண்டது. அமெரிக்கா கொள்கையளவில் ஆதரித்தாலும் எந்த நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை.

பொதுவாக இந்த விஷயத்தில் உலகத்தின் அலட்சியம் பற்றி அல் கோர் தனது நூலில் ஓர் அருமையான உதாரணம் தந்திருக்கிறார். ஒரு தவளையைத் தூக்கிக் கொதிக்கும் நீரில் போட்டால் அது துடிதுடித்துத் தாவி வெளியே குதித்து ஓடிவிடும். ஆனால் அதே தவளையை சாதாரண நீரில் போட்டு மெதுவாகச் சூடுபடுத்திக் கொதிக்க வைத்தால் அது தோல் மரத்து, தான் வேகவைக்கப்படுவதை உணராமலே சாகும். அப்படித்தான் உலகம் இருக்கிறது, வெந்தணலில் தான் வெந்துகொண்டிருப்பதை அறியாமல்...!



# எழுக நல்லாட்சி, எழுக மனிதநேயம்.

முதல்மைச்சர். . விக்னேஸ்வரன் ஒரு நேர்மையானவர், சூதுவாது இல்லாதவர், ஊழல் செய்யாதவர். படித்த முன்னாள் நீதியரசர். இப்போது தமிழ் மக்களோடு நெருங்கிப் பழகி அவர்களது இன்ப துன்பங்களில் பங்கு கொள்பவர். அவர் தமிழ் மக்களின் உணர்ச்சிகளையே பிரதிபலிக்கிறார். சரி, உண்மைதான், இவற்றை யாரும் மறுக்கவில்லை, மறுக்க முடியாது. அதே நேரம் இவருடைய இந்த நல்ல தன்மைகள் குணங்கள் இவரைவிட மிகப் பன்மடங்கு தேசியத் தலைமைக்கும் விடுதலைப் போராளிகளுக்கும் இருந்தது என்பதையும் யாரும் மறுக்க முடியாது. ஆனால் விடுதலைப் போராட்டத்தின் முடிவு என்ன என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.



எமதுவிடுதலைப்போராட்டத்தின் முடிவிற்கு என்ன காரணம்?. அதே போன்று நல்ல மனிதர் படித்தவர் முதல்வர் விக்னேஸ்வரனின் செயற்பாடுகளால் நாங்கள் இன்னொரு முள்ளிவாய்க்காலைச் சந்திக்கத் தயாரா?. அப்படிச் சந்திக்கத்தான் வேண்டுமா?. அதுதான் எமது நோக்கமா?. முள்ளிவாய்க்காலுக்கு காரணம் அரசியல் அறிவோ அரசியற் சிந்தனையோ இல்லாமைதான் என்பதை நாம் உணரத் தவறினால் எமது தற்போதைய ஜனநாயக சர்வ தேச சாணக்கிய அரசியற் போராட்டமும் இன்னொரு முள்ளிவாய்க்காலில் தான் முடியும். அதைத்தான் நாம் விரும்புகின்றோமா?. அதுதான் நமக்குத் தேவையா?. தேசியத் தலைமைக்கு இலங்கை அரசுடன் மட்டுமன்றி உலகில் எந்தவொரு அரசுடனும் நட்பு இருந்ததே இல்லை, எந்தவொரு ராஜதந்திரிகளையும் தமக்குச் சாதகமாக்கவில்லை, ஒரே நேரத்தில் அனைத்துத் தரப்புடனும் பகைதான். அதே வகையில் தான் முதல்வர் விக்னேஸ்வரனும் எந்தவொரு சர்வதேச நாட்டு அரசுடனோ, இலங்கை அரசுடனோ அரசியற் தலைவர்களுடனோ நட்பாக இல்லை, குறைந்த பட்சம் அவர்களைக் கையாளக்கூடிய, நடப்புரீதியில் கலந்துரையாடக்கூடிய அளவுக்கேனும் உறவு நிலையில் இல்லை. காரணம் அரசியலென்பது அரசியற் சிந்தனை என்பது இவற்றை எல்லாம் விட முற்றிலும் வேறானது.

**தற்போதைய இலங்கையின் நிலைமைகள் என்ன?.**

இலங்கையில் இப்போது சிங்கள மக்கள் பக்கம் சரி, தமிழ்மக்கள் பக்கம் சரி அரசியலில் இரண்டே இரண்டு பிரிவினர் தான் உள்ளனர். ஒன்று சிங்கள மக்களால் தெரிவு செய்யப்பட்ட சிங்கள அரசியற் தலைமை (தேசிய அரசு) மற்றது சிங்கள மக்களால் நிராகரிக்கப்பட்ட சிங்களத் தரப்பு (மகிந்த) , அதுபோல தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழர் தலைமை மற்றது தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட தரப்பு. இருபகுதியிலும் தெரிவு செய்யப்பட்டு பதவியில் இருக்கும் தலைமைகளுக்கு, எப்படியாவது மக்களுக்கான ஒரு சிறந்த ஆட்சியை ஏற்படுத்தி நீதியான சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டி நாட்டில் பொருளாதார அபிவிருத்தியையும் அமைதியான சமாதான சக வாழ்வையும் உருவாக்கி உள்நாட்டிலும் குறிப்பாகச் சர்வதேசத்திலும் தாம் சிறந்த ஆட்சியாளர் என்பதை நிரூபிக்க வேண்டிய நிர்ப்பந்தம், தேவை உள்ளது. அதனால் அவர்களுக்கு ஏராளமான வேலைகள், செயற்பாட்டு சுமைகள் மலைபோல் குவிந்திருக்கின்றன. ஆனால் இருபக்கத்திலும் மக்களால் நிராகரிக்கப்பட்ட தரப்பினருக்கு ஒரேயொரு வேலைதான் உண்டு. அதாவது இந்த அரசாங்கம் அல்லது தமிழர் தலைமை நாட்டிற்கோ மக்களுக்கோ எந்த நன்மையையும் செய்ய விடாமல், அவர்களை இயங்கவே விடாமல் தடுத்து, இவர்கள் எதையுமே செய்ய முடியாதவர்கள், செய்யாதவர்கள் என்று நிரூபித்து தாம் மீண்டும் பதவிக்கு, தலைமைத்துவத்திற்கு வந்துவிட வேண்டும் என்பதே. அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்குத் தேவையான அடி அத்திவாரமான அரசியல் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் பணி விரைவில் நிறைவேற இருக்கின்றது. அது நடந்து விட்டால் தாம் இவர்களை விரட்டி மீண்டும் பதவிக்கு, தலைமைத்துவத்திற்கு இப்போதைக்கு வரமுடியாமற் போய் விடுமே என்று இருபுறமும் உள்ள எதிர்தரப்பு கிலிகொண்டுள்ளது. தமது செயற்பாடுகளால் நாட்டுக்கும் மக்களுக்கும் எவ்வளவு அழிவு என்பதைப்பற்றி அவர்கள் சிந்திக்கவே மாட்டார்கள். அதனால் அப்பாவிப் பொதுமக்களை உணர்ச்சி வசப்படுத்தி உசுப்பேற்றி பேரணிகள் போராட்டங்கள் என்று நாட்டு மக்களைக் குழப்பி குளறுபடியாக்கி அழிவை ஏற்படுத்துகின்றார்கள். நாடோ மக்களோ எக்கேடு கெட்டாலும் அவர்களுக்கு கவலையே இல்லை. தாம் அதிகாரத்தை, பதவியைப் பிடிக்கவேண்டும் என்பதே அவர்களின் ஒரே குறிக்கோள்.

30 வருடப் போரினாலும் மகிந்தவின் கொடுங்கோல் ஆட்சியாலும் வாழ வழியில்லாமல் தவிக்கும் மக்களுக்கு எண்ணிறைந்த பிரச்சனைகள் இருக்கத்தான் செய்யும். அந்தப் பிரச்சனைகளை துன்பங்களை அவர்களின் தவிப்புகளை பூதாகாரமாக்கி அவற்றிற்கெல்லாம் இந்த அரசும் தமிழர் தலைமையும் தான் காரணமென்று காட்டி அப்பாவிப் பொது மக்களை ஏமாற்றி அரசிற்கெதிராகத் தூண்டிவிட்டு ஒட்டுமொத்த மக்களையும் நாட்டையும் மீளமுடியாத பாதாளத்தில் விழுத்துகின்றார்கள். சிங்களவர் தரப்பில் தோல்வியுற்ற மகிந்த தரப்பு சிங்கள இனவாதத்தையும் தமிழர் தரப்பில் தோல்வியுற்ற குழுவினர் தமிழ் இனவாதத்தையும் கையில் எடுத்துள்ளனர். வெளிப்பார்வைக்கு அவை வேறு வேறானதாகத் தோற்றினாலும் அவர்களின் நோக்கம் விளைவு ஒன்றேதான். அதாவது மக்களுக்கு எந்த நன்மையையும் கிடைக்க விடவே கூடாது. தமிழர் எழுச்சியைக்காட்டி மகிந்த தரப்பும் மகிந்த தரப்பினரின் செயற்பாடுகளைக் காட்டிப் பயமுறுத்தி தமிழர் குழுவும் மாறி மாறி நன்றாகத் தமது திட்டத்தை மறைமுகமாக ஒன்றிணைந்து நிறைவேற்றுகின்றார்கள். மக்கள் சரியான அரசியற் தெளிவு பெற்றாலன்றி இவர்களின் கபட நாடகங்களை நிறுத்தவோ அழிவில் இருந்து மக்களை, குறிப்பாகத் தமிழ் மக்களை காப்பாற்றவோ முடியாது. தமிழர் தரப்பில் தோற்றுப் போனவர்கள் அவர்களை ஆட்டிப்படைக்கும் பணபலம் படைத்த புலம்பெயர் தமிழரின் மூலோபாயச் செயற்பாடுதான் "எழுக தமிழ்". உண்மையில் அது தமிழ் மக்களை இன்னொரு முள்ளிவாய்க்காலுக்கு இட்டுச் செல்வதற்கான முதற்படிதான். எழுக தமிழ் பேரணிக்கு சென்ற தமிழ் மக்களுக்கு நாம் தலை வணங்க வேண்டும். காரணம் பல பிரச்சனைகளால் வேதனைகளால் தவிக்கும் தமிழ் மக்கள் தமது துன்பங்கள் தீர உரிமைகள் பெற தேவை என்றால் போராட்டங்களில், செயற்பாடுகளில் தாம் ஒத்துழைக்க ஈடுபடத் தயார் என்பதை வெளிக்காட்டியுள்ளனர். ஆனால் அவர்களை வழிநடத்தியவர்கள் அவர்களைச் சரியான முறையில் வழிநடத்தி அதன் பயனை அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கத் தவறி விட்டார்கள்.

அரசு எதையோ கொடுக்கப் போகின்றார்கள், இந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் இப்படிப் பேரணி நடத்திக் கத்தினால்த் தான் அவர்கள் ஏதாவது தருவார்கள். இல்லாவிட்டால் அவர்கள் தமக்குத் தேவையான மாதிரி குறைத்துத் தந்து விடுவார்கள் அல்லது தராமலே விட்டு விடுவார்கள். அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இதற்கு எதிர்ப்பில்லை, அழுதால் தான் பால் கிடைக்கும், செயற்பட வேண்டிய நேரம் இதுதான்; போன்ற கருத்துக்களின் அடிப்படையில் கேட்டுக் கொண்டதற் கிணங்க மக்கள் பலர் தமது ஆதரவைக் கொடுத்தார்கள். ஆனால் உண்மையான நிலைமை மக்களுக்கு மறைக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு தமது வேதனைகளை வெளியிட உரிமை உண்டு, சிங்கள மக்கள் கொதிப்பார்கள் என்பதற்காக நாம் அடங்கிப் போக வேண்டுமா?. நமது உரிமைகளை நாம் தட்டிக் கேட்பதில் என்ன பிழை?. அரசாங்கத்தின் தவறுகளை நாம் சுட்டிக்காட்டினால் அது தவறா?.நாம் எதையும் போராடித்தான் பெறவேண்டும். என்று இப்படிப் பலர் கதைக்கலாம். ஆனால் அந்தச் செயற்பாட்டால் என்ன விளைவு? அதனால் இவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுமா? குறைந்த பட்ஷம் அவர்களின் நோக்கத்தை அடைய அது ஓரளவாவது சாதகமாய் இருக்குமா?, சாதகமாயில்லாவிடடாலும் பாதகமாய் இல்லாமல் ஆவது இருக்குமா?. இவற்றிற்கான பதிலோ விளக்கமோ மக்களுக்கு கொடுக்கப்படவில்லை. காரணம் அந்தச் செயற்பாட்டின் சூத்திரதாரிகளின் நோக்கம் மக்களின் நன்மை அல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சேறுபூச வேண்டும் ஒற்றுமையைக் குலைக்க வேண்டும், அவர்களுக்குள் உடைப்பை ஏற்படுத்த வேண்டும் உள்ளிருக்கும் யாருக்காவது கொம்பு சீவி அவர்களுக்குள்ளேயே குத்த விட வேண்டும் என்று இவை தான் அவர்களது தேவை. அப்பாவி மக்கள்தான் மிகவும் பரிதாபம்.

**இன்றய உண்மையான அரசியல் நிலைமை என்ன?.**

இந்தியா உட்பட சர்வதேசங்களின் வழிநடத்தலில் இன்றய மைத்திரிரணில் அரசு இலங்கையில் அனைத்து மக்களும் ஒற்றுமையாக சமாதானமாக வாழக்கூடிய ஒரு அரசை ஏற்படுத்தி நாட்டில் அமைதியையும் அபிவிருத்திகளையும் ஏற்படுத்துவதற்காகச் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். இப்போதைய சிங்களத் தலைமை, விரும்பியோ விரும்பாமலோ மகிந்தவின் கொடுங்கோல் ஆட்சியாலும் சர்வதேசத்தின் நெருக்கடியாலும் அந்த முடிவுக்கு எப்போதோ வந்துவிட்டதால்தான் அதற்கான செயற்பாடுகளில் ஈடுபட்டு மகிந்த அரசை விரட்டி தற்போதைய அரசை நிறுவி தமது நோக்கத்தை நிறைவேற்றச் செயற்படுகின்றார்கள். இலங்கை அரசோடு இந்தியா உட்பட சர்வதேச ராஜதந்திரிகள் அத்தனை பேரும் இலங்கையில் முகாமிட்டு செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். அவர்களின் செயற்பாடுகளின் வெற்றியில் தான் தமிழரின் நன்மைகள் தங்கியுள்ளன. அவர்கள் முயற்சி தோற்றால் அது எமக்குமான தோல்விதான். எனவே சிங்கள மக்கள் சரி தமிழ் மக்கள் சரி அவர்களின் செயற்பாடுகளுக்கு வலுச் சேர்ப்பதன் மூலமே இரு பகுதியினரும் நன்மை அடையலாம். 68 வருடங்களாக இனவாதத்தில் ஊறிப்போன சிங்கள மக்களையும் இதுவரை இனவாதத்தையே ஆயுதமாகப் பயன்படுத்திய அவர்களின் அரசியற் தலைமையையும் மாற்றுவதென்பது அவ்வளவு இலகுவான காரியமில்லை. ஆனால் சர்வதேசத்தின் தலையீட்டால் தற்போதுள்ள சிங்கள மற்றும் தமிழ் தலைமைகள் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அந்த நல்ல முடிவிற்கு வந்துவிடடார்கள். ஆனால் சிங்களத் தலைமைகள் அந்த முடிவிற்கு வந்தாலும் இனவாதத்தில் ஊறிப்போன கீழ்மட்ட சிங்கள அரசியல் வாதிகள் சிங்கள மக்கள் குறிப்பாக சிங்கள ஆயுதப்படையினர் இன்னும் அந்த நிலைக்கு முழுமையாக வந்துவிட வில்லை. தமிழர் தரப்பிலும் சில சுயநலக் காரணங்களால், பதவி விருப்பால் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் இனவாதத்தை கையில் எடுக்கிறார்கள். எனவே அரச தரப்பின் சவால் இவர்களின் எதிர்ப்புகளை வென்று தமது நோக்கத்தை அடையவேண்டும். சிங்களத் தரப்பில் மகிந்த கூட்டம் மட்டுமல்ல அரசிற்குள்ளும் இரு கட்சிகளிலும் இனவாதிகள் இருக்கின்றனர். மகிந்த பக்கத்தைச் சமாளித்தாலும் தமது அரசிற்குள்ளிருப்போரை குறிப்பாக அரச படைகளைச் சமாளிப்பதுதான் மிகக் கடினம்.

**சிங்கள மக்கள் குறிப்பாகத் தமிழ் மக்கள் ஏதாவது நன்மை பெற வேண்டுமானால் காரியத்தை எப்படிச் சாதிக்கலாம்?.**

எமக்கு இருக்கும் ஒரே பலம் சர்வதேச அனுகூலம் தான். அதற்கெதிராக நாம் எதையும் செய்யவே முடியாது. எமது தேவைகளை உரிமைகளை வெளிநாடுகளில் இருந்தா பெறமுடியும், அதைப் பறித்து வைத்திருப்பவர் சிங்கள அரசாங்கம்தான். அதை அவர்களிடமிருந்துதான் பெற வேண்டும். அதனால் அவர்களுடன்தான் இராஜதந்திரமாக, சர்வதேச உதவியுடன் பேச்சுவார்த்தை மூலம் தான் பெறமுடியும். அதைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செய்துகொண்டிருக்கின்றது. கூட்டமைப்பின் தலைமை வரப்போகும் புதிய அரசியல் அமைப்பில் உள்ள ஒவ்வொரு சொற்களும் வசனங்களும் பந்திகளும் பக்கங்களும் எப்படி அமைந்துள்ளன அவற்றை எப்படித் திருத்தலாம், திருத்த வேண்டும் என்று அரசாங்கத்தரப்புடன்/ அரசியல்

அமைப்புச் சபையுடன் வாதிட்டுக் கொண்டிருக்கின்றார்கள் கயிறிழுப்பில் ஈடுபட்டுள்ளார்கள். அதற்காகச் சர்வதேசத்தின் மூலம் எப்படி எவ்வளவு அழுத்தம் கொடுக்கின்றார்கள் என்பது நிட்சயமாக பொதுமக்களுக்குத் தெரியாது.தெரிந்தால் சிக்கல்களைத் தீர்க்கவே முடியாது. அதை முதலில் எதிரிகள் பயன்படுத்தி கெடுத்து விடுவார்கள். பொதுமக்கள் அரசியற் சாணக்கியம் உள்ளவர்கள் தெரிந்தவர்கள் அல்ல. ஆனால் இப்படியான விடயங்கள் அப்படித்தான் இரகசியமாகத்தான் கலந்துரையாடித் தீர்க்கப்பட வேண்டும்/ தீர்க்கலாம் என்பதை ஓரளவு தமது சொந்த அனுபவங்கள் மூலம் ஆவது தெரிந்திருப்பார்கள். எமது அரசியல் எதிரிகள் அந்த உண்மையைத் தெரிந்து கொண்டும் கூட்டமைப்பு எதையுமே செய்யவில்லை, சிங்கள அரசுக்கு சோரம் போய்விட்டார்கள், பதவிக்காக அரசு சொல்வதற்கெல்லாம் தலையாட்டி தாளம் போடுகிறார்கள், சர்வாதிகாரமாக தான்தோன்றித்தனமாக நடக்கின்றார்கள், தமிழருக்கு எதுவுமே கிடைக்காது என்று மக்களை ஏமாற்றிக் கூப்பாடு போடுகின்றார்கள். கூட்டமைப்பில் அரசியற் தெளிவில்லாத சுயதேவைகள் நிறைவேறாத சிலரை தமது பணபலத்தால் கூட்டமைப்புக்கு எதிராக அணி திரட்டி உள்ளுக்குள் மோதவிட்



டுள்ளனர். மக்கள்தான் பாவம்.

புலியின் வெற்றி என்பது, பதுங்க வேண்டிய நேரத்தில் பதுங்கியும் பாயவேண்டிய நேரத்தில் பாய்வதிலும் தான் தங்கியுள்ளது. பதுங்க வேண்டிய நேரத்தில் பாய்ந்தாலோ பாயவேண்டிய நேரத்தில் பதுங்கினாலோ ஏமாற்றமும் தோல்வியும் நிச்சயம். அரசு இதுவரை தனது அரசியற் திட்டத்தில் என்னத்தை தரப்போகின்றது, எது தரப்படாது என்பதை விரைவிலேயே வெளியிடவுள்ள நிலையில் அதற்குமுன் சன்னதம் ஆடவேண்டிய அவசியம் என்ன?. அவர்கள் எதையாவது கொடுத்து விடுவார்களோ என்ற பயம்தான். எதையுமே கொடுக்காமல் விட்டால் தான் பழியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டு சப்பித் துப்பி தமது பதவிப் பேராசையை நிறைவேற்ற முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கும்வரை தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைத்து விடக்கூடாது என்பதே இவர்களின் ஒரே குறிக்கோள்.

நாங்கள் எப்படி அதி உச்ச நன்மை பெறலாம் என்று சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

சிங்கள மக்களுக்கு உள்ள பயம் நாட்டைப் பிரித்து விடுவார்களோ?, மீண்டும் ஆயுதப் போராட்டம் வந்துவிடுமோ?, சிங்கள மக்கள் தமிழரால் தமிழ்நாட்டு உதவியோடு அடக்கி ஆளப்படுவார்களோ?, என்பவைதான். தமிழ் மக்களுக்கு உள்ள பயம் சம உரிமை,சம சந்தர்ப்பம் கிடைக்காமற் போகுமோ?, தொடர்ந்தும் அடக்கி ஆளப்படுவோமோ?, உரிமைகள் வாய்ப்புகள் மறுக்கப்படுமோ?, எமது கலை பண்பாடு கலாச்சாரம் அழிக்கப்பட்டு விடுமோ?, கொடுத்துவிட்டு பின் மாற்றி விடுவார்களோ?, என்பவைதான். இரு தரப்பாரதும் பயங்கள் நீக்கப்பட வேண்டும். அதற்காகப் பேரணிகள் நடத்தலாம், நடத்தப்பட வேண்டும். அண்மையில் பேரணியை நடத்தியது மக்கள் கலந்துகொண்டது தவறல்ல. ஆனால் அது எப்படி நடத்தப்பட்டது எதற்காக நடத்தப்பட்டது என்பதுதான் பிரச்சனை. மேற்குறிப்பிட்டவாறு சிங்கள மக்களின் பயத்தைத் தணித்து அத்துடன் எமக்குத் தேவையானதைக் கேட்டிருக்க வேண்டும். சிங்கள மக்களுக்கு எதிராக அரசிற்கு எதிராகப் பகையாகப் பேசவேண்டியதில்லை. எமது பேரணியின் பேச்சாளர்கள் முதலில் நாங்கள் இன்றய நல்லாட்சியை ஏற்படுத்த உதவினோம் அதற்கு என்றும் ஆதரவாய் இருப்போம். நாட்டைப் பிரிக்காமல் ஒன்றுபட்ட நாட்டுக்குள் (ஒற்றை ஆட்சி அல்ல) தீர்வு காண்போம் என்று கூறி ஆனால் அது உண்மையான நல்லாட்ச்சியாக அமைந்து எமது பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும். அத்துடன் பின்னர் அந்தப் பேரணியில் கூறப்பட்ட மிகுதி அனைத்தையும் கூறியிருக்கலாம் . அப்படி என்றால் நாங்கள் சொல்ல வேண்டியவற்றைச் சொல்வதோடு கேட்கவேண்டியதெல்லாவற்றையும் கேட்பதோடு சிங்கள இனவாதிகளையும் அடக்கி அதுபோன்ற ஆரோக்கியமான சிங்களப் பேரணிகள் நடைபெறவும் வழிகோலி இருப்போம். அதுதான் இராஜதந்திரமான சிந்தனையுள்ள செயற்பாடு.ஆனால்பேரணியின் சூத்திரதாரிகளுக்கு அது தெரிந்திருந்தும் அதை அவர்கள் விரும்பவில்லை காரணம் அவர்கள் மக்கள் நலனைப் பற்றி அக்கறை கொள்ளாதது தான்.

அதனால் பேரணியின் பின் சிங்கள பகுதியில் அரசுக்குள்ளேயும் எதிர்த்தரப்பிலும் எழுந்த எதிர்ப்பலைகளை சமாளிப்பது இரு தரப்பாருக்கும் பெரும் சவாலாக இருந்தது. முதல்வர் யாழ்ப்பாணத்தில் அரசதலைவர்கள் சிங்கள பிரதானிகள் மத்தியில் தான் இனவாதியல்ல என்று சிங்களத்தில் பேசவேண்டியதாயிற்று. ரணில், முதல்வர் சொல்லாதவற்றை சிங்கள ஊடகங்கள் தவறாக சித்தரிப்பதாகக் கூறவேண்டியிருந்தது. திரு.சம்மந்தரும் அதே பாணியில் முதல்வரை விட்டுக்கொடுக்காமல் உரையாற்ற வேண்டியிருந்தது.பேரணி சரியா தவறா? என்று தமிழர் மத்தியில் பட்டிமன்றங்கள் தினமும் நடக்கின்றன. இவை தேவைதானா?. தமிழ் மக்கள் வெறும் உணர்ச்சி வசமானவர்கள், போர் விரும்பிகள், அறிவு பூர்வமாகச் சிந்திக்காதவர்கள் இராஜதந்திரம் இல்லாதவர்கள் என்ற பழிச்சொற்களுக்கு ஆளாகாமல் தமிழர் என்றால் சிந்தனையாளர், சாணக்கியர்கள், இராஜதந்திர மானவர்கள், நட்பானவர்கள், பொறுப்பானவர்கள் என்ற பெயரை இலங்கையிலும் சர்வதேசத்திலும் நிலைநாட்டி எமது உரிமைகளையும் நன்மைகளையும் வென்றெடுப்போம்.

**வி.வின்.மகாலிங்கம்.**
vinmahalingam@gmail.com

# குழந்தைப் போராளி

சைனா கெய்ரெற்சி
தமிழில: தேவா



அடிபட்டதில் ஒரு கண் வீங்கி மூடிக்கொண்டது. அது என்னைக் கவலைப்பட வைத்தது எப்போதுமே அடிகள் விழும்போது என் கண்களைப் பாதுகாப்பதில் நான் மிகக் கவனமாயிருப்பேன். எனது சட்டையில் ஒரு துண்டைக் கிழித்தெடுத்து முகத்தில் வடிந்த இரத்தத்தில் நனைத்துக் கண்ணில் கட்டிக் கொண்டேன். இது என் கண்ணைத் திறக்க உதவுமென நம்பினேன். விலாப் பகுதியில் வலி எடுத்ததால் பயந்து அலறினேன். அப்பா ஓடி வந்து என்னைக் கண்டதும் அதிர்ச்சியில் உறைந்து நின்றார். "கடவுளே" எனக் கூவிக்கொண்டே எனது உடைகளைக் களையச் சொன்னார். என்னைக் குளியலறைக்குக் கூட்டிச் சென்று சுடுநீரால் என் இரத்தத்தைக் கழுவினார். அவரது முகத்தில் கவலையைக் கண்டதும் தான் விலாப்பகுதியில் வலியெடுப்பது பற்றிக் கூற எனக்குத் தைரியம் வந்தது. எனது உடல் முழுவதும் கன்றிப் போயிருந்தது. நாளை என்னை அவர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதாகச் சொன்னார். அங்கு என்னைக் கேள்வி கேட்டால் எப்படிப் பதில் கூற வேண்டுமென்றும் சொல்லித் தந்தார். இந்த முறை மரத்திலிருந்து தவறிக் கீழே விழுந்து விட்டேனென்று சொல்ல வேண்டுமாம். பின்பு நாங்கள் கடைக்குச் சென்று எனக்குப் புதிய சப்பாத்துக்கள் வாங்கலாமாம்.

இரவு முழுவதும் நான் அழுதுகொண்டேயிருந்தேன். அந்த இரவில் அடி உதைகளை நினைத்து நான் அழவில்லை. அப்பாவின் அன்பான வார்த்தைகளை நினைத்து, என்றுமே இல்லாதவாறு என் மீது பரிவு காட்டியதை நினைத்து அழுதேன். அழுதுகொண்டே தூங்கிப்போனேன்.

நான் தூக்கம் கலைந்து எழுந்தபோது உடல் முழுவதும் வலித்தது. எழ முயற்சித்தேன், ஆனால் என்னால் அசையவே முடியவில்லை. அப்பா வந்து எனது நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். வெளியே போனவர் சிறிது நேரத்தில் ஒரு வைத்தியருடன் திரும்பி வந்தார். வைத்தியர் என்னைப் பரிசோதித்து விட்டு உடைந்து போன விலா எலும்புகளைச் சரிப்படுத்த என்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல வேண்டும் எனச் சொன்னார். அப்பா வைத்தியரை யோசனையுடன் பார்த்தார். பின்பு ஆஸ்பத்திரியில் என்ன சொல்ல வேண்டுமெனக் கேட்டார்.

"இந்தப் பிரச்சனையைத் தீர்க்க ஒரு வழியுண்டு, ஆனால் அதற்குக் கொஞ்சம் பணம் செலவாகும்"

"எவ்வளவு செலவாகும்?"

"நிலைமை மோசமாய் இருப்பதால் என்னால் எவ்வளவு என்று சொல்ல முடியாது, ஆனால் என் நண்பனொருவன் அங்கு வேலை செய்கின்றான், அவனால் இந்தச் சிறுமியை மீண்டும் சரியாக்க முடியும்."

நான் குணமடைந்த பின்பு அப்பா என்னைக் கடைக்கு அழைத்துச் சென்றார். என் வாழ்வில் முதன் முறையாக என்னால் சந்தோசத்தைத் தாங்க முடியாது போயிற்று. அப்பா கை நிறைய மிட்டாய்களை வாங்கித் தந்தார். எனது சந்தோசம் நீடிக்கவில்லை. அப்பா போனதும் சிற்றன்னை என்னை வீட்டைவிட்டு வெளியே துரத்தி மிட்டாய்களைச் சாப்பிட்டு முடிக்காமல் வீட்டுக்குத் திரும்பி வரவேண்டாமெனக் கட்டளையிட்டார். மாஹி சொன்னது தான் நினைவுக்கு வந்தது "இந்தப் பெண் தனது வெறுப்பைத் தனது சவக்குளி வரை எடுத்துச் செல்வாள்"

ஒரு கடினமான இதயம்

எனது ஓடிப்போன ஒவ்வொரு சகோதரியும் வீட்டிற்குத் திரும்பி வந்தபோது ஏதோ ஒரு வகையில் தங்கள் துன்பங்களைச் சுமந்தே வந்தனர். நாங்கள் ஒவ்வொருவரும் அவரவர் சுமையைச் சுமக்க வேண்டியிருந்தது. எப்போதாவது ஒருமுறை அவர்கள் வீட்டிற்கு வருவார்கள். ஒவ்வொரு முறையும் ஒருத்தி வரும்போது ' இவள் இம்முறை என்னையும் தன்னுடன் அழைத்துச் செல்வாள்' என நம்பினேன். அவர்கள் ஒவ்வொரு முறையும் தாங்கள் எவ்வளவு சிரமங்களை வெளியே அனுபவிக்கிறார்கள் என என்னிடம் சொல்வார்கள். ஆனால் அப்பாவிடமோ சிற்றன்னையிடமோ எதுவும் சொல்ல மாட்டார்கள். எந்த விதத்திலும் அவர்களது வாழ்க்கை சிரமானதெனக் காட்டிகொள்ள அவர்கள் விரும்பவேயில்லை. தாங்கள் வெளியே சந்தோசமாக இருப்பது போல நடிப்பார்கள். ஏதோ உண்மையும் அது போலத்தான் என்றிருக்கும். அப்பாவோ மடையன் போல அவர்களை நம்பினார். நான் எனது சகோதரிகளில் ஒருத்தி வந்து என்னை விடுவித்துச் செல்வாளென்று ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த காலங்களுக்குக் கணக்கில்லை.

அப்பாவின் நண்பரின் வீட்டில் தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்த நான் ஒரு வாகனம் வந்து நிற்கும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்தேன். எனது மூத்த சகோதரி ஹெலன் ஒரு நீல நிறக் காரிலிருந்து இறங்கி னாள். ஹெலனா அது? அவளை என்னால் அடையாளமே காண முடியவில்லை. அவளது சப்பாத்து அழகாகவும் புது மாதிரி யாகவும் இருந்தது. தலை முடியை நீளமாக வளரவிட்டிருந்தாள். சந்தோசத்துடன் அவளிடம் ஓடினேன். தொடரும்...

# தமிழகமும் காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையும்:
# ஒரு வரலாற்று ரீதியான அவதானங்களின் தொகுப்பு



காவிரி நீர்ப் பிரச்சினை தமிழகத்திலும் கர்நாடகாவுக்கு மிடையிலான பிரச்சினையாக உருவெடுத்து பெரும் கலவரங்களைத் தோற்றுவித்திருந்தது. தமிழகதிலிருந்து கர்நாடா வழியாகப் பயணிக்கும் அப்பாவி தமிழ் வாகன ஓட்டுனர்கள் மற்றும் பயணிகள் மோசமாக, கேள்வி முறையற்ற விதத்தில் தாக்கப்படுகின்றனர். முதலமைச்சர் ஜெயலலிதாவின் சுகயீனம் காரணமாக தமிழகத்து நாளேடுகளில் பெருமளவு க்கு அந்த விடயமே பிரதான சய்தியாகிவிட்ட நிலையில் காவிரி நீர்ப் பிரச்சினை சற்று பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்ட போதும் அதன் முக்கியத்துவம் குறைந்துவிடவில்லை. இந்தச் சிக்கல் இன்று நேர்றல்ல கிட்டத் தட்ட ஒரு நூற்றாண்டு காலப் பிரச்சினை. இந்த விடயத்தில், இன்று நடந்து கொண்டிருப்பது என்ன, இதில் எங்கே தவறிருக்கிறது, நீர்ப்பங்கீட்டில் நிலவும் சிக்கல்களுக்குக் காறணம் என்ன என்பதை தீபம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான முயற்சியின் ஒரு விளைவே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். விடத்தின் முக்கியத்துவமும், வரலாற்றின் நீளமும் காறணமாக இந்தத் தொகுப்பு சற்று நீளமாக இருப்பதால், இரண்டு மூன்று இதழ்களுக்குத் தொடரக் கூடும். முடிந்தளவில், சரியான, நியாயமான, பக்கச்சார்பற்ற நிலையில் நிலமைகளை மதிப்பிட்டுள்ள கட்டுரைகளில் இருந்து இந்தத் தொகுப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. முதலில் இந்தப் பிரச்சினையின் வரலாற்றிலிருந்து தொடங்குவோம்.

'காவேரியும் தமிழக விவசாயமும்' என்ற தலைப்பில் தலைப்பில் அர. செந்தில்குமரன் என்பவர் ஆறாம் திணை இணயத் தளத்தில் வந்தகட்டுரை வரலாற்றை இவ்வாறு தொடங்குகிறது:

மேற்கு தொடர்ச்சி மலைகளில் உள்ள குடகு நாட்டில் காவிரி உற்பத்தியாகிறது. குடகு பிரதேசத்தில் வாழும் மக்கள் பேசும் மொழி துளு. இம்மொழி தமிழிலிருந்து உருவானது. அன்றைய ஆங்கிலேயர் ஆட்சியில் தனி சமஸ்தானமாக இருந்து வந்த இப்பகுதி 1956ல் மொழிவழி மாநிலங்கள் பிரிவினையின் போது கர்நாடகா மாநிலத்



துடன் இணைக்கப்பட்டது. மலைகளும், காடுகளும் நிறைந்தது இப்பகுதி. காவிரி இங்குதான் உருவாகிறது சுமார் 800 கிலோ மீட்டர் நீளமுள்ள காவேரி நதி கர்நாடகா பகுதியில் 350 கி.மீ. தூரமும், தமிழகம் மற்றும் பாண்டிச்சேரி பகுதியில் 450 கி.மீ தூரமும் பயணம் செய்து வங்கக்கடலில் கலக்கிறது.

மேலும் கேரளாவில் உற்பத்தியாகும் 140 டி.எம்.சி. தண்ணீர் கபினி நதி மூலமாக காவிரியில் கலக்கிறது. ஆக கர்நாடகம், தமிழகம், கேரளம், பாண்டிச்சேரி ஆகிய நான்கு மாநிலங்களும் காவிரி சமவெளி மாநிலங்களாகக் கருதப்படுகின்றன. தமிழகத்தில் காவிரி விவசாயம் தொன்மை வாய்ந்தது. உலகிலுள்ள பெரிய நதிதீரங்களில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நடைபெறும் பழமை வாய்ந்த விவசாயங்களோடு ஒப்பிடத்தக்கதாகும். மேலும் தமிழக நிலப்பரப்பில் 34 சதவீதம் காவிரி சமவெளியில் இருக்கின்றது. கர்நாடகத்தில் 18 சதவீத நிலப்பரப்பும், கேரளாவில் 7 சதவீத நிலப்பரப்பும் காவிரி சமவெளியில்இருக்கின்றன. 1971ம் ஆண்டு கணக்கெடுப் பின்படி தமிழ்நாட்டில் 28 லட்சம் ஏக்கர் பாசனப்பகுதி காவிரி நீரினால் பயன் பெற்றது. அன்றைய சூழலில் கர்நாடகா 7 லட்சம் ஏக்கர் பரப்பில்தான் காவிரி தண்ணீரை பயன்படுத்திவந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அன்றைய சூழலில் காவிரியில் உற்பத்தியாகும் தண்ணீரின் ஆண்டு சராசரி அளவு 671 டி.எம்.சி. ஆக இருந்தது.

தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மொத்த அரிசியில் பாதிக்கு மேல் காவிரி டெல்டா பாசனப்பகுதியின் மூலமாகத்தான் விளைகிறது என்பது குறிப்பிடத்தக்கது. முதன்முதலாக கி.பி. 2ம் நூற்றாண்டில் கரிகால் சோழனால் காவிரி மீது கட்டப்பட்ட முதல் அணை கல்லணையாகும். உலகத்திலேயே மிகவும் பழமைவாய்ந்த அணையாக இது கருதப்படுவது சிறப்பாகும். காவிரி பிரச்சனை இன்று நேற்றல்ல... அன்றைய காலம் தொட்டே இருந்து வந்துள்ளது. ஆம் கி.பி. 11ம் நூற்றாண்டிலும், 17ம் நூற்றாண்டிலும் மைசூர் அரசு காவிரியை தடுத்து அணைகட்டி அன்றே தமிழர்களுக்கு சோதனை ஏற்படுத்த முனைந்தது. அப்போதெல்லாம் முதலில் இரண்டாம் இராஜராஜசோழன் பெரும் படையுடன் சென்று தடுப்புகளை தடுத்ததும், அதன் பிறகு 17ம் நூற்றாண்டில் ராணி மங்கம்மாளும், தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னரும் பெரும் படையுடன் சென்றதும் படை செல்லும் முன்பே கடும் மழையால் அணை உடைந்ததும் வரலாறு கூறுகிறது.

அதன்பின் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1867ல் மைசூர் ஆட்சிக்குட்பட்ட பகுதியிலும், 1877ல் தமிழகம் அடங்கிய சென்னை மாகாணத்தில் ஏற்பட்ட பஞ்சத்தாலும் இலட்சக்கணக்கான மக்கள் மாண்டனர். இதை தடுக்கும் எதிர்காலத் திட்டத்துடன்தான்மைசூரில் 44 டி.எம்.சி. கொள்ளளவு உள்ள கிருஷ்ணராஜசாகர் அணையும், மேட்டூரில் 93 டி.எம்.சி கொள்ளவுள்ள அணையும் கட்டப்பட்டது. இதன் விளைவாக உருவானவைதான் 1892, 1924ம் ஆண்டுக் காவிரி நீர் ஒப்பந்தங்கள். தமிழக, கர்நாடக நீர்வளம்தமிழகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் சராசரி 1300 டி.எம்.சி. தண்ணீர் உற்பத்தியாகிறது. கர்நாடகா முழுவதும் 3300 டி.எம்.சி தண்ணீர் உற்பத்தியாகிறது. தமிழகத்தை விட கர்நாடகாவில் இரண்டரை மடங்கு அதிகமாக தண்ணீர் உற்பத்தியாகிறது.

தமிழ்நாட்டில் ஓடும் நதிகளில் காவிரி ஒன்றுதான் பெரியநதி. ஆனால், கர்நாடகாவில் காவிரியைவிட 3 மடங்கு அதிக நீர் வளம் கொண்ட கிருஷ்ணா நதியும் ஓடுகிறது. இந்நதி மூலம் மட்டுமே ஆண்டுக்கு 734 டி.எம்சி. தண்ணீர் (காவிரியில் உற்பத்தியாகும் நீரைவிட 63 டிஎம்சி அதிகம் கர்நாடகாவிற்கு கிடைக்கிறது) மேலும் இங்கு உற்பத்தியாகும் 2000 டிஎம்சி நீர் எதற்கும் பயன் இல்லாமல் நோக்கி ஓடி அரபிக்கடலில் கலந்து வீணாகிறது. இது மட்டுமன்று கேரளாவில் உற்பத்தியாகும் 140 டி.எம்.சி. தண்ணீர் கபினி நதி மூலமாக காவிரியில்தான் கலக்கிறது. இந்த அளவு நீரைதான் தமிழகத்தில் மழையில்லாத, ஜூன் முதல்செப்டம்பர் வரையிலான 4 மாதங்களில் காவிரி நீரை நம்பி பரம்பரையாகவே காலங்காலமாக பயிர்செய்யப்படும் குறுவை சம்பா சாகுபடிக்கு தேவையான கர்நாடகம் விட வேண்டிய நீரின் அளவு என்பது குறிப்பிடத்தக்கது.

காவிரிச்சிக்கல்1924ல் உருவான ஒப்பந்தம் 1974ல்முடியும்நிலையில்ஒப்பந்தமே காலாவதி ஆகிவிட்டதாக கூறியதோடு, மைசூர் சமஸ்தானத்துடன் செய்துக்கொண்ட ஒப்பந்தம் எங்களை கட்டுப்படுத்த முடியாது என்று கூறி காவிரியின் உபநதிகளான ஹேமாவதி, ஹாரங்கி, கபினி பகுதிகளில் அனுமதியின்றி அணைகளைக் கட்டி காவிரி தண்ணீர் முழுவதையும் அடைத்துக் கொண்டு காவிரி ஒரு பல மாநில நதி என்பதை மறந்து இயற்கை வழங்கும் நீரை தனியுடைமையாக்கியது கர்நாடாகா.

இதன் மூலம் காவிரி சிக்கல் விசுவரூபம் எடுக்க ஆரம்பித்தது.இதன் பொருட்டு தமிழக அரசு 1971 ம் ஆண்டு உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து அப்போதைய பிரதமரின் தலையீட்டால் மீண்டும் தாக்கல் செய்யும் உரிமையுடன் வழக்கை திரும்பப் பெற்றுக் கொண்டது.

(அடுத்த இதழில் தொடரும்)

# மேற்கிந்தியத்தீவுகள்; கலிப்சோவிலிருந்து கலிப்சோவுக்கு – 5



**எவேர்ட்டன் வீக்ஸ்** (Sir. Everton Weeks)

க்ளைட் வோல்கொட் அறிமுகமான 1948 ம் வருட இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் அறிமுகமான மற்றொருவர் எவேர்ட்டன் வீக்ஸ். இவரும் வோல்கொட் போலவே பார்படோஸ் தீவிலேயே பிறந்தார். குடும்பத்தின் வறுமை காரணமாக உழைப்புத்தேடி இவரது தந்தையார் ட்ரினிடாட் தீவுகளுக்குக் குடிபெயர்ந்தார். புனித லெனார்ட் பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலத்திலேயே வீக்ஸ் பாடப்புத்தகங்களைவிட மைதானத்தை அதிகம் நேசிப்பவராக இருந்தார். 14 வயதிலேயே பாடசாலை செல்வதை நிறுத்தி விட்டு துடுப்பாட்டமும், காற்பந்தும் விளையாடிக்கொண்டு திரிந்தார். 18 வயதில் இராணுவசேவையில் தன்னை இணைத்துக் கொண்ட வீக்ஸ் 1947ம் வருடம் இராணுவ சேவையைப் பூர்த்தி செய்தார். அவர் ஒரு முன்னாள் இராணுவ வீரர் என்கிற காரணத்தால் பல்வேறு புகழ்பூத்த கழகங்களுக்காக விளையாடுகிற வாய்ப்புகள் கிட்டின. 1945-ம் ஆண்டிலிருந்தே முதற்தரப் போட்டிகளில் விளையாடி வந்தாலும் 1946/47 பருவ காலத்திலேயே மிகச்சிறப்பான பெறுதிகளை வீக்ஸ்சால் பெற்றுக்கொள்ள முடிந்தது. இதன் பலனாக 1948 ம் வருடம் இங்கிலாந்தை எதிர்கொண்ட மேற்கிந்தியத்தீவுகள் அணியில் வீக்சுக்கு ஓரிடம் கிட்டியது.

1948 தொடரில் கென்சிங்ரன் மைதானத்தில் நடைபெற்ற முதற்போட்டியில் அறிமுகமான பன்னிருவரில் ஒருவரான வீக்ஸ், முதற்சில போட்டிகளில் தடுமாற்றமான ஆட்டப்பாணியை வெளிக்காட்டினார். அணியிலிருந்து நீக்காப்படுவதிலிருந்து ஜோர்ஜ் ஹெட்லிக்கு ஏற்பட்ட உபாதையின் காரணத்தால் தப்பித்துக்கொண்ட வீக்ஸ், 141 ஓட்டங்களைப் பெற்றுத் தன் இடத்தை அணியில் தக்கவைத்துக்கொண்டார். அதைத் தொடர்ந்து இந்தியாவிற் சுற்றுப்பயணம் மேற்கொண்ட மேற்கிந்திய அணிக்காக விளையாடிய வீக்ஸ், அந்தத் தொடரின் முதல் நான்கு ஆட்டவாய்ப்புகளிலும் சதமடித்ததன் மூலம், ஐந்து ஆட்டவாய்ப்புகளிற் தொடர்ந்து 100க்கு மேலான ஓட்டங்களைக் குவித்தவர் என்கிற சாதனையைத் தனதாக்கிக்கொண்டார். அதற்கடுத்துச் சென்னையில் நடைபெற்ற போட்டியில் 90 ஓட்டங்களில் run-out முறையில் ஆட்டமிழந்திருக்காவிட்டால் ஆறாவது தொடர் சதத்தையும் குவித்திருப்பார்.

அதன் பின்னர் 1950 இல் இங்கிலாந்துக்கெதிராக இங்கிலாந்தில் வைத்து தமது முதற்சதத்தை எட்டினார். 1953 இல் இந்தியாவுக்கு எதிராக போர்ட்ஓஃப்ஸ்பெயினில் வைத்து தன்னுடைய அதிகபட்சப் பெறுதியான 207 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார் வீக்ஸ். அதற்கடுத்த வருடம் அதே மைதானத்தில் இங்கிலாந்துக்கெதிராக 206 ஓட்டங்களைக் குவித்தார். 1956 இல் நியூசிலாந்துக்கு எதிராக நியூசிலாந்தில் வைத்து மூன்று தொடர்ச்சியான ஆட்ட வாய்ப்புகளில் சதங்களைக் கடந்தார். 1958 இல் பாகிஸ்தான் அணிக்கெதிராக பிறிட்ஜ்ரவுண் மைதானத்தில் வைத்து 197 ஓட்டங்களைப் பெற்றார். அந்தத் தொடரோடு தனது சர்வதேசத் துடுப்பாட்டப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார். 48 போட்டிகளில் 15 சதங்கள், 19 அரைச் சதங்கள் அடங்கலாக 58.61 என்கிற சராசரியுடன் மொத்தமாக 4455 ஓட்டங்களைக் குவித்திருந்தார் வீக்ஸ். இவரது சராசரியானது துடுப்பாட்ட வரலாற்றில் நீண்டகாலம் விளையாடிய வீரர்களின் வரிசையில் 7வது இடத்தைப் பெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. 1964 வரையிலும் தொடர்ந்து முதற்தரப் போட்டிகளில் விளையாடியிருந்தாலும், அவரது முழங்காலில் ஏற்பட்டிருந்த தொடர்ச்சியான உபாதை காரணமாகச் சர்வதேசப் போட்டிகளிலிருந்து வீக்ஸ் விலகியது துடுப்பாட்ட உலகுக்குப் பேரிழப்பே.

சர்வதேசப் போட்டிகளிலிருந்தான ஓய்வுக்குப் பின்னர் சில கண்காட்சிப் போட்டிகளில் வீக்ஸ் விளையாடிவந்தார். மேலும் 1979 ம் வருட உலகக்கிண்ணத் துடுப்பாட்டப் போட்டித்தொடரிற் பங்கேற்ற கனேடியத் துடுப்பாட்ட அணிக்குப் பயிற்றுவிப்பாளராகவும் கடமையாற்றியிருந்தார். பார்படோஸ் துடுப்பாட்டச் சங்கத்திலும் சிறிதுகாலம் கடமையாற்றினார். இவரை முன்னுதாரணமாகக் கொண்டவர்கள் பலர் பின்னர் பார்படோஸ் மற்றும் மேற்கிந்தியத்தீவுகளின் துடுப்பாட்ட அணிகளின் வீரர்களாகவும், நிர்வாகிகளாகவும் பிற்காலத்தில் பிரகாசித்தார்கள். அவர்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர் கொன்ராட் ஹன்ரே என்கிற பார்படோஸ் மற்றும் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர். மேலும், வீக்ஸ்சின் மகனான டேவிட் மரேயும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்காக 19781982 காலப்பகுதியில் விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது. 1994ம் ஆண்டு சர்வதேசத் துடுப்பாட்டப் போட்டிகளில் போட்டி நடுவராகவும் கடமையாற்றினார்.

தான் விளையாடிய காலகட்டத்தில் பந்துவீச்சாளர்களுக்குச் சிம்மசொப்பனமாகவும், விளையாடிய காலகட்டத்தின் பின் நிற வெறியர்களுக்கெதிரான செயற்பாட்டாளராகவும், சிறந்த நிர்வாகியாகவும், நல்லெண்ணத் தூதுவராகவும் செயற்பட்ட, செயற்பட்டுக்கொண்டிருக்கும் எவெர்ட்டன் வீக்ஸ், 1995 ம் ஆண்டில் "சேர்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

– **கிருத்திகன்**

(இதழ் 48 இல் தொடரும்)

# தங்கம் வென்ற தமிழர்..!

பிரேசிலின் தலைநகர் ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற பராலிம் பிக்கில் (மாற்றுத் திறனாளிகள்) உயரம் தாண்டுதல் போட்டியில் தங்கம் வென்றுள்ள தமிழகத்தைச் சேர்ந்த மாரியப்பன் தங்கவேலுவுக்கு பரிசும், பாராட்டுகளும் குவிந்து வருகின்றன.

இந்தப் பராலிம்பிக்கின் ஆரம்பம் குறித்து சற்றுப் பார்ப்போம். 1948 ஆம் ஆண்டு மதிப்பிற்குரிய லுட்விக் கட்மன் (Sir Ludwig Guttmann) அவர்களால் இந்தப் பராலிம்பிக் ஆரம்பிக்கப்பட்டது. இவர் ஒரு நரம்பியல் நிபுணர் ஆவர். இவர் தன்னுடைய நோயாளிகளின் (அதிகமானோர் காயமடைந்த இராணுவ வீரர்கள்) நலன் கருதி ஆரம்பத்தில் பிரித்தானிய அரசின் உதவியுடன் Stoke Mandeville Games என்ற பெயரில் முதல் விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்தார்.

இந்தப் பராலிம்பிக்கிற்கு முன்னதாகவே 1904ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளில் செயற்கைக் கால் கொண்ட ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஜோர்ச் ஐசர் (German American gymnast George Eyser) ஜிம்னாஸ்டிக் போட்டியில் கலந்து கொண்டது இங்கே குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். அதுமட்டுமல்லாது 1948 மற்றும் 1952 ஒலிம்பிக் போட்டிகளில் வலது கையை இழந்த ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த கரோலி டக்கஸ் (Karoly Takacs) குறிபார்த்துத் துப்பாக்கி சுடுதல் போட்டியிலும் டேனி நாட்டைச் சேர்ந்த போலியோவால் பாதிக்கப்பட்ட லிஸ் ஹேர்டல் (Lis Hartel) குதிரைச்சாவாரி போட்டியில் கலந்து கொண்டு வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.



இப்பொழுது தங்கப் பதக்கம் வென்ற மாரியப்பன் தங்கவேல் தாண்டிய உயரம் 1.89 மீட்டர் ஆகும். அவருடன் களமிறங்கிய சக போட்டியாளர் வருண் சிங் பாட்டி தாண்டிய உயரம் 1.86 மீட்டர் ஆகும். இவர் வெண்கலம் வென்றார். அமெரிக்காவை சேர்ந்த சாம் க்ரிவ் வெள்ளி பதக்கம் வென்றுள்ளார்.

தங்கப் பதக்கம் வென்றுள்ள மாரியப்பனுக்கு இரண்டு கோடி ரூபாயை தமிழக அரசு பரிசாக அறிவித்துள்ளது. இந்திய விளையாட்டுத் துறை 75 இலட்ச ரூபாயைப் பரிசாக வழங்கியுள்ளது. பராலிம்பிக் உயரம் தாண்டும் போட்டிகளில் இதுவரை இந்தியாவிலிருந்து எவரும் தங்கம் வென்றதில்லை என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கும் முதலமைச்சர் ஜெயலலிதா, மாரியப்பனுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தங்கம் வென்ற மாரியப்பனுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி, குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, திமுக தலைவர் கருணாநிதி, திமுக பொருளாளர் மு.க.ஸ்டாலின், பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ், அக்கட்சியின் இளைஞர் அணி தலைவர் அன்புமணி, தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன், உள்ளிட்ட தலைவர்களும், திரையுலகப் பிரமுகர்கள், உள்ளிட்ட தலைவர்களும் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

சச்சின் டெண்டுல்கர் தனது ட்விட்டர் பக்கத்தில், பதக்கம் வென்ற மாரியப்பன், வருண் சிங் இருவருக்கும் வாழ்த்துகள்... உங்களது வலிமை, உத்வேகத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது. தொடர்ந்து மிளிருங்கள்... என தனது பாராட்டுகளை தெரிவித்தார். இவரோடு சேர்ந்து இன்னும் பல பிரபலங்கள் (அபினவ் பிந்த்ரா, விஜய் கோயல், சாக்சி மாலிக், விரைன் ரஸ்கினா, அமிதாப் பச்சன், அனுஸ்கா சர்மா, அரவிந்த் கேஜ்ரிவால், வீரேந்திர சேவாக்) தங்கள் ட்விட்டர் பக்கத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

மணல் சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக் பூரி கடற்கரையில் மணல் சிற்பம் செய்து வாழ்த்துத் தெரிவித்துள்ளார். அந்த மணல் சிற்பத்தில் மூவர்ணக் கொடியின் மேலே பதக்கம் இருக்க அந்த பதக்கத்தின் மீது நாயகர்களுக்குப் பாராட்டுக்கள் என்று எழுதப்பட்டுள்ளது. மை ஸ்டாம்ப் என்ற திட்டத்தின் கீழ் சேலம் தபால் துறை சார்பில் அஞ்சல் தலை வெளியிடப்பட்டு சிறப்பிக்கப்பட்டது

21 வயதாகும் மாரியப்பன், சேலத்தில் உள்ள தனியார் கல்லூரி ஒன்றில் பி.பி.ஏ. படித்து வருகிறார். இவருக்கு ஒரு சகோதரியும் இரண்டு சகோதரர்களும் உள்ளனர். மாரியப்பன் சேலம் மாவட்டம் ஓமலூர் அருகேயுள்ள பெரிய வடகம்பட்டியைச் சேர்ந்தவர். மாரியப்பனின் தந்தையான தங்கவேலு, செங்கல் சூளையில் பணியாற்றி வருகிறார். தனது ஐந்தாவது அகவையில் பள்ளி செல்கையில் ஏற்பட்ட விபத்தில் பேருந்து வலது காலில் ஏறி முழங்காலுக்குக் கீழ் காலை இழந்தார். காய்கனி விற்று வாழ்க்கை நடத்தும் அவரது அன்னை அவரது மருத்துவச் செலவிற்காக ரூ.3 இலட்சம் கடன் பெற்று அதனைத் திருப்புவதற்கு அல்லற்பட்டு வந்தார்.

தனது காலை இழந்த நிலையிலும் மாரியப்பனுக்கு விளையாட்டுக்களில் ஆர்வம் இருந்தது. இவரது பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர் இராஜேந்திரன் பரிந்துரைப்படி இவர் உயரம் தாண்டுவதில் பயிற்சி எடுத்துக் கொண்டார். தனது 14ஆவது வயதில் நற்தேகம் உடையவர்களும் கலந்துகொண்ட போட்டியில் இரண்டாவதாக வந்தார். 2013 தேசிய மாற்றுத் திறனாளர் போட்டிகளில் கலந்து கொண்ட மாரியப்பனை கண்ட பயிற்றுநர் சத்தியநாராயணா தான் பயிற்சியளிக்க ஏற்றுக் கொண்டார். 2015இல் பெங்களூருவில் அவரது பயிற்சி மையத்தில் இணைந்தார்.

இப்படி ஒரு வறுமையான சூழ்நிலையில் இருந்து வந்த போதிலும் மாரியப்பன் தனக்குக் கிடைத்த நன்கொடைத் தொகையில் இருந்து தான் படித்த அரசுப் பள்ளிக்கு 30 இலட்சம் ரூபாயை நன்கொடையாக வழங்கியுள்ளார். இவர் ஒரு திறமையான விளையாட்டு வீரர் மட்டுமல்லாது, ஒரு சிறந்த மனிதனாயும் இருப்பது தமிழர் அனைவருக்கும் பெருமையே.

– **நிலா. கோ. துரைரத்தினம்**



# ஒரு இலக்கியக்காரனின் வாழ்பனுபவங்கள் 7

**1968** செப்டெம்பரில் எனக்கு எழுது வினைஞர் நியமனம் கிடைத்தது. முதலில் கொழும்பிலும், பின்னர் யாழ்ப்பாணத்திலும், ஏறக்குறைய ஒன்றரை வருட வேலை நிறுத்தத்திற்குப் பிறகு கல்முனையிலும் பணிபுரிந்தேன். 1984 மார்ச் மாத மத்தியில் ஆசிரியர் நியமனம் கிடைத்தது. கொழும்பில் 1 மாத சேவை முன் பயிற்சியின் பின் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் மே மாத மத்தியில் கடமையாற்றினேன். தொடர்ந்து ஏறத்தாழ 22 வருட ஆசிரிய சேவையின் பின் 2006 ஓகஸ்ட் மாதம் ஓய்வு பெற்றேன். ஆசிரிய சேவையில் ஏறத்தாள 38 வருடங்கள் பணியிலிருந்திருக்கின்றேன்.

ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்ற போது எங்கள் பாடசாலையில் அதிபர் செ.சேதுராசா தலைமையில் ஒரு பிரிவுபசார விழா நடைபெற்றது. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், ஊழியர்கள் எல்லோரும் மண்டபத்திற்குள் வந்து விழாவில் பங்கு கொண்டார்கள். ஆசிரியர்கள் சிலரும் மாணவர்கள் பலரும் மாலைகள் அணிவித்து அன்பளிப்பு வழங்கி என்னைக் கௌரவித்தார்கள். குறிப்பிட்ட சில மாணவர்களும், ஆசிரியர்களும் என் சேவை நலன்களை நினைவுகூர்ந்து பேசி என்னைப் பெருமைப்படுத்தினார்கள். அத்துடன் ஒரு தனியார் வாகனத்தில் குறிப்பிட்ட சில ஆசிரியர்கள் என்னை வீடுவரை அழைத்து வந்து எங்கள் வீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறிய தேநீர் விருந்திலும் பங்குபற்றி என்னை வாழ்த்திச் சென்றார்கள்.

இதைப் போன்ற ஒரு கௌரவத்தை எனது துணைவியாரின் பாடசாலையான உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியர்களும் எனக்கு வழங்கினார்கள். எனது 60 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடுவதென எனது துணைவியார் தன் பாடசாலை சக ஆசிரியர்களுக்கும் அறிவித்திருந்தார். பிறந்தநாள் விழாவை மாலை 5 மணியளவில் கொண்டாடுவதென தீர்மானித்திருந்தோம். ஆனால் மனைவியாரின் பாடசாலை ஆசிரியர்கள் 2.30 மணியளவில் ஒரு பெரிய பஸ்ஸில் எங்கள் வீடு வந்து சேர்ந்துவிட்டார்கள். உண்மையில் நாங்கள் அந்நேரம் தயார் நிலையில் இருக்கவில்லை. என்றாலும் வீடுவந்தவர்களை வரவேற்று எங்களால் இயன்றளவிற்கு உபசரித்தோம். அவர்கள் ஒவ்வொருவரும் தனிப்பட்ட ரீதியில் அன்பளிப்பு வழங்கினார்கள். சங்கீத, நடன ஆசிரியர்கள் தங்கள் இனிய குரலால் பாடல்களைப் பாடி எங்களை மகிழ்வித்தனர். அதிபர் திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி ஒரு சிறிய உரையாற்றி எங்களை வாழ்த்தினார்.



**– குப்பிழான் ஐ.சண்முகன்**

இவ்வாறு இரு பாடசாலை சமூகத்தினராலும் நான் கௌரவிக்கப்பட்ட போதும், கிராம மட்டத்தில் இவ்வாறான ஒரு கௌரவிப்பு இடம்பெறவில்லை என்ற ஆதங்கம் என் துணைவியார் மனதில் இருந்தது. கிராமத்தில் பல நிகழ்வுகளில் பங்கு கொண்டும், கிராம மக்கள் பலருக்கு ஆலோசனைகள், வழிகாட்டல்கள் வழங்கியிருந்த போதிலும் அதற்கான கவனிப்போ, பாராட்டோ இடம்பெறவில்லை என என் துணைவி நினைத்தார்.

இக்காலங்களில் எங்கள் அயலில் உள்ள கருப்பையடி மனோன்மணி அம்மன் ஆலய கும்பாபிஷேகத்திற்கான ஒழுங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஒரு முன்னிரவுப் பொழுதில் ஊரடங்கு நேரத்தில் எண்ணெய்க் காப்பு சாத்துவதற்காக அலயத்திற்குச் சென்றிருந்தோம். எண்ணெய்க் காப்பு சாத்தி வீடுதிரும்பலாம் என எத்தனித்த நேரத்தில் அங்கிருந்த ஆலய நிர்வாக சபை முக்கியஸ்தர் ஒருவர் என்னிடம் ஒரு வேண்டுகோளை முன்வைத்தார். கும்பாபிஷேக நிகழ்வுகள் நிறைவேறிய பின் கிரியா குருவான திரு.சிவகுமார் ஐயா அவர்களை கௌரவிக்க வேண்டும் என்றும், அதற்காக அவரைப்பற்றி ஒரு வாழ்த்துப்பா எழுதித்தரும்படி என்னிடம் கேட்டார். ஐயா பற்றிய விபரங்கள் ஒன்றும் எனக்குத் தெரியாதபடியால் அது பற்றி அவரை விசாரித்தேன். அப்போது சிவகுமார் ஐயாவும் உடனிருந்தார். அவர் இந்தியாவில் குருத்துவப் பயிற்சி பெற்றவர் என்றும், பல கோயில்களில் கும்பாபிஷேகக் கிரிகைகள் நடத்தியவர் என்றும் சொன்னார்கள். இவை எல்லாவற்றையும் இணைத்து வாழ்த்துப்பா எழுதி அடுத்தநாள் அவர்களிடம் கையளித்தேன்.

இந்நிலையில் ஆலய நிர்வாகத்திலிருந்த இன்னொரு முக்கியஸ்தகர் என்னிடம் வந்தார். கோவிலில் நித்திய பூசகரான கந்தையா குருக்கள் அவரது 12 ஆவது வயதிலிருந்து 5060 வருடங்களாக இந்தக் கோயிலில் பூசகராகப் பணிபுரிகின்றார் என்றும், அவரையும் இச் சந்தர்ப்பத்தில் கௌரவிக்க வேண்டும் எனவும் சொன்னார். எனவே அவருக்காகவும் ஒரு வாழ்த்துப்பா எழுதித் தரும்படி என்னிடம் கேட்டார். அவரை ஓரளவுக்கு நான் நன்கறிந்த படியால் அவரைப் பற்றி நான் ஒரு அழகான கவிதை எழுதினேன். அதில் எந்த மழையோ, வெயிலோ, புயற்காற்றோ, எதுவாக இருந்தாலும் அவர் மதில் மேலால் பூப்பறித்து பூசை செய்வார் என்று எழுதிய நியாபகம்.

கும்பாபிஷேக கிரியைகள் எல்லாம் நிறைவுற்ற பின் சிவகுமார் ஐயாவிற்கும் கந்தையா குருக்களுக்குமான பாராட்டு நிகழ்வு இடம்பெறுவதாக இருந்தது. பொன்னாடை போர்த்தி கவிதை வாசித்து கையுறை வழங்கி கௌரவிப்பதாக ஏற்பாடு செய்திருந்தார்கள். குருமார்கள் சிலர், பிறர் பொன்னாடை போர்த்துவதை விரும்புவதில்லை. எனவே குருமார்கள் பரஸ்பரம் பொன்னாடையை போர்த்தலாம் என எமக்குள் தீர்மானித்தோம்.

இந்நிலையில் வாழ்த்துப்பாவில் பொருள் சிதையாமலும், உயிர்ப்புடனும் வாசித்து கையளிப்பதற்காக நான் தயார் நிலையில் இருந்தேன். அப்போது தலைவரும் பொன்னாடை போர்த்தும் சடங்கை ஆரம்பித்தார். அவர் என்ன கூறினாரோ தெரியாது செயலாளர் ஒரு பொன்னாடையை எடுத்து வந்து எனக்குப் போர்த்திக் கௌரவித்தார். நான் இதனைச் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. இறை சித்தத்தை யாரறிவார். கருப்பையடி மனோன்மணி அம்மாள் தான் ஊர் மக்கள் சார்பில் எனக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவம் செய்துள்ளார் எனத்தான் நினைத்ததாக என்று துணைவி பின்னர் எனக்குச் சொன்னார். அவரது ஆதங்கம் இவ்வாறு நிறைவேறி விட்டதென நான் நினைத்தேன்.

(தொடரும்)



பச்சை குத்திக் கொண்ட பின் தன் உதவியாளர்களுடன் எம்.ஜி.ஆர். எடுத்துக் கொண்ட புகைப்படம்.

# திரையுலகில் முடிசூடா மன்னர்!

**எம்.ஜி.ஆர்.** எப்போதுமே எடுத்தேன், கவிழ்த்தேன் என்று செயல்பட்டவர் அல்ல. திரையுலகில் முடிசூடா மன்னராக இருந்தபோதும் சரி; அரசியலில் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்தபோதும் சரி, அவரை யாரும் கேள்வி கேட்க முடியாது என்ற நிலை இருந்தபோதிலும் எதிர் கருத்துக்களுக்கும் மதிப்பளித்தவர் அவர். அதைவிட முக்கியம், தனது கருத்தை செயல்படுத்துவதில் தானே முதலில் நிற்பார்.

திமுகவில் இருந்து எம்.ஜி.ஆர் நீக்கப்பட்ட பிறகு, அதிமுக கொடியிலேயே தனது தலைவரான அண்ணாவின் உருவத்தை பொறித்தார். 1976ம் ஆண்டு கட்சியினருக்கு முக்கிய அறிவிப்பு ஒன்றை எம்.ஜி.ஆர் வெளியிட்டார். அதிமுகவின் 'தென்னகம்' நாளிதழில் அந்த அறிவிப்பு வெளியானது. 'எனது ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்கள் அண்ணா உருவம் பொறித்த நமது கட்சியின் கொடியை பச்சை குத்திக்கொள்ள வேண்டும்' என்பதுதான் அந்த அறிவிப்பு. 'பச்சை குத்திக் கொள்ள வேண்டும்' என்று கட்சியினருக்கு எம்.ஜி.ஆர் கூறியிருந்தாரே தவிர, அது கட்டாயம் என்று அதில் சொல்லவில்லை.

"ஒருவரை ஒருவர் முன்பின் தெரியா விட்டாலும், கட்சிக்கொடியை பச்சை குத்திக் கொள்வதன் மூலம் அதைப் பார்த்ததும் 'இவர் நம்ம ஆள்' என்று அடையாளம் கண்டுகொண்டு கட்சியினரிடையே ஒற்றுமை மனப்பான்மை ஏற்படும், ஒருங்கிணைந்து செயல்பட உதவும்" என்று எம்.ஜி.ஆர் கூறினார். இதை ஏற்று லட்சக்கணக்கான தொண்டர்கள் கட்சிக் கொடியை பச்சை குத்திக் கொண்டனர்.

எம்.ஜி.ஆரின் இந்த அறிவிப்புக்கு கட்சி யிலேயே எதிர்ப்பும் எழுந்தது. படத் தயாரிப் பாளரான கோவை செழியன், விருதுநகர் சீனிவாசன் போன்றவர்கள் பகிரங்கமாக எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில், "கட்சியினர் பச்சை குத்திக் கொள்ள வேண்டும் என்பது எனது விருப்பம். இதை ஏற்பவர்கள் செய்யலாம். பச்சை குத்திக் கொள்ளாதவர்கள் அண்ணாவின் கொள்கையை விரும்பாதவர்கள் என்றோ, கட்சியில் இருக்க தகுதியில்லாதவர்கள் என்றோ கூற முடியாது" என்று எம்.ஜி.ஆர் விளக்கம் அளித்தார்.

இப்படி, மாற்றுக் கருத்துக்களுக்கும் ஜனநாயகரீதியில் எம்.ஜி.ஆர் மதிப்பு அளித் தார் என்பது மட்டுமல்ல; கட்சியையும் தன்னையும் கடுமையாக விமர்சித்ததால் நீக்கப்பட்ட கோவை செழியன் போன்ற வர்கள் வருத்தம் தெரிவித்ததையடுத்து, அவர்களை மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொண்டார். தனது வழக்கமான இயல்புப்படி, தன்னை விமர்சித்தவர்களுக்கும் பின்னர் கட்சியிலும் ஆட்சியிலும் பதவிகள் கொடுத்தார்.

எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம். 'ஊருக்குத்தான் உபதேசம் எனக்கோ, என் குடும்பத்துக்கோ அல்ல' என்று எம்.ஜி.ஆர் எப்போதுமே செயல்பட்டதில்லை. கட்சியினர் பச்சை குத்திக் கொள்ள வேண்டும் என்று அறிக்கை வெளியான உடனே அதை செயல்படுத்திய முதல் நபர் எம்.ஜி.ஆரேதான். சென்னை மாம்பலம் ஆற்காடு தெருவில் உள்ள அலுவலகத்துக்கு (இப்போது அந்த இடம்தான் நினைவு இல்லமாக உள்ளது) பச்சை குத்துபவரை வரவழைத்து தனது கையில் பச்சை குத்திக் கொண்டார் எம்.ஜி.ஆர்.

இதில் சுவாரசியமான ஒரு விஷயம், அதிமுகவில் சேர்ந்து பிறகு கட்சி மாறிய நாஞ்சில் மனோகரன் போன்றவர்கள் கையில் கடைசி வரை பச்சை குத்தப்பட்ட அதிமுக கொடி இருந்தது. இரண்டு நாட்களுக்கு முன் பா.ஜ.கவில் சேர்ந்த நடிகர் விஜயகுமார் கையிலும் அந்தப் பச்சை உள்ளது.

எம்.ஜி.ஆர் நடித்த 'பல்லாண்டு வாழ்க' திரைப்படத்தின் பல காட்சிகள் கர்நாடக மாநிலம் கலசபுரா என்ற இடத்தில் படமாக் கப்பட்டன. அங்கு கதைக்கு ஏற்றபடி பாழடைந்த கட்டிடம் போல 'செட்' போட வேண்டும். இரண்டு, மூன்று முறை அமைத்தும் பலத்த காற்று அடித்து 'செட்' வீணாகிவிட்டது. காற்று சுழன்றடிக்காத இடமாக பார்த்து 'செட்' அமைக்குபடி எம்.ஜி.ஆர் சொல்லிவிட்டார். காற்று அடிக்காத பகுதியாக பார்த்த இடம் ஒரு குன்று பகுதி. அந்த இடத்தில் 'செட்' போட வேண்டும் என்றால் அங்கு பொருட்கள் வந்து சேர ஆகும் செலவும் அதிகமாகும். எம்.ஜி.ஆர் ஆலோசித்தார்.

அந்த ஊர் மக்களின் பிரதான தொழில் கல் உடைப்பது. அங்குள்ள மக்களையும் படப்பிடிப்புக்கு வந்த தொழிலாளர்களையும் கொண்டே சிறு குன்றை உடைக்கச் செய்து, பெருங் கற்களை கொண்டு பலமான காற்றடித்தாலும் அசைக்க முடியாதபடி, பாழடைந்த வீடு போன்ற கட்டிடம் கட்டப்பட்டது. இதில் ஒரே கல்லில் மூன்று மாங்காய் அடித்துவிட்டார் எம்.ஜி.ஆர்!

> கூட்டங்களில் எம்.ஜி.ஆர் பேசும்போது "என் ரத்தத்தின் ரத்தமான உடன்பிறப்புக்களே" என்று கூறி மக்களின் ஆரவாரத்துக் கிடையேதான் பேச்சைத் தொடங்குவார். இது குறித்து அவரிடம் கேட்கப்பட்டது. துப்பாக்கிச் சூடு சம்பவத்தால் சிகிச்சை பெற்றபோது, எம்.ஜி.ஆருக்கு ஏராளமான ரத்தம் செலுத்தப்பட்டது.
>
> "எனக்கு ரத்தம் அளித்தவர்கள் யார் என்று தெரியாது; ரத்தம் கொடுத்தவர்களுக்கே கூட அது எனக்குத்தான் அளிக்கப்பட்டது என்று தெரிந்திருக்காது. யார், யார் ரத்தம் என் உடலில் கலந்திருக்கிறதோ? அதனால்தான் 'ரத்தத்தின் ரத்தமான' என்று குறிப்பிடுகிறேன்" என்று விளக்கம் அளித்தார் எம்.ஜி.ஆர்.

படப்பிடிப்புக்குக் குறைந்த செலவில் 'செட்' தயாரானது. குன்று உடைக்கப்பட்ட தால் குன்றை சுற்றி ஊருக்கு வராமல் நேர்வழியில் செல்ல மக்களுக்கு பாதை கிடைத்தது. முக்கியமாக, கல் உடைப்பதன் மூலம் ஊர் மக்களுக்கு ஒரு மாதத்துக்கு வேலை கிடைத்தது.

அப்போது, நெகிழச் செய்யும் ஒரு சம்பவம். குன்றை உடைக்கச் சொன்ன எம்.ஜி.ஆர், வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வில்லை. பலர் தடுத்தும், "விரைவில் வேலை ஆக வேண்டும், எல்லாரும் சேர்ந்து செய்தால் தான் முடியும்" என்று கூறி மக்களுடன் சேர்ந்து தானும் கல் உடைத்தார். தான் சொன்ன தற்கு, தானே முன்னுதாரணமாக வாழ்ந்தவர் எம்.ஜி.ஆர்.

தொடரும்...

**- ஸ்ரீதர் சுவாமிநாதன்**





# உங்கள் பிள்ளைகளின் வளர்ப்பில் கவனம் இருக்கட்டும்

ஒவ்வொரு குழந்தையும் வளர்க்கப்படும் போதே அது பல விஷயங்களைக் கற்றுக் கொள்கிறது. எனவே பெற்றோர்கள் அந்தக் குழந்தை வளர்ப்பில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். உதாரணமாகக் குழந்தைகள் கற்றுக் கொள்ளும் சில முக்கியமான நடைமுறைகள் குறித்து இங்கே கவனிக்கலாம்.

1. ஒரு குழந்தை உற்சாகத்துடன் ஊக்கமும் தந்து வளர்க்கப்பட்டால் அது தன்னம்பிக்கையைக் கற்றுக் கொள்கிறது.
2. ஒரு குழந்தை குறைகள் சொல்லியும் விமரிசக்கப்பட்டும் வளர்க்கப்பட்டால் அது பிறரைப் பழிப்பதைக் கற்றுக் கொள்கிறது.
3. ஒரு குழந்தை சகிப்புத் தன்மையுடன் வளர்க்கப்பட்டால் அது பொறுமையை கற்றுக் கொள்கிறது.
4. ஒரு குழந்தை கேலி கிண்டல் செய்து வளர்க்கப்பட்டால் அது பிறரை கண்டு வெட்கப்பட்டு விலகி நிற்கக் கற்றுக் கொள்கிறது.
5. ஒருகுழந்தைபாராட்டிவளர்க்கப்பட்டால் அது பிறரை போற்ற வாழ்த்தக் கற்றுக் கொள்கிறது.
6. ஒரு குழந்தை பகை எதிர்ப்பு உணர்வோடு வளர்க்கப்பட்டால் அது எப்பொழுதும் சண்டை போட கற்றுக் கொள்கிறது.
7. ஒருகுழந்தைபாதுகாப்புபயமின்மையோடு வளர்க்கப்பட்டால் அது நம்பிக்கையோடு வாழக் கற்றுக் கொள்கிறது.
8. ஒரு குழந்தை ஸ்திரமற்ற நிலையிலே வளர்க்கப்பட்டால் அது சந்தேகத்தோடு வாழக் கற்றுக் கொள்கிறது.
9. ஒரு குழந்தை மரியாதை மதிப்பு உணர்வோடு வளர்க்கப்பட்டால் அது தன்னை மதித்து விரும்பி வாழக் கற்றுக் கொள்கிறது.
10. ஒரு குழந்தை பழிகள் சொல்லியே பழித்து வளர்க்கப்பட்டால் அது குற்ற உணர்வோடு வாழக் கற்றுக் கொள்கிறது.
11. ஒரு குழந்தை நடுநிலையோடு வளர்க்கப்பட்டால் அது எப்பொழுதும் நேர்மையாக வாழக் கற்றுக் கொள்கிறது.
12. ஒரு குழந்தை ஏமாற்றத்தோடு வளர்க்கப்பட்டால் அது பொய் சொல்லி வாழக் கற்றுக் கொள்கிறது.
13. ஒரு குழந்தை ஏற்பு உணர்வோடும் நட்பு உணர்வோடும் வளர்க்கப்பட்டால் அது எப்பொழுதும் இவ்வுலகை இவ்வுலக மக்களை அன்புடன் ஏற்றுக் கொள்ளக் கற்றுக் கொள்கிறது.

# மலச்சிக்கல்



இது பெரும்பாலும் ஆண் பெண் குழந்தைகள் வயோதிபர்கள் என்று வேறுபாடு இல்லாமல் எல்லோர் மத்தியிலும் ஏற்படும் பிரச்சினையாகும். இதன் விளைவாக உணவு உட்கொள்ள மனமின்மை வயிற்று குத்து தண்ணீர் தாகம் வயிறு குமட்டுதல் போன்ற அறிகுறிகள் தென்படலாம்;.

ஒரு நாளுக்கு இந்த நோய் வந்தாலே அந்த நாள் முழுதும் சினம் கோபம் வேறு வேலைகளில் நாட்மின்மை என்பன காணப்படும். குழந்தைகள் அழுதபடியே இருப்பார்கள். மிக கஸ்ரப்பட்டு மலம் கழித்தால் குதை வழியில் எரிவு ஏற்பட்டு புண் வந்து தொடர் வேதனையை கொடுக்க கூடும். எனவே பெரும்பாலும் இந்த நோய் ஏற்படாமல் எம்மை நாமே பாதுகாத்துகொள்ள வேண்டும்.

ஏன் மலச்சிக்கள் ஏற்படுகின்றது?

1. நார்த் தன்மையான உணவுகளை சேர்த்து கொள்ளாமையினால்.
2. தேவையான அளவு நீர் அருந்தாமையினால்.
3. உடற் பயிற்சியின்மை
4. உணவு பழக்கவழக்கத்தில் ஒழுங்கின்மை. (குறிப்பிட்ட ஒரு நேரத்தை உணவு உண்பதற்காக கடைப்பிடிக்காமை.)
5. உயிர்ச்சத்து "பீ" நிறைந்த உணவுகளை அதிகம் உட்கொள்ள வேண்டும். அதை உணவில் கவனிக்காவிடத்து.
6. மலம் கழிப்பதை நாளாந்த பழக்கமாக கொள்ளாமல் அடக்குதல் மற்றும் தாமதித்து செல்லுதல்.
7. நீண்ட நேரமாக உடலை ஒரே நிலையில் வைத்திருத்தல்.
8. பெருங் குடலின் தசைகள் பலவீனமாகுதல். துசைகளின் சக்தி குறைவடைதல் எனலாம்.
9. போதுமான நீர் அருந்தாமை.
10. குளிர்மையான உணவுகள்(பழங்கள் பச்சை காய்கறிகள்) உணவில் சேர்க்க தவறுதல்.

இவ்வாறான செயற்பாடுகளினால் மலச்சிக்கல் இலகுவாக ஏற்படக் கூடும். எனவே அதைகவனத்தில்எடுப்பதனூடாக எம்மை நாமே பாதுகாத்து கொள்ள முடியும்.

DEEPAM .news
தீபம்
கனடாப் பதிப்பு
12.10.2016



புதிய அரசியலமைப்பு சட்டம்:

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கூற்றுக்கு சுமந்திரன் (பா.உ.) மறுப்பு!





அண்மையில், சீத்தாவத்த வெஹெரகொட பௌத்த ஆலயத்தில் நடைபெற்ற ஒரு சமய நிகழ்வின்போது உரையாற்றிய பிரதம மந்திரி றனில் விக்ரமசிங்க தெரிவித்த கருத்து ஒன்று தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தனது மறுப்பை வெளியிட்டுள்ளார். புதிதாக வரவுள்ள அரசியலமைப்பு சட்டத்தில் பௌத்த மதம் சம்பந்தமான இடத்தில் எத்தகைய மாற்றங்களும் வரப்போவதில்லை என்றும், பௌத்த மதத்துக்குள்ள முன்னுரிமை அப்படியே இருக்கும் என்றும் அவர் தெரிவிர்த்திருந்த கருத்தையே சுமந்திரன் அவர்கள் மறுத்துக் கருத்து வெளியிட்டுள்ளார்

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, மேற்படி சமய நிகழ்வில் உரையாற்றும்போது, பிரதமர் அவர்கள், 'பாராளுமன்றத்தில் இருக்கும் ஒவ்வொருவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட, புதிய அரசிலமைப்புச் சட்டத்தில்,பௌத்தத்துக்குவழங்கப் பட்டுள்ள முதன்மைஇடத்தைஏற்றுக்கொண்டுள்ளார்கள். அரசியற் கட்சிகள் மட்டுமல்ல, கார்டினல் மல்கம் றஞ்சித், மற்றும் இந்து முஸ்லிம் மதத் தலைவர்கள், ஆகியோரும் பௌத்த மதத்துக்கு இன்றுள்ள இடத்தில் எந்த மாற்றத்தையும் செய்யத் தேவையில்லை என்ற உடன்பாட்டுக்கு வந்துள்ளார்கள். ஆகவே அதற்குள்ள அதே இடம் புதிய அரசியலமைப்புச் சட்டத்திலும் தொடரும். ஆகவே யாரும் இதை ஒரு பிரச்சினையாக எடுக்கக் கூடாது' என்றுதெரிவித்திருந்தார்.'

பிரதமரின் இந்தக் கருத்தை மறுத்து கருத்து தெரிவித்த சுமந்திரன் ",இந்த விடயங்கள் தொடர்பான விடயங்களைப் பேசுவதற்காக ஒரு வழிகாட்டல் குழு ( Steering committee) நியமிக்கப்பட்டுல்ளது. இந்தக் குழுவில் இந்த விடயம் இன்னமும் விவாதிக்கப்படவில்லை. ஆனால் எங்களது நிலைப்பாடு என்னவென்றால், அரசியலமைப்பு ஒரு மதசார்பற்ற அமைப்பாக இருக்க வேண்டும். எந்த ஒரு மதத்துக்கும் விசேட சலுகைகள் இருக்கக் கூடாது. அதேவேளை எல்லா மதங்களுக்கும் சமமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதே" என்று தெரிவித்தார்.

இதேவேளை, அரசியலமைப்பு சட்ட திருத்தத்துக்கான பொதுமக்கள் கருத்துக்களைக் கேட்கவென அமைக்கப்பட்ட லால் விஜேநாயக்க தலைமையிலான Public Representations Committee on Constitutional Reform என்ற குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட் ஆலோசனகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களில் மதம் தொடர்பானவிடயத்தில்முன்வைக்கப்பட்ட கருத்துக்களும்தொகுக்கப் பட்டிருந்தன. லால் விஜேநாயக்க. சமஸ்டி முறையிலான தீர்வு யோசனைகள் எதுவும் தமக்கு வரவில்லை என்று சில நாட்களுக்கு முன் கருத்துத் தெரிவித்திருந்தார். இவரது இந்தக்கருத்து பொய்யானது என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் கடுந்தொனியில் மறுப்பு வெளியிட்டிருந்தார். உண்மையில் தனக்கு சமர்ப்பிக்கப்பட்ட்ட சமஸ்டியோடு சம்பந்தப்பட்ட எந்த முன்மொழிவுகளையும் லால் விஜேநாயக்க கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. ஒற்றை ஆட்சிமுறையிலான அமைப்புக்குள் தீர்வு கண்பது தொடர்பான விடயங்களே ஏற்கப்படும் என்று அவர் முன்னர் தமிழ் மக்கள் பேரவையினர் தமது முன்மொழிவுகளை சமர்ப்பித்த போது தெரிவித்திருந்தார். ஆயினும், தான் பெற்றுக் கொண்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் அவர் வெளியிட்ட அறிக்கையில் கூட மதம் தொடர்பாக ஆறு பரிந்துரைகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அப்படியிருக்க எந்த அடிப்படையில் றணில் விக்ரமசிங்க இப்படி ஒரு கருத்தை வெளியிட்டிருக்க முடியும் என்பது ஆச்சரியம் தான்.

அந்த ஆறு பரிந்துரைகளும் வருமாறு:

1. தற்போதைய அரசியலமைப்பு சட்டத்தின் மதம் சம்பந்தமான 2வது அத்தியாயத்திலுள்ள 9வதுபிரிவை எந்தமாற்றமுமின்றி அப்படியே வைத்திருக்கவேண்டும்

2. அத்தியாயம் 2 இன் தலைப்பு 'பௌத்தம்' என்று இருப்பதற்குப் பதில் 'மதங்கள்' என்று அமைய வேண்டும்.9 ஆவது பிரிவு எந்தமாற்றமுமின்றி அப்படியே இருக்க வேண்டும்

3. தற்போதைய அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு 9 இவ்வாறு மாற்றப்பட வேண்டும்:

" இலங்கைக் குடியரசானது, அனைத்து மதங்களுக்கும் சம அந்தஸ்தைவழங்கும். அரசு பௌத்தத்தையும், பௌத்த சாசனத்தையும் பாதுகார்க்கவும் வளர்க்கவும் செய்யும் அதே வேளை, அனைத்து மதங்களுக்கும், தற்போதைய அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவுகளான 10,14(1) மீ ஆகியவற்றால் வழங்கப் பட்டுள்ள உரிமைகளைஉறுதி செய்யவும் வேண்டும்"

4. இலங்கை ஒரு மதச்சார்பற்ற நாடாக அமையும்.

5. இலங்கை ஒரு மதச்சார்பர்ற நாடாக அமையும் அதே வேளை, மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கான மதங்களின் பங்கை அங்கீகரிப்பதாகவும் அமையவேண்டும்

6. தற்போதைய அரசியலமைப்பு சட்டத்தின் அத்தியாயம் 2 இன் தலைப்பு 'மதங்கள்' என்று அமைய வேண்டும். அதன் பிரிவு இவ்வாறு மாற்றப்பட வேண்டும்: இலங்கைக் குடியரசானது அனைத்து மதங்களுக்கும் சமத்துவமான உரிமைகளை வழங்கும்.

இந்த அறிக்கை கடந்த மே மாதமே அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு விட்டது. பிரதமர் இதை இன்னமும் படிக்கவில்லையா அல்லது, இப்படிச் சொல்வதன் மூலம் எத்தகைய எதிர்ப்புக்கள் கிளம்புகின்றன என்று பார்க்க அவர் இப்படிச் சொன்னாரா என்பதை இனி அவர்தான் தெரிவிக்க வேண்டும்.!